# தமிழ் இலக்கிய வரலாறு

## பல்கலைக்கழக வினா விடைகள்

ஆசிரியர் :

ஜெ. ஸ்ரீசந்திரன், எம். ஏ.

0-5
865
100580

...மா பதிப்பகம்

# தமிழ் இலக்கிய வரலாறு


ஆசிரியர் :

ஜெ. ஸ்ரீசந்திரன் எம். ஏ.

விரிவுரையாளர் :

அ. மா. ஜெயின் கல்லூரி, சென்னை-61



பத்மா பதிப்பகம்

171, சரஸ்வதி தெரு,

மகாலிங்கபுரம், சென்னை–34.

முதற்பதிப்பு : டிசம்பர், 1965.
உரிமை பதிப்பகத்திற்கே.

விலை ரூபாய் இரண்டு

---

சௌந்தரா பிரிண்டர்ஸ், சென்னை-17.

# அறிமுகம்

இலக்கிய வரலாறு என்னும் தலைப்பில் சில நூல்கள் தோன்றி யுள்ளன. ஆயினும் தேர்வுக் கண்ணேட்டத்தோடு எழுதப் படும் நூல் இது ஒன்றே. மாண வர்கள் இந்நூலை ஆழ்ந்து கற்பார் களானல் எந்த விஞவுக்கும் விடையளிக்க இயலும். எடுத்துக் காட்டாக, அடுத்த பக்கத்தில் இருபதாம் நூற்ருண்டு இலக்கி யத்தைப் பற்றிய விஞ ஒன்று கேட்கப்பட்டுள்ளது. அதற் கென்று தனிக்கட்டுரை தேட வேண்டியதில்லை. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, உரை நடை என்னும் பகுதிகளைத் தொகுத்துச் சுருக்கி, அமைத்துக் கொள்ளலாம். அதுபோலவே, "கம்பர் காலத்துக்கு முற்பட்ட தமிழ்க் காவியங்களைப் பற்றி எழுதுக" என்னும் விஞவிற்கு விடையாக, காப்பியங்கள் என் னும் தலைப்பில் வரும் சீவக சிந்தாமணி, வளையாபதி,

குண்டலகேசி, ஐந்து சிறு காப்பியங்கள், பெரிய புராணம் ஆகிய நூல்களைப் பற்றி எழுதுதல் வேண்டும்.

சிறு குறிப்பு வரைக என்னும் வினாவில், பரிமேலழகர், செயங்கொண்டார், வீரமாமுனிவர், திரிகூட ராசப்பக் கவிராயர் முதலிய பல புலவர்களைப் பற்றியோ, நூல்களைப் பற்றியோ கேட்கலாம். அதற்கும் இந்நூற்கண் ஆங்காங்குக் காணப்படும் செய்திகளைக் கொண்டு விடையளிக்கக்கூடும்.

ஆகவே மாணவர்கள் இந்நூலை நன்கு கற்பாராயின் தேர்வில் சிறப்பான வெற்றி யடைவார்கள் என்பது ஒருதலை.

ஆசிரியர்.

# பல்கலைக்கழக வினாக்கள்

## April—1960

(a) "தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலமே தலைசிறந்த காலம்"—இக் கொள்கையை ஆராய்க.

அல்லது

பாண்டியர் மதுரையில் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தார்கள் என்பதற்குச் சான்று தருக.

(b) பரணிப் பாட்டு, பள்ளுப் பாட்டு — இவற்றுள் ஒன்றன் அமைப்பும் நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக.

## Sep—1960

(a) சங்கத்தமிழின் சிறப்பியல்புகளைச் சுருக்கமாக உணர்த்துக.

அல்லது

பிள்ளைத்தமிழ், குறவஞ்சி—இவற்றுள் ஒன்றன் அமைப்பும், நயமும் காட்டி ஒரு கட்டுரை எழுதுக.

(b) மேலைநாட்டு நல்லறிஞர் தமிழ் மொழிக்குச் செய்துள்ள சேவையை மதிப்பிடுக.

## April—1961

(a) சங்க இலக்கியத்தின் தனிச் சிறப்புகளைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

அல்லது

தமிழ் இலக்கியத்தில் உரையாசிரியர்கள் பெற்றுள்ள இடத்தையும் சிறப்பையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(b) கிறித்தவப் புலவர்கள் தமிழிலக்கியத்திற்குச் செய்த தொண்டு.

அல்லது

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடக வளர்ச்சி என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

## Sep—1961

(a) தமிழில் பெருங்காப்பியம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறுக.

அல்லது

சங்க காலத்து நீதி நூல்களின் சிறப்பை எழுதுக.

(b) சிறுகதையின் இலக்கணம் கூறி அது ஒரு சிறந்த இலக்கிய வகையாகும் என்பதை ஆராய்க.

## April—1962

(a) புறநானூறு (அல்லது) பத்துப் பாட்டு பற்றிய இலக்கிய வரலாறு என்ன ?

அல்லது

கம்பர் காலத்துத் தமிழ் இலக்கியம் பற்றி நீவிர் அறிவன யாவை?

(b) பௌத்தர்கள் தமிழ்த்தொண்டு

அல்லது

நாடக நூலாசிரியர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

## Sep—1962

(a) கம்பருக்கு முற்பட்ட தமிழ்க் காவியங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

அல்லது

பக்தி இலக்கியம் வளர்ந்த வரலாறு பற்றி எழுதுக.

(b) முசுலீம் தமிழ்ப் புலவர்கள்

அல்லது

உரைநடை இலக்கிய வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

## April—1963

(a) புறநானூறு அல்லது பதிற்றுப்பத்து வரலாற்று நூலாகவும் விளங்குகிறது என்பதைத் தெளிவு படுத்துக.

அல்லது

இசைத் தமிழின் இலக்கிய வரலாறு யாது?

(b) இருபதாம் நூற்றூண்டு பற்றிய இலக்கிய வரலாற்றை எழுதுக.

## Sep—1963

(a) தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தின் சிறப்பை மதிப்பிடுக.

அல்லது

பதினெண் கீழ்க்கணக்கின் இலக்கிய வரலாறு யாது?

(b) தமிழ் உரைநடையின் வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

## April—1964

(a) சமணர்கள் (அல்லது) ஐரோப்பியர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு பற்றி மதிப்பிடுக.

(b) தேவார திருவாசகம் (அல்லது) நாலாயிரப் பிரபந்தம் பற்றிக் கட்டுரை வரைக.

அல்லது

தமிழில் சிறுகதையும் நாவலும் பற்றிய வரலாற்றை எழுதுக.

## April—1965

(a) பௌத்தர்கள் தமிழ் வளர்ச்சிக்குச் செய்த தொண்டு

அல்லது

வீரமாமுனிவரின் புலமையும் தொண்டும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

அல்லது

ஐம்பெரும் காவியங்கள் பற்றி விளக்கம் தருக.

(b) தற்கால உரைநடை வளர்ச்சி

அல்லது

தமிழில் கதை இலக்கியம் என்பது பற்றி விளக்கி எழுதுக.

# சங்கம்

(April' 60)

தமிழ் நாட்டின் தொன்மையை விளக்கப் புகும் சான்ரேர், இந் நாடே உலகப் படைப்பில் முதன் முதலில் தோன்றியது என்பர். தமிழ்நாட்டின்— மக்களின் தொன்மை ஒரு கால வரையறைக் குட்பட்ட தன்று. தற்போதைய இந்து மாக்கடல் ஒரு காலத்தில் நிலப்பரப்பாயிருந்த தென்றும், அப்பெரு நிலப்பகுதி யில் தென் மதுரை என்னும் தொன்னகர் பாண்டியர்க் குத் தலைநகராயிருந்த தென்றும் வரலாற்று ஆசிரியர் மொழிவர். அப் பழமையும் பெருமையும் மிக்க தென் மதுரையில் காய்சின வழுதி என்னும் பாண் டியன் முதற்சங்கத்தை நிறுவினன். அகத்தியனர் முரஞ்சியூர் முடிநாகராயர் முதலான நூற்றுக்கணக் கான புலவர்கள் இச் சங்கமிருந்து தமிழ் ஆய்ந்தனர். முதுநாரை, முது குருகு, களரியாவிரை, பெரும்பரி பாடல் முதலிய நூல்களை இது தோற்றுவித்தது. கடுங்கோன் என்னும் பாண்டியன் இச் சங்கத்தில் இறுதியில் இருந்தவனுவான்.

இக் கடுங்கோன், தென்மதுரை கடல் கோளால் அழிந்தபின், குமரியாறு பஃறுளியாறு எனும் இரண்டு ஆற்றுக்கும் இடையே கபாடபுரம் என்னும் நகரைத் தோற்றுவித்து, அதனையே தலைநகராகக் கொண்ட போது, மீண்டும் தமிழ்ச்சங்கத்தை அங்கு அமைத்துத் தமிழ் மொழியை வளப்படுத்தினன். இச்சங்கம் இடைச் சங்கம் எனப் போற்றப்பட்டது.

கபாடபுரத்தில் தோன்றிய இடைச் சங்கத்தை வெண்தேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை பல பாண்டிய மன்னர்கள் புரந்தனர். இச் சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், திரையன், வெள்ளூர் காப்பியனார் முதலாகப் பல புலவர்கள் வீற்றிருந்தனர். இப் புலவர்கள் அகத்தியம், தொல்காப்பியம், பூத புராணம், இசை நுணுக்கம் முதலிய பல நூல்களைத் தோற்றுவித்தனர். அப்போது தோன்றிய கடல் கோளால் பஃறுளியாறும் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் குமரியாறும் இடையிலுள்ள நாடுகளும் அழிந் தொழிந்தன.

கடல் கோளால் கபாடபுரம் அழியவும் முடத்திரு மாறன் என்னும் பாண்டியன் தற்போதுள்ள மதுரை யைத் தோற்றுவித்துத் தலைநகராக்கிக் கடைச் சங்கத்தை அமைத்தான். இச் சங்கத்தை அம் முடத்திரு மாறன் முதல் உக்கிரப் பெருவழுதிவரை பல புரவலர் கள் புரந்தனர். நல்லந்துவனார், பெருங்குன்றூர் கிழார், மருதனிள நாகனார், நக்கீரனார் போன்ற பல புலவர்கள் இச் சங்கமிருந்து தமிழ் ஆய்ந்தனர்.

இறையனார் களவியலுரையிலும், தொல்காப்பிய உரையாசிரியர் உரைகளிலும், சில சங்க இலக்கிய

உரைகளிலும் இம் மூன்று சங்கங்களைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

ஆயினும் பண்டை இலக்கியங்களில் 'சங்கம்' என்ற சொல்லே இல்லையென்று கூறி அப்படி ஓர் அமைப்பே இருந்ததில்லை யென்றும் முச்சங்கங்கள் தமிழரின் கற்பனையே என்றும் சிலர் கூறுவர். இக் கூற்றின் தன்மையைக் காண்போம்.

சங்கம் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் இல்லையென்பது உண்மைதான். ஆனால் அப்பொருளை உணர்த்தும் வேறு சொற்கள் இல்லாமல் இல்லை. பிற்கால இலக்கியங்களில் சங்கம் என்ற சொல் பயின்று வருகின்றது. உரையாசிரியர்கள் அனைவரும் சங்கம் என்ற சொல்லை ஆண்டிருக்கின்றனர். மேலும் முச்சங்கங்களைப் பற்றிய வரலாற்றையும் பலவிடங்களில் குறித்துள்ளனர். மணிமேகலைக் காப்பியத்தில் சங்கம் என்ற சொல் வருகிறது. "புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க" என்ற அடியில் சங்கம் என்ற சொல்லைக் காண்க. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் மன்னார் குடியில் வச்சிரநந்தி என்ற சமணச்சான்றோர் தமிழ்ச் சங்கத்தின் தலைவராயிருந்தார் என்பதும் அறியத் தக்கது. சங்கம் என்ற அமைப்பைக் குறிக்கத் தமிழ் இலக்கியங்களில் புணர், கூட்டு, அவை, தொகை, குழு, தமிழ் நிலை என்ற சொற்கள் வழங்கப்பட்டன. ஒரு மொழியில் ஒரு சொல் இல்லாமையினால் அச் சொல் குறிக்கும் பொருளை அம்மக்கள் உணர மாட்டார்கள் என்பது யாங்ஙனம் பொருந்தும்? பண்பாடு என்ற சொல் நம் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் இல்லையென்பதால் தமிழர்க்குப் பண்பாடு கிடையாது என்று கூறமுடியுமா? மேலும் சொற்கள் காலந்தோறும்

தோன்றி மறையும் தன்மைய. சங்ககாலத்தில் வழங்கிய அளவற்ற சொற்கள் இன்றில்லை. காலப் போக்கில் பல மறைந்தன. பல புதியசொற்கள் தோன்று கின்றன. "கடிசொல் இல்லை காலத்துப் படினே"– என்ற தொல்காப்பிய விதிப்படி சொற்கள் காலங்கள் தோறும் மறைதலும் புதிய சொற்கள் தோன்றுதலும் இயல்பே. இதைக் கொண்டு நோக்கும்போது 'சங்கம்' என்ற சொல், வழக்கிலிருந்த சொற்களை எல்லாம் வென்று அவற்றை வழக் கொழியச் செய்துவிட்டது எனக் கருதலாம். ஆகவே சங்கங்கள் உண்மைபற்றிப் பண்டைநூல்கள், பிற்கால நூல்கள் ஆகியவற்றில் சில சான்றுகளைக் காணலாம்.

"செங்கோன் தரைச்செலவு" என்ற தொல்காப்பியத் திற்கும் முற்பட்ட நூலில் "தமிழ்த் தலைமை தலைக் கொண்டான் சக்கரன்" என்ற தொடர் வருகிறது. தமிழ் அவைக்குச் சக்கரன் என்ற புலவர் தலைவராக விருந்தார் என்ற செய்தியை இதனல் உணரலாம். இவ்வாறு தொல்காப்பியத்திற்கு முன்னரே சங்கத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. பனம்பாரனரின் தொல்காப்பியப் பாயிரம் "நிலந்தரு திருவில் பாண் டியன் அவையத்து" என்று சங்கத்தை அவை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது.

தமிழ்நிலை பெற்ற தாங்கரும் மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை

—சிறுபாணாற்றுப்படை

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்

—மதுரைக்காஞ்சி

"இமிழ்குரல் முரச மூன்றுடனாளுந்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே"

—புறம், 58

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை

—புறம். 72

நிலனாவிற் றிநிதருவுஉ நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்த சொற் புதிதுண்ணும் பொழுதன்றோ

—கலி,

மதிமொழி யிடன்மாலை வனைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவி செறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புது மொழி கூட்டுண்ணும் புரிசை சூழ் புனலூர

—கலி. 68

பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றும் தெரிந்த காலை

—அகம்—உரைப்பாயிரம்

தென்தமிழ் நன்நாட்டுத் தீதுதீர் மதுரை

—சிலம்பு

தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்

—மணி,

இவ்வாறு பழைய இலக்கியங்கள் சங்கம் என்ற பொருளை உணர்த்த, புணர், கூட்டு, அவை, குழு முதலிய சொற்களைப் பயன்படுத்தி யிருக்கின்றன. இடைக்கால நூல்களில் சங்கம் என்ற சொல் வருகின்ற சில இடங்களைக் காண்போம்.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக்கிழி தருமிக்கு அருளினான்காண்"

—அப்பர் தேவாரம்

"சங்க முத்தமிழ்"—திருமங்கைஆழ்வார்.

"சங்கத் தமிழ்மாலை முப்பதும்"—ஆண்டாள்.

"தலைச்சங்கப் புலவனார் தம்முன்"—சேக்கிழார்.

"சங்கத் தமிழ் மூன்றும் தா"—ஔவையார்.

"தென்தமிழ் நாட்டகன் பொதியில்
திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற் பீரேல்"—கம்பர்.

இவ்வாறு சங்கம் என்ற சொல்லையே அமைத்துப் புலவர் பாடியதும் கருதத்தக்கது. யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பாடல் ஒன்றில், "வீயாத் தமிழ் உடையான் பல்வேல் தானைப் பாண்டியன்" என குறிப் பிடப்பட்டுள்ளது. தொல்காப்பிய மரபியல் உரையில் பேராசிரியர், "மூன்று வகைச் சங்கத்து நான்கு வரு ணத் தொடுபட்ட சான்றோரும்" என்று முச்சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சின்னமனூர்ச் செப்பேடுகளும், "மகாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று மதுரைச் சங்கத்தைக் குறிப்பிடுகிறது.

வட மொழியில் ஆதி காவியம் என்று கூறப்படும் வால்மீகி இராமாயணமும் சங்கம் இருந்ததைக் குறிப் பிடுகிறது. தாலமி, பிளினி போன்ற மேனுட்டு அறிஞர் களும் தமிழ்ச் சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக் கின்றனர்.

சீதாதேவியைத் தேடுவதற்காக வானரர்களை ஏவிய சுக்கிரீவன் அவர்களை விளித்து, "வானரர்களே! மலையமலைக்கு அப்பால் அலங்கரிக்கப்பட்டதும், திவ்வியமானதும் தகுதியோடும் கூடியதுமாகிய பாண் டியர்கள் கபாடபுரத்தைக் காண்பீர்கள்" எனக் கூறிய தாக வான்மீகி இராமாயணம் குறிப்பிடுகிறது.

பெரிப்புளூஸ் என்னும் வரலாற்று நூலும் சங்கம் பற்றிக் கூறுகிறது. இலங்கை வரலாற்று நூல்களான மகாவம்சம், இராஜாவளி, இராஜரத்னுகிரி போன்ற நூல்களும் சங்கத்தின் உண்மையைத் தெரிவிக் கின்றன.

இதுகாறும் கூறிய காரணங்களைக் கொண்டு தமிழகம் சங்கம் அமைத்துச் சிறப்புறப் பாதுகாத்து வளர்த்தது என்பது தெளிவாகிறது. முந்நாடு, மூவேந் தர், மும்முரசு, முத்தமிழ் எனக் கூறுவது எவ்வாறு உண்மையாகுமோ அதுபோலவே முச்சங்கம் என் பதும் உண்மையாம்.

# எட்டுத்தொகை

(Sep '64)

சங்க இலக்கியப் பாடல்கள் ஒரேகாலத்தைச் சார்ந்தவை அல்ல. அவை வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு புலவர்களால் பல்வேறு இடங்களில் பாடப்பெற்றவையாகும். அவற்றில் மணிபோன்ற எண்ணற்ற பல பாடல்களை இழந்து விட்டோம். எஞ்சியவற்றையாவது காக்கவேண்டும் என்ற முயற்சி சங்க காலத்தில் தோன்றியது. பாடல்களைப் பாதுகாக்க முயன்ற புலவர்கள் அவற்றை ஒரு வரையறைக்குட்படுத்தி அடிநோக்கியும், பொருள் நோக்கியும் தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கப்பெற்ற காலமே சங்ககாலமாகும். மேற் கூறியவாறு தொகுத்து எட்டு நூல்களைச் சேர்த்து எட்டுத்தொகை என்றனர்.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டும் எட்டுத்தொகை நூல்களாம். இவற்றைக் குறிக்கும் பாடல் வருமாறு:

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை.**

இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்தும் அகப்பொருள் கூறுவன. புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறப்பொருள் பற்றிக் கூறுவன. பரிபாடல் அகமும், புறமும் கலந்து நிற்கிறது. இனி இந் நூல்களைப் பற்றிச் சுருங்கக் காண்போம்.

*நற்றிணை:* 175 புலவர்களால் பாடப்பெற்ற 400 அகப்பாடல்களைக் கொண்டது இந்நூல். இதனைத் தொகுத்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் ஆவான். நற்றிணைப் பாடல்கள் 9 அடி முதல் 12 அடி வரையில் அமைந்திருக்கின்றன. தமிழரின் வளமார்ந்த அன்பு வாழ்க்கையை இந்நூற் பாடல்கள் நயம்படக் கூறுகின்றன. இந்நூலுக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை வகுத்துள்ளார். நற்றிணைப் பாடல்கள் உவமை நலம் மிக்கவை. கொல்லரின் செப்புக் குடத்திலிருந்து வரும் தீப் பொறிகள் மின்னலுக்கு உவமை கூறப்பட்டுள்ள அழகு உணரத்தக்கது.

**"கம்மியர் செம்புசொரி பானையின் மின்னி"**

என்ற அடியினை ஓர்க.

உண்மையான செல்வத்தை இந்நூற்பாட்டு ஒன்று விளக்குகிறது.

**"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே"**

சார்ந்திருப்பவர் துன்பத்தைத் துடைப்பதே அக்காலச் சான்றோர் பெருஞ் செல்வமாகக் கருதினர்.

தலைவனைப் பிரிந்த தலைவி தன் ஆற்றாமையைத் தோழியிடம் நெஞ்சம் நெகிழுமாறு கூறுகிறாள். சாதலுக்கு அஞ்சவில்லையாம் தலைவி. இறப்பில் தலைவனை மறக்க நேரிடுமோ என்றே அஞ்சுகின்றாளாம்! இதனை விளக்குகிறது பின்வரும் வரிகள்.

"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்
பிறப்புப் பிரிவ தாகுவ தாயின்
மறக்குவன் கொல்லென் காதலன் எனவே"

என்னே ஆழ்ந்த காதலின் இயல்பு!

செல்வக் குடியில் பிறந்த பெண், தான் புகுந்த இடத்தில் காணும் வறுமையைப் போக்க, தாய் வீட்டை நாடுதல் இல்லை என்னும் சீரிய பண்பைக் கூறுகிறது பின்வரும் அடிகள்.

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தாதை கொழுஞ்சோ றுள்ளாள்"

இதுபோன்ற பகுதிகள் தமிழரின் மேலான வாழ்க்கைத் திறத்தைக் காட்டுகின்றன.

குறுந்தொகை: 'நல்ல' எனும் அடைமொழி இந்நூலின் சிறப்பை அறிவிக்கின்றது. 4 அடிச் சிற்றெல்லையும், 8 அடிப் பேரெல்லையும் கொண்ட நானூறு பாக்களை உடையது இந்நூல். ஆயினும், குறுந்தொகையில் தற்போது 402 பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 9 அடி கொண்ட இரு பாடல்கள் (307, 391) உள்ளன. இந்நூற் பாடல்களை இருநூற்று ஐந்து புலவர்கள் இயற்றியுள்ளனர். குறுந்தொகையைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை; தொகுப்பித்தவர் பூரிக்கோ. முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியரும் பின் 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதியதாகத் தெரிகிறது. ஆனால் அவ்வுரைகள் கிடைக்கவில்லை. தற்போது, நூல் முழுமைக்கும் உ. வே. சாமிநாத ஐயர் எழுதியுள்ள உரை கிடைக்கின்றது.

இந்நூற் பாடல்களைப் பாடிய சில புலவர்களின் இயற்பெயர் தெரியவில்லை. ஆகவே, அப்புலவர்கள் பாடிய பாட்டில் காணும் அழகான தொடராலேயே அவர்கள் பெயர் பெறலாயினர். மீனெறி தூண்டிலார், செம்புலப் பெயல்நீரார், கயமனூர், நெடுவெண்ணிலவினூர், விட்ட குதிரையார், ஓரேருழவனூர் போன்ற பெயர்கள் அவ்வாறு அமைந்தவையே.

இந்நூற் பாக்களால் பழந்தமிழரின் அன்பு வாழ்வு, நகரங்கள், ஊர்கள், மக்களின் பழக்கவழக்கங்கள், மரம், செடி, கொடி, விலங்கு, பறவை முதலிய செய்திகளை உணரலாம்.

குறுந்தொகையில் வரும் உவமைகள் சிறந்தவை. காதல் உள்ளம் தகுந்த உவமையால் போற்றப்படுகிறது.

**''செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே''**

குப்பை மேடுகளில் திரியும் கோழிகளைச் சண்டைக்கு விடுவாரிலர்; விலக்குவாருமிலர். அவை இறுதிவரை சண்டையிட்டு இறந்தொழியும். தன் காதல் நிலையும் அதுபோன்றதே என்கின்றுள் ஒரு தலைவி.

**'குப்பைக் கோழித் தனிப்போர் போல**
**விளிவாங்கு விளியின் அல்லது**
**களைவோர் இலையான் உற்ற நோய்க்கே''**

ஆழ்ந்த அன்பின் திறத்தை அஃறிணைப் பொருளின் மீது வைத்துப் போற்றுகிறது ஒரு பாட்டு. ஆண்குரங்கு இறந்ததைக் கண்டு ஆற்றாத பெண் குரங்கு, தன் இளைய குட்டியைச் சுற்றத்தாரிடம் பாது

காவலாக ஒப்படைத்துவிட்டு மலைச் சாரலில் மாய்ந்து இறந்துவிடுகிறது.

**"கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்**
**கைம்மை யுய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி**
**ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்"**

அஃறிணைப் பொருளின் காதல் தன்மையே இதுவானால் மக்கள் காதலின் மாண்பு எவ்வாறிருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் எனக் கூறுவது போல இப்பாடற் கருத்து அமைந்த திறம் வியக்கற்பாலது.

அளவான கற்பனையும் ஆழ்ந்த உணர்வும் கொண்ட இந்நூற் பாடல்கள், அக்கால மக்களின் வாழ்வியலைத் தெரிவிக்கின்றன. தொழில் ஆற்றும் திறமுடையவர் ஆடவர் என்பதனை, "வினையே ஆடவர்க்குயிரே" என்னும் தொடர் புலப்படுத்தும். பண்டைத் தமிழ் மகன் பெற்றோர் தேடித்தந்த செல்வத்தை அழிப்பதில்லை. இதனை, "உள்ளது சிதைப்போர் உளர் எனப்படாஅர்" என்பதனால் அறியலாம். இவ்வாறு பற்பல அரிய செய்திகள் இந்நூலில் காணப் படுகின்றன.

**ஐங்குறுநூறு:** திணை ஒன்றுக்கு நூறு பாடல்கள் வீதம் ஐந்திணைகளுக்கும் 500 பாடல்களை யுடையது இந் நூல். இவ்வைந்திணைகளுள் மருதத்தை ஓரம்போகியாரும், நெய்தலை அம்மூவனாரும், குறிஞ்சியைக் கபிலரும், பாலையை ஓதலாந்தையாரும், முல்லையைப் பேயனாரும் பாடியுள்ளனர். இந்நூற் பாடல்கள் 3 அடி முதல் 6 அடிவரை அமைந்துள்ளன. இதனைத் தொகுத் தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்பவர்.

தன் மகள் தலைவனுடன் சென்றதை அறிந்த தாய், அவளைத் தேடிவருமாறு பலரையும் போக்கினாள். ஆனால் அவர்கள் வறிதே திரும்பினர். தன் அருமை மகளை விட்டு ஒரு நாளும் பிரியாத தாய்க்கு மகளின் பிரிவு எல்லையற்ற துன்பத்தை அளித்தது. குழந்தைப் பருவத்திலிருந்து தன் சிறுமி விளையாடிய பாவை, அவள் வளர்த்த கிளி, பூவைப்புள் ஆகியவற்றை யெல்லாம் கண்டு கண்டு மனம் குழைந்து ஏங்கும் தாய்

"இதுவென் பாவை பாவை இதுவென்
பூவைக்கு இனியசொற் பூவை எனது
அலமரு நோக்கின் நலம்வரும் சுடர்நுதல்
பைங்கிளி எடுத்த பைங்கிளி என்றிவை
காண்டொறும் காண்டொறும் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணோளே"

எனப் புலம்பி அலமருகின்றாள்.

இது போன்ற அன்பின் நெகிழ்ச்சியைக் கூறும் பல பாடல்களை இந்நூலுள் கண்டு இன்புறலாம்.

**கலித்தொகை :** 150 கலிப்பாக்களைக் கொண்ட அகப்பொருள் பற்றிய நூல் இது. குறிஞ்சித்திணையைக் கபிலரும், முல்லைத் திணையைச் சோழன் நல்லுருத் திரனும், மருதத்திணையை மதுரை மருதனிளநாகனாரும், நெய்தல் திணையை நல்லந்துவனாரும், பாலைத்திணை யைப் பெருங்கடுங்கோனும் பாடியுள்ளனர்.

காதலின் உறுதியையும், நிலையான உண்மைகளை யும் இந்நூல் நெஞ்சில் பதியுமாறு எடுத்துரைக் கின்றது.

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவியின் பெற் றோர் அவளை அயல் மணம் பேசலுற்றனர். இதை

அறிந்த தலைவி தலைவனுடன் உடன் போய்விட்டாள். செவிலித்தாய் அவளை எங்கும் தேடி அலைந்து சோர்ந்தாள். வழியில் வந்த முக்கோல் அந்தணரிடம் தன்னிலை பற்றி இரங்கிக் கூறினுள் செவிலி. அவர்கள், 'ஒரு வீட்டில் வளரும் பெண் வேருெரு வீட்டில் சென்று வாழ்வதுதானே உலக இயல்பு' என்பதனை விளக்க நல்ல எடுத்துக்காட்டுகளைத் தருகின்றனர்.

"மலையிலே பிறக்கிறது சந்தனம், அச் சந்தனத்தால் மலைக்கு என்ன பயன்? அது பூசுபவர்க்கு அல்லவா பயனைத் தருகிறது. கடலிலே பிறக்கிறது முத்து. அம் முத்தால் அக்கடலுக்கு என்ன பயன்? அது அணிபவர்க்கு அல்லவா அழகு தருகிறது. யாழிலே பிறக்கிறது இசை. அவ் விசையில் யாழுக்கு என்ன பயன்? அது கேட்பவர்க்கல்லவா இன்பத்தைத் தருகிறது" என்ற பல உண்மைகளைக் காட்டி, தலைவியும் பருவம் அணைந்ததும் பிறந்த வீட்டைப் பிரிந்து வேருேர் இடத்தில் வாழ்க்கைப் படுவாள் என்பதை அறிவுறுத்துகின்றனர். இவ் வரிய கருத்துக்கள் அமைந்த தாழிசைகள் வருமாறு.

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே"

பண்பு, அன்பு, அறிவு ஆகியவற்றைப்பற்றி இந்நூல்,

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்"
"அன்பெனப் படுவது தன்கிளை செறா அமை"
"அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்."

என மாண்புற விளக்குகிறது.

அகநானூறு: 13 அடி முதல் 31 அடி வரை அமைந்த 400 அகப்பாடல்களின் தொகுப்பாகும் இந்நூல். இதனைக் களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என மூன்று பிரிவாகப் பாகுபாடு செய்துள்ளனர். வேறு நூல்களில் காணமுடியாத ஒரு வரையறையை இந்நூலுள் காணலாம். ஒற்றைப் படை எண்களையுடைய பாடல்களெல்லாம் பாலைத் திணையைக் குறித்துப் பாடுகின்றன. இரண்டும் எட்டும் குறிஞ்சி; நான்காம் எண் முல்லை; ஆறுவது எண் மருதம்; பத்துப் பத்தான எண்கள் நெய்தல் என்ற முறையில் இந்நூற் பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

இந்நூலை நெடுந்தொகை என்ற பெயராலும் அழைப்பர். அகப்பொருளைக் கவினுற உணர்த்தும் பான்மையால் நூலே 'அகம்' என்ற பெயரைத் தாங்கி நிற்கிறது.

அரிய வரலாற்றுக் குறிப்புக்களையும் இந்நூல் கொண்டிலங்குகிறது. சான்றாக ஒன்று காண்போம். கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டர் இந்தியாவின்மீது படையெடுத்தபோது மகத நாட்டை நந்தர் ஆண்டனர். அவர்களின் தலைநகரம் பாடலிபுத்திரமாகும். படையெடுப்பைக் கண்டு அஞ்சிய நந்தர் தம் பொன்னையும் மணியையும் பாதுகாக்க முற்பட்டனர். வலிய பெட்டியொன்றைச் செய்து, அதில் ஆபரணங்களை வைத்துப் பூட்டி, பாடலிபுத்திரத்தின் அருகே ஓடும் கங்கை

யாற்றின் நீர்ப் போக்கை இரண்டாகப் பிரித்து, ஆற்றின் அடியில் அறையொன்று அமைத்து அதில் அப்பேழையை வைத்து நீர் புகாதவாறு மூடியபின் ஆற்றுநீர் முன்போலவே செல்லுமாறு விடுத்தனர் என்பது வரலாறு. இச்செய்தியை அக்நானூற்றுப் பாடலின் ஒரு பகுதி குறிப்பாகக் கூறுகிறது. பொருள் தேடச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்பி வரவில்லை. பிரிவாற்றுமையினல் வருந்தும் தலைவி, மேற்குறித்தவாறு பாதுகாத்த செல்வத்தையே தலைவன் நாடிச் சென்றுள்ளானே, அதனல் தான் குறித்த காலத்தில் வரமுடியவில்லையோ எனத் தோழியிடம் கூறுகிறுள்:

''பல்புகழ் நிறைத்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ?''

என இவ்வாறு இந்நூல், வடபுல வரலாற்றுக் குறிப்பையும் உணர்த்துகிறது. மேலும் பண்டைத் தமிழரின் திருமண முறைகளைச் செவ்விதின் விளக்கும் பாடலும் இதில் உள்ளது.

புறநானூறு: நானூறு புறப்பாடல்களின் தொகுப்பாகும் இந்நூல். இதனைத் தொகுத்தவர் யார் என அறிய முடியவில்லை. பண்டைத் தமிழகத்தைப் பற்றி அறிய விரும்புவார்க்கு இந்நூலே மிக்க உதவி செய்கிறது. பழந்தமிழ் மன்னரின் வீரம், கொடை ஆகியவற்றையும் மக்களின்வாழ்வியலையும் இந்நூல் விளக்கமாகக் கூறுகிறது. தமிழ் நாட்டை முடியுடை வேந்தரும் குறு நில மன்னரும் சிறப்புற ஆண்டனர். குறுநில மன்னர் முடியுடை வேந்தர் ஒருவர்க்குக் கீழ் இருந்து அரசு

புரிந்தனர். புலனழுக்கற்ற புலவர் அவ்வப்போது அரசர்க்கு அறிவுரை கூறினர். நாடாண்ட மன்னரும் அவ்வறிவுரைகளைச் செவிமடுத்துக் கேட்டு அதன்படி செங்கோலோச்சினர். "வாழச் செய்த நல்வினை யல்லது ஆழுங்காலத்துத் துணை பிறிது இல்லை" என்பதனையும் "இவண் இசை யுடையோர்க்கு அவணது உயர் நிலை உலகத்து உறையுள் இன்மை" என்பதனையும் உணர்ந்து அறவாழ்வு வாழ்ந்து, நில்லா உலகத்துத் தம் பெயரை நிலைபெறச் செய்த சான்றோர் பலரைப் புறநானூற்றில் காணலாம்.

அன்றைய தமிழகத்தில் குறவர், இடையர், உழவர், பரதவர், பாணர், விறலியர், கூத்தர், குயவர், வண்ணர் எனப் பல பிரிவினர் வாழ்ந்தனர் என்பதனை யும் இந்நூலால் உணரலாம். இவர்கள் தாம் இருந்த இடத்தாலும் செய்த தொழிலாலும் இவ்வாறு பிரித் தறியப்பட்டனர்.

திருமால், பரமசிவன், முருகன், பலராமன், இந்தி ரன் முதலிய தெய்வங்களைத் தமிழர் வழிபட்ட செய்தியையும் இந்நூல் தெரிவிக்கின்றது.

பண்டைக் காலத்தில் கவிபாடும் திறம் பெற்ற பெண்மணிகள் பலர் வாழ்ந்தனர். அவர்களுள் ஔவையார், நப்பசலையார், நக்கண்ணையார், வெண் ணிக் குயத்தியார், பொன்முடியார், பூதப்பாண்டியன் மனைவியார், ஒக்கூர் மாசாத்தியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். புறநானூற்றில் அதிகமான பாடல்களைப் பாடிய பெருமை ஔவையாருக்கு உண்டு. புவியாளும் வேந்தரும் புலமை நலம் பெற்றுத் திகழ்ந்த பான்மையையும் இந்நூல் அறிவிக்கின்றது.

வெறும் பாடல்களின் தொகுப்பு என்ற அளவில் இல்லாமல் தமிழரின் வரலாற்று நூல் என்று கூறத் தக்க பெருமை சான்ற இந்நூல், உலகம் உணர்ந்து ஏற்றுக் கொள்ளத்தக்க உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்ற பேருண்மையைத் தமிழன் என்றோ உணர்ந்த செய்தியை உலகுக்கு உணர்த்துகிறது ஒரு புறப்பாட்டு. குழந்தையைக் காப்பதுபோல் மன்னன் நாட்டை அன்புடன் காக்க வேண்டும் என வற்புறுத்துகிறது ஒரு பாடல்.

மன்னன் நெறியறிந்து மக்களிடம் வரி வாங்குதல் வேண்டும் என அறிவுறுத்துகிறது ஒரு செய்யுள்.

பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமையைச் செய்யாதீர் எனக் கூறி, அதுவே நல்லறம் எனப் போற்றுகிறது ஒரு புறப்பாட்டு.

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே"

என்னும் இவ்வடிகள் எல்லாரும் உவந்து ஏற்கும் நெறியைக் கூறுகின்றன.

இவ்வாறு புறநானூறு பண்டைத் தமிழரின் கருத்துக் கருவூலமாகத் திகழ்கின்றது.

**பதிற்றுப்பத்து:** புறப்பொருள் பற்றிய இந்நூல் சேர மன்னர் பதின்மரைப் பாராட்டுகிறது. ஒவ்வொரு மன்னர்க்கும் பத்துப் பாடல் வீதம் பத்து மன்னர்க்

கும் நூறு பாடல்களைக் கொண்ட இந்நூல் முதல் பத்தையும் இறுதிப் பத்தையும் இழந்து விட்டது. இமயவரம்ப நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் இரண்டாம் பத்திலும், பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் மூன்றாம் பத்திலும், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக்காப்பியாற்றுக் காப்பியனார் நான்காம் பத்திலும், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் ஐந்தாம் பத்திலும், ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப் பாடினியார் ஆறாம் பத்திலும், செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் ஏழாம் பத்திலும், தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறையை அரிசில் கிழார் எட்டாம் பத்திலும், இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் ஒன்பதாம் பத்திலும் பாடியுள்ளனர்.

சேரமன்னர்களின் சிறப்பியல்புகளை இந்நூல் போல் வேறு எந்நூலும் கூறவில்லை.

**பரிபாடல்:** அகமும் புறமும் பற்றிய பாடல்களைக் கொண்டது இந்நூல். பரிபாடல் ஒருவகை இசைப் பாட்டு என்பதனை, "பரிபாடல் என்பது பரிந்து வருவது. அது கலியுறுப்புப் போலல்லாது நான்கு பாவானும் வந்து பல அடியும் வருமாறு நிற்கும் என்று உணர்க" என்று கூறுவர் நச்சினார்க்கினியர். இந்நூலுள் இருந்த பாடல்கள் எழுபது என்பர். ஆனால் இப்போது கிடைப்பவை 22 பாடல்களே. திருமாலை ஆறு பாடல்களும், முருகனை எட்டுப்பாடல்களும், வையை யாற்றை எட்டுப் பாடல்களும் சிறப்பிக்கின்றன.

ஆடல் அறியா அரிவைபோல வையை யாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அவ்வாற்றில்

நீராட விழையும் மக்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு விரைந்து செல்லக் கருதினர். இதனுல் பல் வகைக் குழப்பமுற்றனர். மகளிர்க்குரிய கோதையை மைந்தரும், மைந்தர்க்குரிய தார்களை மகளிரும் அணிந்தவராய் ஆற்றை அடைந்தனர். இவ்வாறு வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி மல்லல் மதுரையாரைக் கவர்ந்த செய்தியைப் பரிபாடல் உணர்த்தும்.

அக்கால மக்கள் பொன்னும் பொருளும் போகமும் வேண்டாது, இறைவனிடம் அன்பும் அருளும் அறனும் வேண்டும் விழைவினை யுடையவராய் வாழ்ந்த சீரிய தன்மையைப் பரிபாடல் விளக்குகிறது.

# பத்துப்பாட்டு

( April '62 Sep '64 )

சங்க இலக்கியங்களை நம்மனோர் பத்துப்பாட்டு என்றும் எட்டுத்தொகை என்றும் பாகுபாடு செய்தனர். பத்துப் பாட்டாவது திருமுருகாற்றுப்படை, பொருந ராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற் றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடு கடாம் என்பவையாகும். இப்பத்துப் பாடலையும் குறிக் கும் வெண்பா வருமாறு:

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக்காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

இவ்வெண்பாவில் முதல் நான்கு பாடல்களும், இறுதியாக வரும் மலைபடுகடாம் ஆகிய ஐந்து நூல் களும் ஆற்றுப்படை நூல்களாம். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்றும் அகப்பாடல்களாகும். மதுரைக் காஞ்சி புறப்பாட்டா கும். நெடுநல்வாடை அகமும் புறமும் கூறுவது என்று சிலரும், அகப்பாட்டு என்று வேறு சிலரும் மொழிவர்.

திருமுருகாற்றுப்படை: இப்பாடலை இயற்றியவர் நக்கீரர். இப்பாட்டு, பத்துப்பாட்டுக்குக் கடவுள் வாழ்த்துப் போல அமைந்து சிறப்பினை அளிக்கின்றது. இது 317 அடிகளைக் கொண்டது, இதனைப் புலவராற் றுப்படை என்றும் வழங்குவர். முருகனை வழிபடு

வோர் வினையின் நீங்கி வீடுபெறுவர் என்பதனை இந்நூல் தெளிவுறுத்தும்.

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

முருகன் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவர்வினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர் சோலை ஆகிய ஆறுபடை வீடுகளையும், அவற்றில் முருகன் எழுந்தருளியிருக்கும் திறத்தினையும் இந்நூல் எழிலுறக் கூறுகிறது.

திருப்பரங்குன்றப் பகுதியில் மதுரை மாநகரின் மாண்பு கூறப்படுகிறது. போர்க்கொடிகள் அசைந்து கொண்டிருக்கும் மதிலின் வாயிலை மாற்றூர் நெருங்கவும் அஞ்சுவர். திருப்பரங்குன்றம் வளம் மிக்க வயல்களால் சூழப்பட்டுள்ளது. இயற்கை எழிலுடைய இப் பகுதியில் முருகன் சூரனை வென்ற வெற்றியைக் காண்கிறோம்; திருச்சீரலைவாய்ப் பகுதியில் முருகன் ஆறுமுகமும் பன்னிரு கையும் கொண்டு யானைமீது வீற்றிருக்கிறான். திருவாவினன்குடியில் முருகன் தெய்வயானையோடு காட்சி தருகிறான். திருவேரகத்தில் ஈர ஆடையை உடைய பக்தர்கள் நாள் மலர் தூவி முருகனைக் கரம் குவித்துத் தொழுகின்றனர். குன்றுதோருடல் பகுதியில் குறிஞ்சிக் கிழவனான முருகனைக் குறவர்கள் வழிபடும் பான்மை சிறப்பிக்கப்படுகிறது. வாழை, பலா, தேன், தெங்கு ஆகிய பொருள்கள் மிக்குடைய பழமுதிர் சோலையில் உறைகின்ற முருகனைப் 'பழமுதிர் சோலை மலைகிழவோயே' எனப்

பாராட்டுகிறது இந்நூல். ஆற்றுப்படை நூல்களுள் திருமுருகாற்றுப்படை தனிச்சிறப்புடையது. மற்றவை போல அது பெறுதற்குரிய பொருளை விழைந்த கலை ஞரின் ஆற்றுப்படை அன்று; பெறுதற்கரிய வீடு பேற்றை விழைந்த புலவரின் ஆற்றுப்படையாகும். ஆகையால் திருமுருகாற்றுப்படையை இலக்கியப் புலவர் போற்றும் அளவைவிடச் சமயச் சான்றோர் போற்றும் அளவு பெரிது.

**பொருநராற்றுப்படை :** முடத்தாமக்கண்ணியார் பாடிய இப்பாட்டு 248 அடிகளைக் கொண்டதாகும். ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பொருநர் மூவகைப் படுவர். இந் நூலுள் தோன்றும் பொருநன் போர்க்களம் பாடுபவன். பரிசில் பெற்ற பொருநன் அது பெறக் கருதும் மற் றொரு பொருநனை ஆற்றுப்படுத்துவதால் இந்நூல் பொருநராற்றுப்படை என்னும் பெயர் பெறுவ தாயிற்று.

கரிகாலனின் வீரத்தையும், வென்றி மேம்பாட்டினை யும், வள்ளண்மையையும், காவிரியாற்றின் மேன்மை யையும் இந்நூலுள் பரக்கக் காணலாம். இதில் வரும் விறலியின் தோற்றப் பொலிவை அடிமுதல் முடிவரை வருணிக்கின்றார் ஆசிரியர். இவ்விறலியின் கையில் திகழும் யாழ் பண்டைத் தமிழரின் இசைப் புலமையை இசைக்கும்.

**சிறுபாணாற்றுப்படை:-** 269 அடிகளைக் கொண்ட இப்பாடலை இயற்றியவர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆவார். இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் எனப் பாணர் மூவகையினராவர்.

இப் பாட்டில் வரும் பாணன் யாழ்ப்பாணனுவான். இவன் கையில் சிறிய யாழை உடையவன். அதனுல் இப்பாட்டு இப்பெயர் பெற்றது என்றும், அடி அளவால் இப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

விறலியின் வருணனை, முடியுடை மூவேந்தரின் தலை நகரப் பெருமை, ஆமூர், வேலூர், தென்மா விலங்கை ஆகியவற்றின் மேன்மை முதலியவை இப் பாடல் புலப்படுத்தும் செய்திகளாம். மூவேந்தரைப் பற்றிக் கூறுகிற பாட்டு இது ஒன்றே.

பாணனின் வறுமைக் காட்சி நெஞ்சை உருக்குவ தாகும். மேலும், கானமயிலுக்குக் கலிங்கம் தந்த பேகன், முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, ஈரநன்மொழி இரவலர்க்கு ஈந்த காரி, ஆலமர் செல்வனுக்குக் கலிங் கம் நல்கிய ஆய், ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த அதிகன், பிறர் இல்லறம் சிறக்க உதவிய நள்ளி, சிறப்புடை நாட்டைக் கூத்தர்க்குக் கொடுத்த ஓரி ஆகிய கடையெழு வள்ளல்களுக்கு நிகராக நல்லறம் புரிந்த நல்லியக் கோடனின் மாண்பினை நத்தத்தனுர் இந்நூலுள் பெரிதும் பாராட்டுகிருர்.

பெரும்பாணுற்றுப்படை:- தொண்டைமான் இளந் திரையனைச் சிறப்பித்துக் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் பாடிய இப்பாட்டு 500 அடிகளைக் கொண்ட தாகும். இதில் வரும் பாணன் கையில் உள்ளது பேரி யாழ் என்பதாகும். இதனுலோ அல்லது அளவாலோ இந்நூல் இப் பெயர் பெற்றது என்பர்.

தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெற்று வரும் பாணன் ஒருவன், பரிசில் பெறக் கருதும் பாணன் ஒருவனைச் சந்தித்து அவனைத்

தொண்டைமானிடம் ஆற்றுப்படுத்துகிருன். அவ்வாறு ஆற்றுப்படுத்தும்போது இளந்திரையனுடைய நாட்டுச் சிறப்புக் கூறப்படுகிறது. அந் நாட்டில் ஆறலைகள்வர் இல்லை; தீயவிலங்குகள் இல்லை. இடியும் சார்ந்தாரைத் துன்புறுத்துவதில்லை. பிறநாட்டு வணிகர் கூட்டம் கூட்டமாகச் செல்வர். காட்டிடை வாழும் எயினர்கள் பரிசில் பெறச் செல்வோர்க்குப் புல்லரிசிச் சோற்றைத் தருவர்.

ஐந்திணைகளும் அழகுற வருணிக்கப்பட்டுள்ள இப் பாட்டில், காஞ்சீபுரம் கவினுற விளங்குகிறது. இதனைத் தலைநகராகக் கொண்டு இளந்திரையன் நூற்றுவரை வென்ற பஞ்சவரைப் போலப் பகைவரை வென்று பாணரைப் புரக்கின்ருன். அவனைச் சார்ந்து, "மன்னர் மன்ன; மறவர்,மறவ; செல்வர் செல்வ; செருமேம்படுந" என வாழ்த்துவோர்க்கு வரையாது தருவான் அவன்.

பண்டைத் தமிழரசர் பரிசிலரைப் புரக்கும் பான்மையினை இப் பாடல் உணர்த்துகிறது.

**மலைபடுகடாம்:-** (கூத்தராற்றுப்படை) பெருங் குன்றூர் பெருங் கௌசிகனர் இந்நூலுள் நன்னனைப் பாடியுள்ளார். இப்பாட்டு 581 வரிகளை உடையது. மலையை யானையாகவும் அதனிடத்து உண்டாகும் ஓசையை யானையிடத்துத் தோன்றும் முழக்கமாகவும் உருவகித்ததால் இப்பாட்டு மலைபடுகடாம் எனும் பெயர் பெற்றது. பத்துப் பாட்டுள் மதுரைக்காஞ்சிக்கு அடுத்து இரண்டாவது பெரிய பாட்டு இது. இப்பாடலில் எல்லாச் செய்திகளையும் முதலில் தொகுத்துக் கூறிப் பிறகு விரித்துக் கூறுகிருர் ஆசிரியர். உவமை நயம் மிக்கது இந்நூல்.

ஐவகை நில மக்கள் வாழ்க்கை முறைகள், நன்ன னின் சிறப்பியல்புகள், பக்கமலையில் எழும் பல்வகை ஒலிகள், இசைக் கருவிகள் முதலியன இந்நூலுள் எழில் மிகக் கூறப்பட்டுள்ளன. நன்னனின் நவிர மலையில் எப்போதும் ஆரவாரம் எழும். ஒரு புறம் யானைபிடிப்போர் எழுப்பும் ஒலியும் மற்றொரு புறம் வயப்புலியால் தாக்குண்ட மறவர் புண்ணை ஆற்ற அவர்தம் மனைவியர் பாடும் பாட்டொலியும் தினைகுற்றும் மகளிர் வள்ளைப் பாட்டொலியும், பறை யொலியும் சேர்ந்து பேராரவாரமாக ஒலிக்கும்.

வளம் மிக்க நவிர மலைத் தலைவன் நன்னன் பாணர்க்குப் பொற்றாமரை மலரையும், பொன்னணிகளை யும் வழங்குவான். அவற்றைப் பெற்றுத் திரும்பும் பாணர், பல் பொருளையும் கொண்டு மலைமுகடுகளி லிருந்து இழிந்துவரும் ஆறுபோலச் செல்வர்,

அவரைப் பூக்கள் தயிரைத் தெளித்தது போல் விளங்கும், வழியில் பெருங்கற்கள் எருமை படுத்திருப் பதைப் போல் தோன்றும். முழவு போலப் பலாப்பழம் காட்சியளிக்கும் என்பன போன்ற உவமைகளை இப் பாட்டில் கண்டு மகிழலாம்.

நெடுவங்கியம், மத்தளம், தும்பு, கிணை, சிறுபறை, யாழ் போன்ற இசைக் கருவிகளை இந்நூலுள் காணலாம்.

**முல்லைப்பாட்டு:** பத்துப்பாட்டில் சிறிய இப்பாட்டு 103 அடிகளால் ஆனது. இதனைப் பாடியவர் நப்பூதனார்.

கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிப் பிரிந்த தலைவன் வரும் வரை தலைவி ஆற்றி

யிருக்கும் இயல்பு இப்பாட்டில் எழிலோவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது.

தலைவன் குறித்த கார் வந்தது. ஆனால் அவன் தேர் வரவில்லை. அவளோ பிரிவுத் துயரால் கண் கலுழு கிறாள். பெருமுதுப் பெண்டிர் அவளை ஆற்றுவிக்க ஆயர் தெருச்சென்று நற்சொற் கேட்டுத் திரும்பி வரு கின்றனர். "நாங்கள் நன்னர் நன்மொழி கேட்டோம்; நின் கணவன் வருவது வாய்மை. ஆகவே ஆற்றியிரு" எனக் கூறுகின்றனர். அவளோ வருத்தம் தீராத வளாய்ப் பூப்போன்ற கண்களில் முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகளுடன் சோர்வுறுகிறாள்.

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் நெடிய காட்டிடத்துப் பாசறை அமைத்துப் போர்க் கடமை ஆற்ற அங்குத் தங்கியிருக்கிறான். மெய்க்காப்பாளர் தலைவனைச் சூழ்ந்திருக்க, மகளிர் விளக்கேற்றித் திரி கின்றனர். ஊமையரான மிலேச்சர்கள் காவல் காத்து நிற்கின்றனர். தலைவனோ நள்ளிரவிலும் துஞ்சாது, ஒரு கை பள்ளியொற்றி யொருகை முடியொடு கடகம் சார்த்தி நெடிது நினைந்து இருக்கின்றான்; முதல் நாள் போரில் புண்பட்ட யானைகளையும் புகழுடம்பு எய்திய வீரர்களையும் நினைந்து விம்மிதம் அடைகிறான்.

தலைவனை நினைந்து ஏங்கும் தலைவி கைவளை நெகிழ மெலிந்துள்ளாள். அவள் உறக்கம் கொள்ள வில்லை. துன்புறும் அவள் காதுகளில் தலைவனின் தேர் வரும் ஓசை விழுகிறது. தலைவன் வினை முடித் துத் திரும்பி விட்டான் என்ற செய்தியையும், தலைவி யின் இன்பத்தையும் மிக நுணுக்கமாகக் காட்டிப்

பாட்டு முடிகிறது. பத்துப் பாட்டில் வடிவால் சிறிய தும் வண்ணத்தால் சிறந்ததும் இப்பாட்டேயாம்.

மதுரைக் காஞ்சி: தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியனை மாங்குடி மருதனுர் பாடியது. இந்நூலே பத்துப்பாட்டில் மிகப் பெரியதாகும். 782 அடிகளையுடைய நெடும் பாட்டு இது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய னின் வெற்றி மேம்பாட்டைக் கூறுகிறது இப்பாட்டு. மதுரையில் அதிகாலையிருந்து நள்ளிரவுவரை நடை பெறும் நிகழ்ச்சிகளை இந்நூல் நிரல்படக் கூறுகிறது. தேவர் உலகம் விரும்பிக் காணுமாறு அழகு மிக்கது மாடமதுரை. இந்நகரின் தெருக்களில் பொன்னுரை காண்மரும், கலிங்கம் பகர்நரும், செம்பு, நிறைகொண் மரும், பூவும் புகையும் ஆயும் மாக்களும் நிறைந்து ஆரவாரம் செய்வர். மயிலன்ன சாயலையும், மாந்தளிர் போன்ற மேனியையும் முல்லை சான்ற கற்பினையு முடைய மதுரை மகளிர் தாமரை மலர் போன்ற அழகிய முகத்துடன் காட்சியளிப்பர்.

இதன்கண் ஐவகை நிலங்களின் வளப்பமும் கூறப்பட்டுள்ளது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய னின் வெற்றியைப் பாராட்டும் இந்நூல் அவனுக்கு இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை ஆகியவற்றை எடுத்துக் கூறி வீடுபேற் றுக்குரிய நெறியில் செல்லுமாறு அறிவுறுத்துகிறது.

பாண்டியனின் பழியுடன் படராப் பான்மையினை இந்நூல்,

"தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக என்னுது
ஈதல் உள்ளமொடு இசைவேட்கும்"

என எடுத்தியம்பும்.

நெடுநல்வாடை: திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர் இதனையும் ஆக்கியுள்ளார். மதுரைக் காஞ்சியின் தலைவனுன தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியனே இப்பாட்டுடைத் தலைவனுவான். நீண்ட நல்ல வாடையைப் பாடும் பாட்டு இது. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் தரும் நெடு வாடையாகவும், வினைமுடிக்கச் சென்ற தலைவனுக்கு இது நல்வாடையாகவும் தோன்றுதலால் இது நெடுநல் வாடை என்னும் பெயர் பெற்றது.

தலைவியின் துயர்தீர வேண்டி, தலைவனின் பாசறைத் தொழில் இனிதாக முடிவுபெறக் கொற்றவையை வழிபடும் செவிலித்தாயின் கூற்ருக இப்பாட்டினை அமைத்துள்ளார் ஆசிரியர்.

"புலம் பொடுவதியும் நலங்கிளர் அரிவைக்கு
இன்ன அரும்படர்தீர விறல் தந்து இன்னே
முடிக."

என்பதே செவிலியின் வேண்டுகோள்.

வாடையின் கொடுமையை இப்பாட்டுப் படம் பிடித்துக் காட்டுகிறது. விலங்குகள் மேய்தல் தொழிலை மறக்க, குரங்குகள் குளிரால் நடுங்க, மரத்தில் தங்க வரும் பறவைகள் தரையில் வீழ, கறவைப் பசு கன்றுகளை உதைக்க, குன்றம் குளிரால் நடுங்க வாடை வீசுகிறது.

"மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்"

என வருணிக்கப்பெறும் இக்கார் காலத்தில் நானிலங்கள் தோன்றும் பான்மையும் மதுரை மாநகரத் தோற்றமும் படிப்பார் உள்ளத்தை நெகிழச் செய்யும் என்பது திண்ணம்.

சிற்பநூல் வல்லார் நாளும் கோளும் பொருந்தப் பெற்ற நாளில் வேலை துவங்கிச் சிறப்புற அமைக்கப் பெற்றது மன்னன் மாளிகை. அம்மாளிகையின் அந்தப்புரத்தில் அமைந்த தந்தக் கட்டிலில் படுத்திருக்கிறாள் தலைவி. அவள் தலைவனின் பிரிவுத்துயரால் அழகிய அணிகளை யெல்லாம் துறந்து பட்டு நீக்கித் துகில் உடுத்திக் கொண்டு புனையா ஓவியம்போல் காட்சியளிக்கிறாள். கட்டிலின் மேல் விதானத்தில் அமைந்த திங்களைச் சார்ந்திருக்கும் உரோகிணியைக் கண்ணுற்று இதுபோன்று தலைவனைப் பிரியா வாழ்வு நமக்கில்லையே என ஏங்குகிறாள்.

பாசறையில் தங்கியிருக்கும் பாண்டியனே காமத்தை வென்ற அன்பினனாகக் கடமை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நள்ளென்யாமத்தும் பள்ளி கொள்ளாது புண்பட்ட வீரரைப் பார்த்து முகமன் கூறப் பாசறையை விட்டு வெளியே செல்கிறான். குதிரையும் யானையும் தொடர்ந்து வரத் தலைவன் அவற்றில் ஏறிச் செல்லாமல் வீரன் ஒருவனின் தோளில் கையை வைத்து நடந்து சென்று வீரர்களுக்கு ஆறுதல் கூறுகிறான். மறுநாள் வெற்றிக்கான வழிகளை

எண்ணுகிருன். வாடை வீசுகிறது. அது மன்னனின் கடமைச் சிறப்பை மேலும் புலப்படுத்துகிறது.

தலைவனை நினைந்து வருந்தும் பாண்டிமாதேவியின் துயரத்தை வருணிக்கும் பகுதியும் பலரொடு முரணிய வேந்தனின் பாசறைத் தொழிலை வருணிக்கும் பகுதியும் நக்கீரரின் நுண்மாண் நுழை புலமைக்குத் தக்க சான்று பகர்கின்றன.

**குறிஞ்சிப்பாட்டு:** குறிஞ்சி பாடுவதில் வல்ல கபிலர் பாடிய பாட்டு இது. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிக்கும் பொருட்டு இதனைப் பாடினர் புலவர். இந்நூல் களவொழுக்கம் பற்றியது. இப்பாடல் 261 அடிகளைக் கொண்டது. தலைவியின் காதலை உணர்ந்த தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நின்றதை இப்பாடல் நிரல்படக் கூறுகிறது.

குறிஞ்சி நிலத்துத் தலைவி ஒருத்தி தினைப்புனம் காக்கச் சென்ருள். அங்கே அருவியாடியும், சுனை குடைந்தும், மலர் பறித்தும், மர நிழலில் விளையாடியும் பொழுது போக்குகின்ருள். ஒருநாள் ஊழ் கடை கூட்ட கையில் வில்லை ஏந்திய காளை ஒருவனைக் கண்டு உரையாடும்போது யானை ஒன்று அங்கு வந்தது. அதனைக் கண்ணுற்ற தலைவி நடுநடுங்கி அவனைச் சார்ந்தாள். அவ்வீரன் அவ்வேந்திழையை வேழத்தினின்றும் காத்தான். மாலை வரவே பாதுகாவலாகத் தலைவியை அவள் ஊர்ப்பக்கம் வரை கொண்டு விடுத்தான். இருவர்க்கும் காதல் வளர்ந்தது. அன்று முதல் தொடர்ந்து இரவு அஞ்சாது அரவு அஞ்சாது தலைவியை வந்து காண்கின்ருன். மகளின் காதல் நோயை அறியாத தாயும் தமரும் முருகனுக்கு வெறி

யாட்டயர்ந்து வழிபாடு செய்தனர். ஆனால் தலைவியின் உண்மை நோயோ தீர்வதாக இல்லை. இந்நிலையில் தோழி செவிலித் தாய்க்கு உண்மை நிலையை உணர்த்தித் தலைவியின் திருமணத்தை முடிக்குமாறு வேண்டுகிறாள்.

'குறிஞ்சிக்கோர்கபிலன்' என்ற உண்மையுரையை இந்நூல் கற்போர் நன்கு உணர்வர். இப்பாடலில் தொண்ணூற்றொன்பது வகைப் பூக்கள் மலர்ந்து பாடல் முழுவதும் மணம் வீசுகிறது.

பட்டினப்பாலை: பெரும்பாணாற்றுப் படையைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் இதனைப் பாடியுள்ளார். இப்பாட்டு 301 அடிகளைக் கொண்டது. இவ்வகப் பாட்டில் கரிகாற் பெருவளத்தான் உவமை வாயிலாகப் பாடப்பெற்றுள்ளான். இப்பாடலைப் பாடியதற்காக உருத்திரங்கண்ணனார் பதினாறு நூறாயிரம் பொன் காசு பெற்றதாகக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது. 301 அடிகளையுடைய இப்பாட்டை அகப் பாடல் எனக் கூறும் சிறப்பினை அளித்த பெருமை பின்வரும் ஆறு வரிகளுக்குரியதாகிறது.

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே
திருமா வளவன் தெவ்வர்க்கு ஒக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென்தோளே"

தலைவியைப் பிரிந்து வினைமேற் செல்ல நினைத்த தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியவை இவ்வரிகள். "மனமே! குறைவில்லாத சிறப்பினையுடைய காவிரிப்

பூம்பட்டினத்தையே நான் தேடும் செல்வமாகப் பெற்ருலும் நீண்ட கூந்தலையுடைய என் தலைவியைப் பிரிந்து வரமாட்டேன். பொருள் தேடச் செல்லும் காட்டும் வழி திருமாவளவன் பகைவரை வெற்றி கொள்ள எடுத்த வேலைவிடக் கொடியது. தலைவியின் தோளோ அக்கரிகாலனுடைய செங்கோலைக் காட்டிலும் தண்ணியது'' என்பதே மேற்கூறிய அடிகளின் பொருளாம்.

பட்டினப்பாலை இதுவே. ஒரு சில அடிகளால் இயன்று பாலைத்திணைப் பாடலாய்க் குறுந்தொகையில் அமைக்கப்பட வேண்டிய ஒரு பாட்டு, இவ்வாறு நீண்டு பெருகி 301 அடிகளையுடைய நெடும் பாட்டாகிப் பத்துப்பாட்டில் ஒன்ருக அமைந்துவிட்டது.

காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமை, காவிரியின் மேன்மை, பண்டைத் தமிழரின் வாணிகச் சிறப்பு ஆகியவற்றை இப்பாட்டுப் பகர்கின்றது. பிற நாட்டு வணிகரும் காவிரிப்பூம்பட்டினத்தில் குழுமியிருந்தனர் என்பதனை இப்பாடலால் நாம் அறிகிருேம்.

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

(இதில் அடங்கியுள்ள நீதி நூல்கள் Sep '61)

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என வழங்கப் பெறுவன. அது போலவே, சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களைச் சேர்த்த தொகுதி பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கலாயிற்று.

பதினெட்டு நூல்களையும் குறிக்கும் வெண்பா வருமாறு:—

> "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
> இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
> கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

முப் பொருள்களையும் குறைந்த அடிகளில் சிறப்புற (நான்கடிக்கு மிகாமல்) உரைப்பது கீழ்க்கணக்கு நூல்களின் இயல்பாகும்.

> "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
> அறம் பொருள் இன்பம் அடுக்கி யவ்வகைத்
> திறம்பட உரைப்பது கீழ்க்கணக்காகும்"

எனப் பன்னிருபாட்டியல் கூறுவது காண்க.

**நீதி நூல்கள்:** சங்ககாலச் சான்றோர்களின் அநுபவ உண்மைகளையே பிற்காலப் புலவர்கள் நீதிக் கருத்துக்களாகப் போற்றினர். நீதிநூல்களில் இலக்கியச் சுவையும் கற்பனையும் குன்றித் தோன்றினும், அவை மக்கள் வாழ்வை வளப்படுத்தும் சீரிய தொண்டினைச்

செய்கின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள், திருக்குறள், நாலடியார், நான்மணிக் கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், பழமொழி, முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்ற பதினொரு நூல்களும் நீதியை இயம்புவன.

நீதிகளைக் கூறுவதில் திருக்குறளும், நாலடியாரும் ஏறக்குறைய ஒரே முறையைப் பின்பற்றுகின்றன. இரண்டு அடிகளால் திருக்குறள் இயல, நாலடி கொண்டு நடக்கிறது நாலடியார். திருக்குறள் ஒரே ஆசிரியரால் இயற்றப்பெற்றது; நாலடியார் பல ஆசிரியர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாகும். பழமொழிகளை அமைத்து முன்றுறையரையனார் பாடிய பாடல்களின் தொகுப்பு பழமொழி என்னும் நூலாம். ஏனைய நூல்கள் தனித்தனிப் புலவர்களால் பாடப்பெற்றவை.

**திருக்குறள்:** உலகப் பொதுமறை என்னும் ஒப்பற்ற சிறப்பினையுடையது இந்நூல். இவ்வுயரிய நூற் கருத்தைப் பிற்காலப் புலவர்கள் அனைவரும் எடுத்தாண்டுள்ளனர். எல்லாச் சமயத்தாரும் ஒப்பப் போற்றுகின்ற பெருமை இந்நூலுக்கு மட்டுமே உண்டு. மேனாட்டு அறிஞர் பலர் திருக்குறளைத் தத்தம் மொழிகளில் பெயர்த்துள்ளனர்.

அறத்துப்பால் தனி மனிதனது வாழ்வின் மேன்மையைக் குறிக்கும். பொருட்பால் சமுதாய வாழ்வைச் சுட்டிக் காட்டும். காமத்துப்பால் அகவாழ்வின் பெற்றியைச் சிறப்புற எடுத்துரைக்கும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பெரும் புரட்சியைச் செய்தவர் வள்ளுவரே யாவார். பொற்காலம் எனப்

போற்றப்படும் சங்க காலத்தில் காணப்பட்ட சில குறை பாடுகளை இவர் துணிவாக மாற்றியமைக்க முயன்றுள்ளார். "கொல்லாமை" என்னும் அதிகாரமும் "கள்ளுண்ணாமை" என்னும் அதிகாரமும் திருவள்ளுவருடைய சமுதாயச் சீர்திருத்த நோக்கத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. புலால் உண்ணுதலையும், கள் குடித்தலையும் சங்ககாலச் சான்றோர் கடிந்தாரில்லை. இவற்றை விலக்குமாறு மக்களை வற்புறுத்திய முதல் தமிழ்ப் புலவர் இவரே. பிற்காலப் புலவர்கள் இவர்தம் கொள்கைகளைப் பெரிதும் போற்றினர்.

திருக்குறளின் மேன்மையைக் கூறும் திருவள்ளுவ மாலையில், சீத்தலைச் சாத்தனார்,

**"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்**
**மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்**
**தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றே**
**யாமுரைதேர் வள்ளுவர்முப் பால்"**

எனப் போற்றுகிறார்.

சொல்லழகும் பொருளாழமும் கொண்டு ஒளிரும் திருக்குறளை 'வாழ்க்கை விளக்கமாக'க் கொள்ளுவது சாலப் பொருத்தமே.

**நாலடியார் :** சமண முனிவர் நானூறுபேர் பாடிய நானூறு வெண்பாக்களைக் கொண்ட இந்நூல், திருக்குறளோடு ஒப்ப வைத்துப் பாராட்டப் பெறும் சிறப்புடையது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பதனாலும், "சொல்லாய்ந்த நாலடி நானூறும் நன்கு இனிது" என்பதனாலும், "பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்" என்பதனாலும் இதன் பெருமையை அறியலாம்.

திருக்குறளைப் போலவே நாலடியாரும் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பகுப்பாக உள்ளது. கல்வியின் சிறப்பினை இந்நூல்,

**"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து**
**நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்**
**கல்வி யழகே யழகு"**

என்று பாராட்டுகிறது.

செல்வம் நிலையற்றது; அது 'சகடக்கால் போல வரும்' தன்மையது; ஆகவே, அச்செல்வம் 'கைத்துண் டாம்போதே கரவாது அறம் செய்மின்' என மக்களுக்கு அறிவுறுத்துகிறது.

இவ்வரிய நூலைப் போப்பையர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறட் கருத்துக்களை இந்நூலில் யாண்டும் கண்டு மகிழலாம்.

பழமொழி: இதனை இயற்றியவர் முன்றுறையர் என்னும் சமணராவார். ஒவ்வொரு பாட்டின் இறுதி யில் ஒரு பழமொழியைக் கூறுவதால் இந்நூல் பழ மொழி என்னும் பெயரைக் கொண்டு விளங்குகிறது. இதில் நானூறு பாடல்கள் உள்ளன. இந்நூலுள் காணப் படும் சில பழமொழிகள் இக்காலத்தில் வழக்கில் இல்லை.

இந்நூல் வரலாற்றுக் குறிப்புக்களையும் தன்ன கத்தே கொண்டு திகழ்கிறது. "குலவிச்சை கல்லாமல் பாகம் பாடும்", "அறிமடமும் சான்றோர்க்கணி" என் பனவற்றால் கரிகாற் சோழன், பாரி ஆகிய இவர்களைப் பற்றி அறியமுடிகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது, திருக்குறள் நாலடியாருக்கு அடுத்த நிலையில் சிறப்புற வைத்து எண்ணப்படுகிறது.

இந்நூலில் காணும் பழமொழிகளில் சில.

**"தமக்கு மருத்துவர் தாம்"**

**"பழம்பகை நட்பாதலில்"**

**"தன்கண்ணிற்—கண்டதூஉம் எண்ணிச்சொலல்"**

**"காணுரெனச் செய்யார் மாணு வினை"**

**"அணியெல்லாம் ஆடையின் பின்"**

**"பின்னின்னு பேதையார் நட்பு"**

**சிறுபஞ்சமூலம்:** காரியாசான் என்பவர் இதனை இயற்றியவர். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறு மல்லி, பெருமல்லி, நெரிஞ்சி ஆகியவற்றின் வேர்கள் சேர்ந்து மருந்தாகி நோய் தீர்க்கும். இது போலவே, இந்நூற்பாடல் ஒவ்வொன்றிலும் காணும் ஐந்தைந்து அரிய பொருள்கள் உயிர் நலம் காக்கும் தன்மைய. இதில் 105 பாடல்கள் உள.

அருளுடையானிடத்தில் அறம் சிறக்கும்; அவன் ஒருபோதும் பழி புரியான் என்பன போன்ற அரிய கருத்துக்களை இந்நூலுள் காணலாம்.

**திரிகடுகம்:** நல்லாதனுர் இதனை இயற்றினுர் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய முப்பொருள்களால் ஆகிய மருந்து உடல் நோயைப் போக்குதல் போல், இந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றிலும் கூறப்பெறும் மூன்று கருத்துக்கள் உள நோயைப் போக்கும் பான்மைய.

தன்னைப் புகழ்ந்து திரிவதும், வீணாகக் கோபம் கொள்வதும், பொருள் யாவற்றையும் தானே அடைய வேண்டும் என நினைப்பதும் ஆகிய தாழ்ந்த பண்புகள் ஒருவனது செல்வத்தைத் தொலைத்துவிடும். இதனை,

**"தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்**
**கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய**
**பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்**
**செல்வம் உடைக்கும் படை"**

என்ற பாடல் பகர்கின்றது.

**ஆசாரக்கோவை:** பெருவாயின் முள்ளியார் இதன் ஆசிரியராவார். மக்கள் தம் வாழ்வில் கொள்ள வேண்டுவனவற்றையும் தள்ள வேண்டுவனவற்றையும் இந்நூல் கூறுகிறது. தம்மினும் மிக்காரிடம் ஒருவன் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதை,

**"நகையொடு கொட்டாவி காறிப்புத் தும்மல்**
**இவையும் பெரியார்முன் செய்யாரே செய்யின்**
**அசையாது நிற்கும் பழி"**

என இடித்துரைக்கிறது இந்நூல்.

**ஏலாதி:** இதனை இயற்றியவர் கணிமேதாவியார். அறுவகைப் பொருள்களைச் சேர்த்துச் செய்த மருந்துக்கு ஏலாதி என்று பெயர். இம் மருந்து எவ்வாறு உடலுக்கு உரம் தருகிறதோ அதேபோல, இந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றும் ஆறு நற் கருத்துக்களைக் கொண்டு உள்ளத்திற்கு வலிமை தருகிறது என்பர். இந்நூல் 80 பாடல்களை உடையது.

**இன்னா நாற்பது:** இதன் ஆசிரியர் கபிலராவார். வாழ்க்கைக்குத் துன்பம் தருபவை இவை இவை எனக்

கூறுகின்ற இந்நூல் 41 பாடல்களை உடையது.

இன்னாதவற்றுள் சில:

**"இன்னா—ஈன்ருளை ஓம்பாவிடல்"**
**"தீமையுடையார் அயல் இருத்தல் இன்னா"**
**"இன்னா—கள்ள மனத்தார் தொடர்பு"**
**"திருவுடையாரைச் செறலின்னா"**

**இனியவை நாற்பது:** பூதஞ்சேந்தனர் இதனை இயற்றியவர். இந்நூல் நாற்பது வெண்பாக்களை யுடையது. ஒவ்வொரு பாடலும் இனிய அறிவுரை களைக் கூறுகின்றது.

இனியவற்றுள் சில:

**"பிச்சைப்புக் காயினும் கற்றல் மிகவினிதே"**
**"கயவரைக் கைகழிந்து வாழ்தலினிதே"**
**"மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே"**
**"நட்டார் புறங்கூருன் வாழ்தல் நனியனிதே'**
**"வருவாய் அறிந்து வழங்க லினிதே"**

**நான்மணிக்கடிகை:** 101 பாடல்களைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் விளம்பி நாகனர் என்னும் புலவராவார். மணியான நான்கு சிறந்த கருத்துக் களை ஒவ்வொரு பாடலும் கொண்டு இலங்குகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வீட்டுப் பேற்றினை அடைய ஒவ்வொருவரும் முயலல் வேண்டும் என்பது இந்நூலாசிரியர் கருத்து.

வயலுக்கு வனப்பளிப்பது நெல்லும் கரும்பும்; குளத்துக்கு அழகு தருவது தாமரை மலர்; மகளிர்க்கு

மாண்பளிப்பது நாணம்; ஒருவனுக்குச் சிறப்பளிப்பது அறம். இவ்வினிய செய்திகளை,

**"நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அணியென்ப தாமரை பெண்மை
நலத்துக்கு அணியென்ப நாணம் தனக்கணி
தான்செல் உலகத்து அறம்"**

என்னும் பாடலால் அறியலாம்.

**முதுமொழிக்காஞ்சி:** இந்நூலை இயற்றியவர் மதுரைக் கூடலூர் கிழார். இது பத்து அதிகாரங் களை யுடையது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துப் பாக்களைப் பெற்றுள்ளது. ஒழுக்கமுடைமையை இந்நூல் பெரிதும் பாராட்டுகிறது.

### அகப்பொருள் தழுவிய ஐந்து நூல்கள்:

**ஐந்திணை ஐம்பது:** மாறன் பொறையனார் என்பவர் இதனை இயற்றினார். ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பாடல் வீதம் ஐந்து திணைகளுக்கும் 50 பாடல்கள் கொண்டு திகழ்வது இந்நூல்.

பாலை வழியைச் சித்திரிக்கும் பாடல் ஒன்று நம் கருத்தைக் கவர்கிறது. சுனையில் நீர் சிறிதே உளது. அந் நீரைத் தன் பிணைமான் உண்டல் இனிது என எண்ணுகிறது கலைமான். ஆனால் பிணைமானோ கலை மான் உண்ணுதிருக்கும்போது தான் மட்டும் உண்ண மறுக்கும் பான்மையது. ஆகவே கலைமான் ஒரு வழி செய்தது. நீரை உறிஞ்சிக் குடிப்பது போலப் பாவனை செய்ய, அதனை உணராத பிணைமான் நீரைக் குடித்தது.

இக் கருத்தமைந்த பாடல் வருமாறு:

**''சுனைவாய்ச் சிறுநீரை யெய்யாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுஉண்ண வேண்டி—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி''**

**திணைமொழி ஐம்பது:** இதனைப் பாடியவர் கண்ணன் சேந்தனார். சொல்லழகும், பொருளழகும் மிக்க ஐம்பது பாடல்களைக் கொண்டு விளங்குகிறது இந்நூல்.

**ஐந்திணை எழுபது:** இந்நூலாசிரியர் மூவாதியார். எழுபது அகப்பாடல்களைக் கொண்டது இந்நூல்.

**திணைமாலை நூற்றைம்பது:** ஏலாதி ஆசிரியர் கணிமேதாவியார் இந்நூலை இயற்றியவர். 153 பாடல்களையுடைய இந்நூல் இயற்கையின் அழகை இனிது கூறுகின்றது.

**கைந்நிலை:** புல்லங்காடனார் என்னும் புலவர் இந்நூலை இயற்றினார். திணைக்குப் பன்னிரண்டு பாடல்கள் வீதம் ஐந்திணைக்கும் அறுபது பாடல்களைக் கொண்டது இந்நூல்.

**கார் நாற்பது:** மதுரைக் கண்ணன் கூத்தனார் இதன் ஆசிரியர். கார்கால நிகழ்ச்சிகளை இந்நூல் அழகுறச் சித்திரிக்கிறது. கார்காலத் தொடக்கத்தில் வருவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் அவ்வண்ணம் வாராமையால் தலைவி கவல்வதும், அவளைத் தோழி ஆற்றுவிப்பதும், தலைவன் தலைவியை நினைந்து அவளை விரைவில் அடையக் கருதித் தேர்ப்பாகனைத் தேரை விரைந்து செலுத்துமாறு கூறுதலும் ஆகிய செயல்களைத் திறம்பட வருணிக்கிறது இந்நூல்.

## புறத்தைப் பற்றிய நூல்

**களவழி நாற்பது:** இதன் ஆசிரியர் பொய்கையார். சோழன் செங்கணனுடன் கழுமலம் என்னுமிடத்தில் தன் நண்பன் சேரமான் கணைக்காலிரும்பொறை தோல்வியுற்றுச் சிறைப்பட, அவனை மீட்க இந்நூலைப் பாடினர் பொய்கையார் என்பர். போர்க்களக் கொடுமையை உள்ளவாறு கூறுகிற இந்நூற் புலவரின் திறம் வியக்கற்பாலது.

# சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள்

(April, 1960, '61, Sep, '60, '63)

உலகத்தில் எந்த நாடும் பெருத பெரும் பேற்றை நம் பண்டைத் தமிழர் வாழ்விலும், அவ்வாழ்வை உணர்த்தும் சங்க இலக்கியங்களிலும் கண்டு உணர்ந்த பாரதியார், ''தந்தையர் நாடெனும் போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'' என்று பெருமிதம் தோன்றப் பாடி மகிழ்ந்தார். நம் முன்னோர் வாழ்ந்த வாழ்வு, கொண்ட கொள்கை, போற்றிய அறம் ஆகியவற்றைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பெருமையுடன் பறை சாற்றுகின்றன.

''பழந்தமிழ் நாட்டு மக்கள் வேற்று நாட்டாருடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்னமே தமிழிலக்கியம் தோன்றி வளரத் தொடங்கியது. அதனால் பழந்தமிழிலக்கியம் நாட்டின் சொந்தக் கலையாய் வளர்ந்தது. வேற்று நாட்டு இலக்கியத்தின் சார்போ கலப்போ இல்லாமல் தமிழிலக்கியம் வளர்ந்த காலம் அது. ஆதலின் தமிழ் நாட்டு இயற்கை வளமும் பழந்தமிழரின் வாழ்க்கை நெறியுமே அந்தப் பழைய இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்தன.''

''தமிழ் நாடு முப்புறமும் கடல் சூழ்ந்ததாய், குன்றமும் காடும், அருவியும், ஆறும், வயலும், சோலையும் சூழ்ந்து அழகு செய்வதாய் நாடு வளமுள்ளதாக அமைந்துள்ளது. இயற்கையன்னை தமிழ் நாட்டு மக்களை அச்சுறுத்துபவளாக இல்லை. மக்கள்

இயற்கையின் உதவியைப் பெற்று இயற்கையோடு ஆடிப் பாடி இயற்கையோடு இசைந்து வாழும் இயல்பைப் பெற்றிருந்தனர். இத்தகைய இயற்கைச் சூழலில் வாழ்வு நடாத்திய பழந்தமிழரின் கற்பனைக் கனவுகளும் இயற்கையோடு இயைந்தனவாகவே விளங்கின. அத்தகைய இன்பக் கனவுகளையே பழந்தமிழ் இலக்கியங்களில் காண்கிறோம்.''

ஒத்த அன்பும், ஒத்த பண்பும், ஒத்த வயதும் ஒத்த கல்வியும் உடைய ஆண் பெண் இருவரின் காதல் வாழ்வையே பழந்தமிழ் இலக்கியங்கள் உரைக்கின்றன. இயற்கை வாழ்வில் திளைத்த போதிலும் பழந்தமிழர் நாடும், நகரமும், அரசும் அமைத்து வாழலாயினர். அடுத்தடுத்து நாடும் நகரமும் அமையவே பூசலும் போரும் எழுந்தன. "ஆகவே போரின் தொடர்பான வீர உணர்ச்சிகளையும், அவற்றின் முடிவான வெற்றி முதலியவற்றின் கொண்டாட்டங்களும் ஆடல் பாடல்களும் இவற்றில் வல்ல கலைஞர்களுக்குப் பரிசில் கொடுத்து மகிழ்விக்கும் வண்மைச் செயல்களும் பழந்தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன."

நம் முன்னோர் தாம் படைத்த இலக்கியச் செல்வங்களிலெல்லாம் உயர்ந்த குறிக்கோளை வற்புறுத்த விழைந்தனர். ஆகவே அகப்பாட்டுக்களெல்லாம் அவ்வாறே அமையலாயின. தலைவன் தலைவி முதலியோர் பெயர் சுட்டாமல் தம் கற்பனைகளை யாவர்க்கும் பொதுவாக்கிப் பாடினர். காதல் உணர்ச்சிகளைப் பற்றிய பாட்டுக்களெல்லாம் அகம் என்றும், மற்றையவற்றைப் புறம் என்றும் முறைப்படுத்தினர். தூய காதற்பாட்டுக்களைத் திணை துறைப்படுத்தி வகுத்தது போலவே புறப்பாடல்களையும் பாகுபாடு செய்து இலக்

கிய மரபு ஒன்றை ஏற்படுத்தினர். ஆகவே விரிவான இலக்கியமும் தோன்றலாயிற்று.

பழந் தமிழர் இயற்கை வாழ்வு வாழ்ந்த போதிலும் இயற்கையையே பாடிக்கொண்டிருக்கவில்லை. ''அவர்கள் இயற்கையை வருணித்த இடங்களில் மக்களின் வாழ்வே பாட்டின் உரிமைப் பொருளாக விளங்குகிறது. இயற்கை அவ்வாழ்வுக்குப் பின்னணியாக, முதற் பொருளாகவும் கருப்பொருளாகவும் அமைந்துள்ளது. நெடுநல்வாடை முதலிய நெடும்பாட்டுக்களிலும் இயற்கை எவ்வளவோ விரிவாக வருணிக்கப்பட்டிருப்பினும் இயற்கைப் பொருளே பாட்டின் பெயராக அமையினும் இயற்கைக்கு அங்கு முதன்மை இல்லை. மக்களின் வாழ்வுக்கே முதன்மையுள்ளது.''

சங்க நூல்கள் என்று கூறப்படும் எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும் பல செய்யுட்களின் தொகுப்புக்களாகும். அத்தொகுப்பில் காணப்பெறும் பாடல்கள் ஒரே காலத்தில் பாடப்பெற்றவை அல்ல. பல புலவர்களால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலத்தில் பாடப் பெற்றவையாகும். பழந்தமிழ்ப் பாடல்கள் அனைத்தும் நமக்குக் கிடைக்கவில்லை. காலப் போக்கில் பல பாடல்கள் அழிந்தன. கிடைப்பவற்றைக் காக்க வேண்டும் என்ற முயற்சி சங்க காலத்தில் தோன்ற, அதன் பயனாகக் கிடைத்த பாடல்களைப் பொருள் நோக்கியும், அடிவரையறை கருதியும் வகுத்து அமைத்தனர். எட்டுத்தொகையிலும், பத்துப் பாட்டிலும் உள்ள செய்யுட்களின் எண்ணிக்கை 2380. அவற்றுள் மூன்று அடிச் செய்யுள் முதல் எழுநூற்று எண்பத்திரண்டு அடிச்

செய்யுள் வரை பல திறத்தன உள்ளன. அவற்றைப் பாடியவர்கள் இயற்பெயரால் அறியப் பெற்றவர் பலர்; சிலர் இயற்பெயர் மறக்கப்பட்டு, அவர்கள் பாடிய பாட்டுக்களின் சிறப்பால் காரணப் பெயர் பெற்றுள் ளனர். இவ்வாறு இயற்பெயராலும், காரணப் பெய ராலும் அறியப் பெறும் புலவர் 473 பேராவர். இவருள் 30 பேர் பெண்பாலார்; அரச குடும்பத்தைச் சார்ந்தவர் 25 பேர்; புலவர்களின் பெயர் அறியமுடியாத செய்யுட்கள் 102 உள்ளன.

இப் பாட்டுக்களின்று பழந்தமிழரின் சிறப்பியல்பு களை நாம் உணரலாம். இன்று பலபடப் பராட்டிப் பேசும் பொதுமை நோக்குச் சங்க காலத்திலேயே விளக்கம் பெற்றதை ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தொடரால் அறியலாம். இன்பமும் துன்பமும் உலக இயற்கை என்பதைத் தெளிவாக உணர்ந்தவர்கள் அவர்கள். இந்த உண்மை நிலையை உணர்ந்து 'இனியவற்றைக் கண்டு இன்பமாக வாழ்தல் வேண்டும்' என்பது புலவர் கருத்து.

''ஒரு வீட்டில் சாப்பறை ஒலிக்கிறது; மற்றொரு வீட்டில் மகிழ்வுடன் திருமண ஆரவாரம் எழுகிறது. பிறி தொரு வீட்டில் கணவனுடன் வாழும் பெண் பூவணிந்து சிறந்து தோன்றுகிறாள்; இன்னொரு வீட் டில் கணவனைப்பிரிந்த மனைவி ஆற்றாமையில் கண்ணீர் கலுழ வருந்துகிறாள்; இவ்வாறு இரக்கமின்றி உலகைப் படைத்து விட்டான் இறைவன். இதுதான் உலக இயற்கை. ஆதலால், இவ்வியற்கைத் தன்மையை உணர்வோர் இன்னாதவற்றைக் குறித்துக் கவலை கொண்டு துன்புறாமல் இனியவற்றைக் கண்டு இன் புற்று வாழ்தல் வேண்டும். இவ்வினிய கருத்தமைந்த

பாடலை இயற்றியவர் பக்குடுக்கை நன்கனியார் என்னும் புலவராவார்.

அப்பாட்டு வருமாறு:

**"ஓரில் நெய்தல் கறங்க ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னாது அம்மஇவ் வுலகம்
இனிய காண்கிதன் இயல்புஉணர்ந்தோரே."**

மக்களுடைய செம்மை சான்ற வாழ்க்கையை அக்காலப் பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. பழந் தமிழ் நாட்டு மக்கள் உண்மையைப் போற்றி வாழ்ந்தனர். வள்ளலிடத்தில் பரிசு பெற விரும்பிய புலவர் ஒருவர் "வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்; மெய் கூறுவல்" என்று உண்மை விளம்பினர். வன்பரணர், "பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச் செய்யா கூறிக் கிளத்தல் எய்யா தாகின்று எம் சிறு செந்நாவே" என மொழிகின்றார்.

மேலும் சங்ககாலப் பாடலைக் கொண்டு தமிழரின் கடமை உணர்ச்சியையும் நாம் அறியமுடிகிறது. சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் அமைந்த கடமையைத் தெளிவாகப் பாடுகிறார் பொன்முடியார் என்ற பெண்பாற் புலவர்.

**"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."**

அவரவர் தத்தம் கடமையைச் செய்தால் சமுதாயம் மேம்படும் என்பதை இப்பாடலால் உணரலாம். வீரமும், ஈரமும் கொண்டு அறநெறியைப் போற்றி, செய்ந்நன்றி மறவாமல் வாழ்ந்தனர் பழந்தமிழ் மக்கள்.

பண்டைத் தமிழரின் தலையாய பண்புகளில் ஒன்ருக விளங்கியது மான உணர்ச்சி. மானம் என்ருல் என்ன என்பதைப் பரிமேலழகர், திருக்குறளுக்கு உரையெழுதும் பொழுது "எஞ்ஞான்றும் தன் நிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி வாழாமையும்" என்று விளக்கினுர்.

பொய்யில் புலவரும், "மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னுர், உயிர் நீப்பர் மானம் வரின்" என்ருர். இம்மான உணர்ச்சியில் அக்காலத் தமிழர் மிகச் சிறந்து விளங்கினர். சோழன் செங்கணுனிடம் தோல்வியுற்றுச் சிறைப்பட்ட சேரமான் கணேக்காலிரும்பொறை காவலாளரிடம் குடிக்கத் தண்ணீர் கேட்க, அவர்கள் காலந் தாழ்த்திக் கொணர்ந்தனர். இச்செயல் அவமானத்திற் குரியது என்றுணர்ந்த சேரமான் உயிர் விட்டான். சேரமரபைச் சார்ந்த மற்ருெரு மன்னனுன பெருஞ் சேரலாதன், கரிகாலனுடன் வெண்ணிப் பறந்தலையில் போர் செய்யும்போது, வேல் ஒன்று மார்பில் பாய்ந்து புறம் போந்து புண்ணுண்டாக்கியது. அப்புறப் புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர் துறந்தான் சேரன். மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள் என்பதற்கேற்பக் குடிமக்களும் மானத்துடன் வாழ்ந்து சிறந்தனர்.

புலமை நலம் மிக்க சான்ருேர் பலர் அவ்வப்போது மன்னரைச் சார்ந்து அறிவுரை கூறினர். மன்னர்களும் அவ்வறிவுரைகளேப் பொன்னேபோற் போற்றிப்

பின்பற்றினர். சோழன் நலங்கிள்ளிக்கு உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் அறிவுரை கூறும் போது, "உன் செல்வம் அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை வளர்க்க வேண்டும். அங்ஙனம் நீ அதனைச் செய்யாவிடின், உன்னை நீ பாதுகாவாதவனாவாய்" என்று கூறினார்.

**"அறம் பொருள் இன்பமும் மூன்றும்**
**ஆற்றும் பெருமநின் செல்வம்**
**ஆற்றா மைந்நிற் போற்றா மையே"**

அறவாழ்வில் பற்றுக் கொண்ட மன்னர்கள் கொடை நோக்கில் சிறந்து வாழ்ந்த செய்தியைச் சங்க இலக்கியங்களால் நாம் அறியலாம். அவர்கள் "செல்வத்துப் பயனே ஈதல்" என்பதனை உணர்ந்து ஈத்துவக்கும் ஈரநெஞ்சினராய் விளங்கினர். அம் மன்னர்களின் கொடைத்தன்மை மறுமை நோக்கியது அன்று; பிறர் வறுமை நோக்கியது.

"பிறருக்கு உண்டி (உணவு) கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என நன்றியோடு போற்றினர் புலவர். உண்டிக்கு இன்றியமையாது தேவைப்படுவது நீர். நிலம் பள்ளமான பகுதிகளில் நீரைத் தேக்கி வைத்து உணவுப் பொருள் பெருகச் செய்த சான்றோர் தம் புகழையும் இவ்வுலகில் தேக்கி வைத்தவராவர்; நீர் நிலைகளைப் பாதுகாவாதவர் தமது புகழையும் காவாதவராவர்" எனக் கூறுகிறது ஒரு புறப்பாட்டின் பின்வரும் அடிகள்.

**"நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்மவிவண் தட்டோரே**
**தள்ளாதோர் இவண் தள்ளா தோரே"**

உணவைப்பெருக்கி இல்லிருந்து வாழும் வாழ்க்கை பிறர்க்கு விருந்தோம்பவே என்பதனை நன்கு உணர்ந்தவர்கள் தமிழர். சாவா மருந்தெனினும் தனித்திருந்து உண்ணாத பெருவாழ்வைப் பண்டைப் பனுவல்கள் பெரிதும் பாராட்டி உரைக்கும்.

இல்லறத்தின் இனிமையைப் பலபடப் பாராட்டும் பண்டை இலக்கியங்களில் துறவறத்தின் மேன்மையைக் கூறும் பாடல்களையும் கண்டு மகிழலாம். ''உலகப் பற்றினை விட்டுத் தவநெறியை மேற்கொண்டவரைத் திருமகள் விடாள்; அப்பற்றினை விடாதவரைத் தான் விட்டு விலகுவாள்'' என்பதனை வான்மீகியார் என்னும் புலவர்,

**''விட்டோரை விடாஅள் திருவே**
**விடாஅ தோரிவள் விடப்பட் டோரே''**

என அழகுறக் கூறுகின்றார்.

இவ்வாறு சங்க இலக்கியங்கள் மாசுமறுவற்ற பேரொளியாய் நின்று பெரும்புகழை எய்தின. சங்க காலத்து வாழ்க்கை வேறு அக்கால நூல்கள் வேறு அல்ல என்று கூறும் வகையில் பழங்கால மக்களின் வாழ்க்கையின் விளக்கமாகவே அவ்விலக்கியங்கள் அமைந்திருக்கின்றன. தமிழ் மக்கட்கும் தமிழ் மொழிக்கும் உலக அரங்கில் ஒருபெருமையுண்டு என்று கருதினால் அதற்குக் காரணம் சங்க இலக்கியங்களே என்று துணிந்து கூறலாம். அப்பொற்காலத்துத் தோன்றிய கவிதைகளாம் வைரமணிகளை எட்டுத் தொகை பத்துப்பாட்டு ஆகிய தங்கப் பேழைகளில் கண்டு இன்புறலாம்.

# இரட்டைக் காப்பியங்கள்

சங்க காலத்தில் தமிழ் இலக்கியம் தனிப்பாடல் களாக ஒளிர்ந்தது. சங்க மருவிய காலத்தில் இந்நிலை மாறியது. உலக மகா காவியங்களுள் ஒன்ருன சிலப் பதிகாரம் எனும் செஞ்சொற் காப்பிய மாளிகையைக் கட்டி முடித்தார் இளங்கோவடிகள். அப்பொற்புறு மாளிகையில் கற்புறு கண்ணகியை உலவ விட்டார். சிலப்பதிகாரத்தில் சோழன் வருகிருன், பாண்டியன் வருகிருன், சேரன் வருகிருன். ஆயினும் அவர்களைப் பற்றிய கதையைப் பேசுவது சிலம்பின் நோக்கமன்று. கண்ணகியின் கதை நிகழ்ச்சிக்கே அவர்களைப் பயன் படுத்துகிருர் புலவர். முழுக்க முழுக்க சிலப்பதி காரத்தை ஆட்கொண்டவள் கண்ணகியே. பெண்ணின் பெருமை பேசுவதே சிலம்பின் குறிக்கோள். இதே வழியை இதனுடன் பிறந்த மணிமேகலைக் காப்பிய மும் பின்பற்றுகிறது. வணிக மகனின் வரலாற்றைச் சிலம்பு சிலம்ப, கணிகை மகளின் கதையை மணிமேகலை கூறுகின்றது.

காப்பியம் என்பது தன்னேரில்லாத தலைவனை யுடையதாய் வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத் தல் முதலியவற்றுள் ஒன்றினுல் தொடங்கி நாடு நகர் வருணனைகளைக் கூறி, தலைவனின் காதல், வீரம் முதலியவற்றை உணர்த்திப் பல்சுவைப் பகுதிகளும் தோன்றப் பாடுவது என்பர். இவ்வாறு காப்பிய இலக்கணம் தோன்றுவதற்கு முன்னரே இவ்விரு நூல்களும் தோன்றின. தமிழ் நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையே கதைகளாகக் கொண்டமை இவ்விரு

நூல்களின் பெருமையாகும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்க்கு இரு காப்பியங்கள் தோன்றிய சிறப்பு வேறெம் மொழியிலும் காணுதது. "குடிமக்கள் காப்பியம்" என்னும் சிறப்பிணைப்பெற்ற சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாகவே முகிழ்த்துள்ளது.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்ருவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"

இந்நூலால் அறியக் கிடக்கும் உண்மைகளாம்.

கண்ணகி சோழ நாட்டில் தோன்றி, பாண்டிய நாட்டில் வாழ்விழந்து, சேர நாட்டில் வானவர் வாழ்வு பெறுகிருள். சிலப்பதிகாரக் கதை, தமிழ் நாட்டின் மூன்று நகரங்களிலும் நடைபெறுகிறது. புகார்க் காண்டத்தில் கண்ணகியின் திருமண நிகழ்ச்சியோடு கதை தொடங்குகிறது. கண்ணகிதன் கேள்வன் கோவலன் மாதவியின் கலையால் கவரப்பட்டு அவள் வயமாகின்ருன். பின்னர், கானல்வரிப் பாட்டால் மாதவியைப் பிரிந்து மீண்டும் கண்ணகியைச் சார்ந்து, அவளுடன் மதுரை நோக்கிச் செல்கிருன். இது புகார்க் காண்டச் செய்தியாகும்.

மதுரை மூதூரில் ஆயர்குலச் செல்வி மாதரியின் வீட்டில் தங்கியிருந்த பின் சிலம்பு விற்கச் சென்று, பொன்செய் கொல்லன்தன் சொல் கேட்ட பாண்டியனுல் கொலைக்களப்படுகிருன் கோவலன். இத்தீச் செய்தி கேட்ட கண்ணகி பொங்கியெழுந்து மாறனை வென்று மதுரையைத் தீக்கிரையாக்குகிருள். கீழ்த் திசை வாயிலில் கணவனுடன் நுழைந்த கண்ணகி மேற்றிசை நோக்கி வறிதே பெயர்கின்றவரை நடைபெறும் நிகழ்ச்சியை மதுரைக் காண்டம் கூறுகிறது.

கண்ணகியின் கண்ணீரும் கம்மலேயுமோடு காப்பியத்தை முடிக்க விரும்பவில்லை கவிஞர். அவளுடைய கடவுள் வாழ்வைச் சித்திரிக்க விரும்புகிறார் புலவர். கண்ணகியின் புகழ் மேம்பாட்டுக்குச் சேரனின் வீரத்தைப் பயன்படுத்துகிறார். மலைவளம் காணச் சென்ற சேரன் குன்றக் குறவர், சாத்தனார் ஆகியோர் கூற்றால் கண்ணகியின் சிறப்பை உணர்தலும் பின்னர் இமயமால்வரை சென்று அப்பத்தினித் தெய்வத்திற்குக் கல் கொணர்ந்து கடுவரற் கங்கையில் நீராட்டி வஞ்சிக் கோயிலில் சிலையாக்கித் தொழுதலும் ஆகிய செய்திகளை வஞ்சிக் காண்டம் கூறுகிறது.

மூன்று முக்கியப் பாத்திரங்களைக் கொண்டு முத்தமிழால் இயலும் இக்காப்பியம் மூன்று நாடுகள், மூன்று தலைநகரங்கள், மூன்று ஆறுகளின் சிறப்பியல்புகள், மூன்று கொள்கைகள் ஆகியவை அமைந்து நெஞ்சை அள்ளும் பான்மையுடன் ஒளிர்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட ஒரு நூலேயாயினும் இதன்கண் காணப்பெறும் நிகழ்ச்சிகள் நம் கண்முன் நடைபெறுவது போன்ற உணர்வை எழுப்புகின்றன. இத்தகைய இயல்பினையே "நாடகத் தனிப் பண்பு" (Dramatic Realism) என்பர்.

கண்ணகியின் திருமணக் கோலத்தைக் கண்டு களிப்படைகிறோம்! கோவலனைப் பிரிந்து வருந்தும் போது அவள் நிலைக்கு ஏங்குகிறோம்; கணவனை இழந்து அல்லலுற்று ஆற்றாது அலறித் துடிக்கும்போது நாம் நெஞ்சம் குமுறுகிறோம்; பாண்டிய மன்னனிடம் வழக்குரைக்கும்போது விம்மித மடைகிறோம்; அவள் ஆறாச் சினம் கொண்டு மதுரையை அழல் கொள்ளச் செய்யும் போது நாம் வியப்பும் திகைப்பும் அடைகிறோம்; வஞ்சி

யில் வானவர் வாழ்வு பெறும்போது பெருமிதம் அடை கிறோம். அவள் தெய்வ வடிவிலிருந்து வெளிப்பட்டுத் தோன்றி தோழியருடன் ஆடிப் பாடும்போது நாம் மகிழ்ச்சிக்கடலில் திளைக்கின்றோம்.

இத்தகு நலம் கனிந்த காப்பியத்தை "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" எனப் பாரதி பாடியதில் வியப்பென்ன இருக்கிறது.

## மணிமேகலை

தந்தை கோவலன் கதையைச் சிலம்பு சித்திரிக்க மகள் மணிமேகலையின் மாண்பை "மணிமேகலை" கூறுகிறது. இந்நூல் விழாவறை காதை முதல் பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை ஈருக முப்பது காதைகளை உடையது. இந்நூல், சிலம்பைப் போல் காதைகளாகப் பிரிக்கப்பட்டிருப்பினும் காண் டம் என்னும் பகுப்பு இல்லை. தன் வயிற்றில் பிறந்த மடமகள் மணிமேகலையை மாதவி, "மாபெரும் பத்தினி (கண்ணகி) மகள்" என்றே கூறிப் பெருமகிழ்ச்சி அடைகிறாள்.

மணிமேகலை பருவப் பெண்ணாகச் சிலம்பில் விளங்குவதைத் தொடர்ந்து மணிமேகலைக் காப்பியம் கதையைக் கூறிச் செல்கிறது. இவளுடைய பிறப்பு வளர்ப்பெல்லாம் மீண்டும் மணிமேகலை கூறவில்லை.

**கதை:** கோவலற் குற்றதும் கண்ணகிக்கு நேர்ந்த துன்பமும் மாதவி கூறக் கேட்ட மணிமேகலை கண்ணீர் சிந்துகிறாள். கையிலிருந்த மலர்மாலை கண்ணீரால் நனைகிறது. தூயமலர் பறித்து வரத் தோழி சுதமதி யுடன் மலர்வனம் செல்கிறாள் மணிமேகலை! அங்கே

அவளை உதயகுமரன் சந்தித்துத் தன் காதலை வெளிப் படுத்துகிறான். மணிமேகலா தெய்வம் தோன்றி மணி மேகலையை மணிபல்லவத் தீவிற்குத் தூக்கிச் செல் கிறது. அத்தீவில் புத்த பீடிகையைத் தொழுது தன்பழம் பிறப்பை உணர்ந்த அவள் கைக்கு கோமுகி என்னும் பொய்கையிலிருந்து அமுதசுரபி கிட்டுகிறது. மறு படியும் மணிமேகலா தெய்வம் அவளை விண்வழியாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் கொண்டு சேர்க்கிறது. அங்கே உலகவறவி என்னும் பொதுவிடத்து அமுத சுரபியினால் பசித்தோர்க்கு உணவு அளிக்கின்றாள்.

காயசண்டிகை வடிவிலிருந்த மணிமேகலையைப் பின்தொடர்ந்து உதயகுமரன் காதல்மொழி பேசுகிறான் இதனைக் கண்ணுற்ற வித்யாதரன் தன் மனைவியுடன் அரசகுமரன் போற்றா நெறியுடன் பேசுகிறான் என உணர்ந்து அவனை வாளால் வெட்டிக் கொல்கிறான்.

மகனை இழந்த மாளாத்துயரத்தால் இராசமாதேவி மணிமேகலைக்கு எல்லையற்ற துன்பத்தைத் தருகிறாள். அவை எல்லாவற்றையும் தான் பெற்ற மந்திர வலிமை யால் வென்றுவிடுகிறாள் மேகலை. பின்னர் இராசமா தேவிக்கு நல்லுரை நவின்று அவ்விடத்தைவிட்டுச் செல்கிறாள். முற்பிறவியில் அமுத சுரபியைப் பெற் றிருந்த ஆபுத்திரன், இப்பிறவியில் புண்ணியராசனாக ஆட்சி செய்கிறான் என்பதனை அறவணவடிகள்பால் மணிமேகலை யுணர்ந்து, அவனை அடைந்து அவனுக்கு அவன் முற்பிறவியை அறிவிக்கின்றாள். பின்னர் வஞ்சிநாடு சென்று கண்ணகியின் கோயிலைத் தொழு கின்றாள்.

இறுதியாகக் கச்சியம்பதி நண்ணி அறவணவடி களைக் கண்டு பௌத்தசமய மேன்மைகளை அறிந்து

''பவத்திறம் அறுக'' என நோற்றுத் தவத்தின் பயனை அடைகின்றாள்.

சாத்தனார், சிலப்பதிகாரத்தைப் போலவே தம் காப்பியமும் புதுமையாக விளங்க வேண்டும் எனக் கருதினார். கண்ணகி எனும் குலமகளை இளங்கோ வடிகள் தம் காப்பியத் தலைவி ஆக்கினார்; சாத்தனாரோ கணிகையர் மரபினளான மணிமேகலையையே தம் காப்பியத் தலைவியாக்கிப் பெரும் புரட்சி செய்து விடுகிறார். உயர்வும் தாழ்வும் குலத்தால் இல்லை; குணத்தால் உண்டு என்பதை வற்புறுத்தவே இக் காப்பியம் எழுந்தது என்பர்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ''மணிமேகலை'' செய்த சீர்திருத்தம் போல வேறு எந்த இலக்கியமும் செய்ய வில்லை.

**''கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்**
**உள்ளக் களவும் என்று உரவோர் துறந்தவை**
**தலைமையாக் கொண்டநின் தலைமையில் வாழ்க்கை**
**தலைமை என்று அஞ்சிப் போந்த பூங்கொடி''**

என்று சாத்தனார் ''பரத்தை ஒழிப்பு, மது ஒழிப்பு, களவொழிப்பு, கொலையொழிப்பு முதலியவற்றை ஒருங்கு வைத்து எடுத்துணர்த்தி, மணிமேகலை சீர் திருத்தக் காப்பியமே என நிறுவுதல் இங்குக் குறிப் பிடத்தக்கதாகும்''

''எப்படிப்பட்டவரையும் திருத்த முடியும் என்ற நம்பிக்கையை எழுப்புவது மணிமேகலையின் தனிச் சிறப்பு ஆகும். உதயகுமரன் கொலையுண்டதால் சீறி, மணிமேகலையை அழிப்பதற்கு முயன்ற அரசமாதேவி திருந்தி விடுகிறாள். சிறைக்கோட்டங்கள் வைத்துத்

தண்டனை வழங்கிய அரசன் திருந்தி அவற்றை அறக் கோட்டங்களாக மாற்றும் திருந்திய உள்ளத்தவனு கிருன். உதயகுமரனை ஏவிய மணிமேகலையின் பாட்டி யாகிய சித்திராபதிகூடத் திருந்தி நல்வழிப் படுகிருள். நாகர் தலைவன் கள், காமம், புலால் தவிர்ந்து திருந்தி விடுகிருன். இவ்வாறு, திருத்த முடியாது என்று கருதுகிறவர்களையும் திருத்த முடியும் என்ற நம்பிக்கை யூட்டுவதில் தலைசிறந்த காப்பியம் எனலாம்!"

உதயகுமரனின் வருகை பழைய பிறப்பின் தொடர்பை நினைவுபடுத்தவேயாம். அவன் வருதலும் மணிமேகலையிடம் காதல் கொள்ளுவதும், அவளை அடைய முடியாது வருந்துவதும் சினம் கொண்டு மணிமேகலையைப் பழிப்பதும் ஆகிய நிகழ்ச்சிகள் மணிமேகலையின் உள்ள உறுதியைப் புலப்படுத்தவே பயன்படுகின்றன. தன்னைப் பழித்த உதயகுமரனிடம் தன்னெஞ்சம் நாடுவதை, "இதுவோ அன்னுய் காமத் தியற்கை!" என்ற மணிமேகலையின் கூற்ருல் அறி கிருேம். ஆயினும் உடனே தன்னுள்ளத்தை உரன் என்னும் தோட்டியால் அடக்கி "இதுவேயாயின் கெடுக அதன் திறம்" எனக் கூறிக் காமனையும் வென்று விடுகிருள் அக்காரிகை.

"சிலப்பதிகாரத்தில் கண்ணகியைக் காப்பியத் தலைவியாக்கிய இளங்கோ, மூன்று தலைநகரங்களுக் கும் செல்வதாக அமைத்து வானகம் அடைந்ததாகச் செய்தார். சாத்தனுரோ பலி எங்கெங்குத் தோன்று கிறதோ அங்கங்கு எல்லாம் சென்று அமுதசுரபியைக் கொண்டு அறப்பணி செய்யும் தவச் செல்வியாக மணிமேகலையைக் காட்டியுள்ளார்"

மணிமேகலை பசிக்கொடுமையைத் தொலைக்கிறாள்; சாதுவன் மதுவை ஒழிக்கின்றான்; ஆபுத்திரன் சாதியைச் சாடுகின்றான். இவ்வாறு காப்பியத்துள் பல மாந்தரை உலவவிட்டுத் தம் காப்பியத்தையே ஒரு புரட்சிக் காப்பியமாக அமைத்த ஆசிரியர் திறம் வியக்கற்பாலது. மக்கட்கு இன்றியமையாத உணவு, உடை, உறையுள் இவற்றை அளிப்பதே நல்லறம் என்பதனை இந்நூல்

**"………மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டதில்"**

என அறிவுறுத்துகிறது.

# பக்தி இலக்கியம்

(Sep '62 April '63)

முன்னுரை: கி. பி. 3 ஆம் நூற்றுண்டு முதல் 6 ஆம் நூற்றுண்டு வரை தமிழ் நாட்டின் வரலாறு அறியமுடியவில்லே. அந்தக் கால எல்லேயில் தமிழரல்லாத வேற்று இனத்தார் (களப்பிரர்) தமிழகத்தை ஆட்சி புரிந்தனர் என்றும், அவர்கள் பண்டைத் தமிழ் நாட்டின் பண்பியலேச் சிதைத்தனர் என்றும், ஆராய்ச்சியாளர் கூறுவர். தமிழரின் மேன்மைக்குரிய இலக்கியங்கள் ஒன்றேனும் அவ்விடைக் காலத்தில் தோன்றவில்லே என்பதை யுணரும்போது அக்காலத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பாலே என்றே கூறத் தோன்றுகிறது. தமிழ் நாட்டினேப் பற்றி ஒன்றுமே அறிய முடியாத அந்த இருண்ட காலத்திற்கு முடிவில் சைவ சமயமும் வைணவ சமயமும் மறுமலர்ச்சியுறத் தொடங்கின. தமிழிலக்கியம் அதுவரை இல்லாத புதிய போக்கில் — பக்தித் துறையில் வளர்ந்து பெருகலாயிற்று. இந்த அரிய தொண்டினே ஆற்றிய பெருமை சைவ வைணவ சமயாசிரியர் களேச் சாரும்.

மக்களோடு தொடர்பு கொண்ட சமயச் சான்ருேர் பக்தர் புடை சூழ, திருத்தலங்கள்தோறும் சென்று ஆண்டவனேத் தொழுது பரவசமுற்றுப் பண்ணேடியைந்த பாடல்களேப் பாடி, மக்களிடையே புதியதோர் வாழ்க்கை முறையைத் தோற்றுவித்தனர். புறச் சமயமாகிய சமண சமயம் மன்னரைச் சார்ந்து நிற்க, அகச் சமயங்கள் இவ்வாறு மக்களிடையே வளரலா

யின. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பக்திப் பாடல்கள் மக்களிடையே புதிய உற்சாகத்தையும் எழுச்சியையும் தோற்றுவித்தன. பெரியதோர் யுகப்புரட்சி போலத் தமிழகமெங்கும் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடியது.

**சைவ இலக்கியங்கள்:** சைவ சமயம் தமிழ் நாட்டின் பழைமையான சமயங்களுள் ஒன்று. சிவனையே தென்னாடுடைய 'சிவன்' என்று போற்றுவது மரபு. இச்சீரிய சமயத்தை வளர்த்த சிவனடியார்கள் மிகப் பலர். அவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகிய நால்வரும், சிறப்பாகப் பாமாலைகளால் இறைவனை அழகு செய்து சிறப்புப் பெற்றவர்.

**திருஞானசம்பந்தர்:** ஞானத்தின் திருவுருவாகவும் நான்மறையின் தனித் துணையாகவும் தோன்றிய ஞானசம்பந்தர் சீர்காழியில் அவதரித்தார். இவர்தம் மூன்றும் ஆண்டிலேயே உமையம்மையிடம் ஞானப்பால் உண்டு சிவஞானம் பெற்றார். இவருடைய தேவாரப் பாடல்கள் 1, 2, 3 ஆம் [redacted] திருமுறைகளாக வகுக்கப் பட்டுள்ளன. தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவையாகிய மங்கையர்க்கரசியார், இவருடைய உதவி கொண்டு தன் கணவனைச் சமண சமயத்தினின்றும் சைவசமயத்திற்கு மாறச் செய்தார் என்பதை அறிகிறோம். நாளும் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தருடைய பதிகங்களில் பல பா வகைகள் கலந்து பக்தி மணம் கமழ்வதைக்கற்பார் உணர்வர். இத்தமிழ் விரகருடைய பக்திப் பாடல்களில் இயற்கை வருணனைகளைக் காணலாம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்டைம் மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில் பார்க்குந் திருவையாறே''

எனும் பாடலில் இயற்கை அன்னை களிநடம் புரிவதைக் காண்க. இவர் பாடியவற்றுள் 3840 பாடல்களே கிடைத்துள்ளன. தமிழ் ஞானசம்பந்தராகிய இவரு டைய பாடல்களை வேதங்களின் சாரம் எனப் போற்று வர் சைவச் சான்றோர்.

**திருநாவுக்கரசர்:** இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் தோன்றியவர். இளமையில் சைவராக இருந்து, பின் சமண சமயத்தைச் சார்ந்து மீண்டும் சைவ சமயத் தலைமணியாய்த் திகழ்ந்தவர். இவரும் ஞானசம்பந்தரும் ஒரே காலத்தவர். உலகு ஏத்தும் உழவாரப் படையாளியாகிய இவர், சிவதலங்கள் தோறும் சென்று பணி புரிந்து சிவபெருமானைப் பாடி மகிழ்ந்தார். இவருடைய பாடல்கள் 4, 5, 6 ஆம் திரு முறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

வாழ்க்கையில் சொல்லொணுத் துன்பங்களை அனு பவித்த நாவுக்கரசர் 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என அஞ்சா நெஞ்சினராய்த் திகழ்ந்து துன்பங்களை வென்றார். பல்லவ மன்னன் இவரை நீற்றறையில் இட்டபோது இவர் பாடிய,

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே''

எனும் பாடல் இவரது திண்ணிய உறுதியையும் ஈசன் கழலின் சிறப்பையும் ஒருங்கே உணர்த்துகின்றது.

இவர் பாடிய பதிகங்கள் 49000 என்பர். திருத் தாண்டகம் எனும் புதிய பா முறையைக் கையாண்ட மையால் இவர் "தாண்டக வேந்தர்" என்னும் பெய ரைப் பெற்ருர். மருள் நீக்கியார் எனும் இயற்பெயர் பெற்ற இவரைச் சம்பந்தர் 'அப்பரே' என அழைத்தார்; இறைவனுரோ நாவுக்கரசர் எனும் பெயரைச் சூட்டி ஞர். பெற்ற பெயருக்கேற்ப இவரும் இனிய பாடல் களை அருளிச் செய்தார்.

கங்கை, பாம்பு, பிறை ஆகியவற்றைத் தலையில் அணிந்தவன் சிவபெருமான். மேலும் பிரமனின் தலையை மாலையாகச் சூடியவர் அப்பெம்மான். அவர் அணிந்த இப்பொருள்களைப் பார்த்து நகைச்சுவை படப் பாடுகிருர் அப்பர். பரமனின் தலையில் உள்ள படமெடுத்தாடும் பாம்பைக் கண்டு அஞ்சுகிருள் கங்கை என்னும் நங்கை. ஆனல் அப்பாம்போ, தன் னைக் கிழித்துக் கொல்ல வரும் மயிலோ என அவளது சாயலைக் கண்டு அஞ்சுகிறது. இந்நிலையில் அப் பாம்பைப் பார்த்த சந்திரன், தன்னை விழுங்க வரும் இராகு எனக் கருதி அஞ்சுகிறது. இக்காட்சியெலாம் கண்ட பிரமனது தலை சிரித்தது. இவற்றைச் சித்திரிக் கும் பாடல் வருமாறு:

"கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே"

நகைச்சுவை தோன்ற அமைந்த இப்பாட்டு ஓர் உண்மையை உணர்த்துகிறது. அதாவது சிவபெரு

மான் இவ்வாறு தன்மையால் மாறுபட்ட பொருள்களையும் ஒன்று கூட்டிப் பொருந்தச் செய்கிறார் என்பதே அது.

**சுந்தரர்:** இவர் அப்பர் பிறந்த திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் அவதரித்தவர். பெரிய புராணத்தின் தலைவராக இவரைச் சைவச்சான்றோர் போற்றுவர். இறைவனால் தடுத்தாட் கொள்ளப் பெற்ற இவருடைய தேவாரப் பாடல்கள் 7 ஆம் திருமுறையாக விளங்குகின்றன.

சுந்தரத் தமிழில் இவர் பாடிய பாடல்களைப் பிற்காலத்தவர் "சுந்தரர் தமிழ்" எனப் போற்றி வருகின்றனர். திருத்தலத்தின் இயற்கை அழகை வருணிப்பதில் இவர் வல்லவர்.

**"அரும்புயர்ந்த அரவிந்தத் தணிமலர்க ளேறி**
**அன்னங்கள் விளையாடும் அகன்துறையி னருகே**
**கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்**
**கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே"**

என்னும் இப்பாட்டு இயற்கை வருணனைக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

தலங்கள்தோறும் சென்று சிவபிரானது புகழைப் பாடிய தமிழ் நாதனாகிய இவருக்கு வன்தொண்டர், தம்பிரான் தோழர் என்னும் பெயர்களும் உண்டு. இவர் ஏறத்தாழ 4000 பதிகங்கள் பாடினார் என்பர். இவருடைய திருத்தொண்டர் தொகையை அடிப்படையாகக் கொண்டே சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடியருளினார்.

ஏழு எட்டு ஒன்பதாம் நூற்ருண்டுகளில் தமிழ் நாடு பெற்ற மேன்மையின் அடையாளமாக மூவர் பாடிய தேவாரப் பாடல்கள் விளங்குகின்றன.

**மாணிக்கவாசகர்:** பாண்டிய நாட்டில் திருவாத வூரில் பிறந்து அமைச்சராக விளங்கியவர் இவர். அமைச்சராக இருந்தபோது குதிரை வாங்கக் கொண்டுசென்ற பொருளையெல்லாம் இறைவனுக்குக் கோயிலாக்கி மகிழ்ந்தவர். இவர் பொருட்டு இறைவன் பிட்டுக்கு மண் சுமந்தார்; பிரம்படி பட்டார்.

இறைவனது அருட்செயலை வியந்து மாணிக்கவாச கர் ஊன் உருக உள்ளம் உருக உயிர் உருகத் திருவாச கம் பாடியருளினுர். பிறமொழியாளர்களையும் தம்பால் ஈர்த்து நெஞ்சு நெகிழச் செய்த பெருமை இந்நூலுக்கு உண்டு. காதலாகிக் கசிந்து உருகிக் கண்ணீர் மல்கி ஞல் இறைவனைக் காணமுடியும் என உலகிற்கு உணர்த் திஞர் மாணிக்கவாசகர். இறைவன் மாட்டு நிலைத்து நிற்காத தம் நெஞ்சை இவர் கடிந்து கொண்ட பாடல் நெஞ்சை நிலைக்கச் செய்வதாகும்;

**"ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற்கன்பிலை என்புருகிப்**
**பாடுகின்றிலை பதைப்பதும் செய்கலை பணிகிலை பாதமலர்**
**சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணிநெஞ்சே**
**தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்**
**றறியேனே."**

இராமலிங்கர், தாயுமானவர் போன்ற சான்ருேர்க்கு மாணிக்கவாசகர் திருவாசகம் வழிகாட்டியாக அமைந்தது.

மாணிக்கவாசகர் பாடி அருளிய திருக்கோவையார் எனும் மற்றொரு நூல் கோவை இலக்கியங்களுக்கு

முன்னோடியாக விளங்குவதாம். அதுவே கோவை நூல் களுள் தலை சிறந்ததாகும். பேரின்பக் கருத்தும் சிற்றின்பக் கருத்தும் பொருந்தியுள்ள இந்நூற் பெருமையைப் பேராசிரியர் உரையால் உணரலாம். இவை இரண்டும் 8-ஆம் திருமுறை ஆகும்.

நால்வர் அருளிய பக்தி நூல்களைத் தவிர மேலும் பல நூல்கள் உள்ளன.

திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், கண்டராதித்தர், பூந்துருத்தி நம்பி, காட வரம்பி, வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் பாடிய பக்திப் பாடல்கள் ஒன்பதாம் திருமுறையாக விளங்குகின்றன.

திருமூலருடைய திருமந்திரம் பத்தாம் திருமுறை யாகும். காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் நாயனார், கல்லாடனார், நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர் ஆகியோர் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையாகும்.

சேக்கிழாருடைய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை எனப் போற்றப்படுகிறது.

## வைணவ இலக்கியங்கள்

சைவச் சான்றோர்களின் பன்னிரு திருமுறைகளைப் போலவே வைணவப் பெரியோர்களின் நாலாயிர திவ்யப்பிரபந்தம் பெரிதும் பாராட்டப் பெறுகின்றது.

வைணவ சமயம் இந்நாட்டின் பழம்பெரும் சமய மாகும். திருமால் வழிபாட்டைத் தமிழ் மொழியில்

கிடைத்த முதன் முழு நூலாகிய தொல்காப்பியத்தால் உணரலாம். பரிபாடலும் பரந்தாமனின் புகழைப் பறைசாற்றுகிறது. திருமால் சீர்போற்ற ஆறு, ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றுண்டுகளில் பன்னிரு ஆழ் வார்கள் தோன்றினர்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், குலசேகராழ்வார். தொண்டரடிப்பொடி யாழ்வார், திருப்பாணுழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவி யாழ்வார் ஆகிய பன்னிருவர் பாடிய அமுதப் பாக்களின் தொகுப்பே நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் எனப்படும். நாதமுனி என்னும் சான்ருேர் இதனைத் தொகுத்தவராவர். இத்தொகுப்பு முதலா யிரம், பெரிய திருமொழி, இயற்பாயிரம், திருவாய் மொழி என நான்கு பிரிவுகளாக விளங்குகிறது. நம் மாழ்வாரும் திருமங்கையாழ்வாருமே இதில் மிகுதி யான பாடல்களைப் பாடி அருளினர். பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் முதலாழ்வார் என அழைக்கப்படுவர்.

## முதலாழ்வார்கள்

**பொய்கையாழ்வார் :** கச்சியம் பகுதியில் பொற் ருமரைப் பொய்கையில் தோன்றிய காரணத் தால் பொய்கையார் என்னும் பெயர் பெற்ருர் திருமாலின் பாஞ்ச சன்னியம் என்னும் சங்கத்தின் அம்சமான இவர், பகவத் பக்தி நிறைந்த "முதல் திருவந்தாதி" என்னும் நூறு பாசுரங்களைப் பாடி யுள்ளார்.

**பூதத்தாழ்வார் :** மகாபலிபுரத்தில் தோன்றிய இவர், திருமாலது கதாயுத அம்சமாவார். இவ்வுடலின் ஐம் பெரும் பூதங்களுமே திருமால்தான் என்று கொண்ட திடநம்பிக்கையின் காரணமாக இவர் பூதத்தாழ்வார் எனப்பட்டார். இவர் 'இரண்டாம் திருவந்தாதி' என்னும் நூறு பாசுரங்களைப் பாடியுள்ளார்.

**பேயாழ்வார் :** சென்னை மயிலாப்பூரில் தோன்றியவர். இவர் பக்தி மேலீட்டால் பாடுதல், ஆடுதல், அழுதல், சிரித்தல் முதலான செயல்களைச் செய்தமையால் இப்பெயர் பெற்றார். இவர் மூன்றும் திருவந்தாதியைப் பாடி யருளினர்.

இம்மூவரும் ஒரே காலத்தவராவர். இம்மூவருக்கும் திருமால் திருக்கோவலூரில் காட்சியருளினர் என்பர்.

**திருமழிசையாழ்வார் :** சென்னையை அடுத்த திருமழிசையில் தோன்றிய இவர் நாராயணனின் 'திருவாழி' அம்சமானவர். பேயாழ்வாரிடம் உபதேசம் பெற்றவர். காஞ்சிப் பல்லவன் இவரை இகழ்ந்தபோது தம் சீடர் கணிகண்ணனுடன் திருமாலையும் அழைத்துக் கொண்டு போன செய்தியைப் பின்வரும் பாட்டால் அறியலாம்.

**''கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டா—துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும் உன்றன்**
**பைந் நாகப் பாய் சுருட்டிக் கொள்.''**

திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி என்பனவற்றை இவர் பாடினர்.

**பெரியாழ்வார் :** சீவில்லிபுத்தூரில் பிறந்தவர் இவர். 'பட்டர் பிரான், விஷ்ணுசித்தன்' என்ற பெயர்களும் இவருக்கு உண்டு. ஆண்டாளை வளர்த்தவரும் இவரே. திருமொழி, திருப்பல்லாண்டு, என்பவை இவர் இயற்றியவை. கண்ணபிரானது பிறப்பு வளர்ப்பு முதலிய செய்திகளைத் திருமொழியில் கண்டு இன்புறலாம்.

**ஸ்ரீ ஆண்டாள் :** இவரைக் கோதை என்றும், சூடிக் கொடுத்த நாச்சியார் என்றும் அழைப்பர். 'நாச்சியார் திருமொழி, திருப்பாவை' என்ற நூல்களை அருளியவர் இவரே. 'மானிடர்க்கு என்று பேச்சுப் படில் வாழ்கிலேன்' என்ற திண்ணிய மனம் கொண்டு தாமோதரனையே மணந்த இச் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' இறைவனைக் காதலனாகவும், தன்னைக் காதலியாகவும் நினைத்துப் பாடி மகிழ்ந்தார். இவருடைய பாடல்கள் தமிழ் இலக்கியப் பூங்காவில் என்றும் வாடாத வண்ண மலர்கள் ஆகும்.

**தொண்டரடிப் பொடியாழ்வார் :** சோழ வளநாட்டில் மாங்குடியில் தோன்றியவர். இவரது இயற்பெயர் விப்ரநாராயணர் என்பதாகும். இவர் நாராயணனின் வனமாலை அம்சமாவார். திருமாலை, திருப்பள்ளி எழுச்சி என்பன இவர் பாடியவை.

**''ஊரிலேன் காணி இல்லை உறவு மற்றொருவர் இல்லை**
**பாரில் நின்பாதமூலம் பற்றினேன் பரமமூர்த்தி**
**காரொளி வண்ண னேஎன் கண்ணனே கதறுகின்றேன்**
**ஆருளர் களைகண் அம்மா அரங்கமா நகருளானே''**

என்ற இவருடைய பாடல் கற்பார் நெஞ்சைக் கனியச் செய்யும் பான்மையுடையது.

**திருமங்கையாழ்வார்:** இவர் திருக்குறையலூரில் கள்ளர் மரபில் தோன்றியவர் என்பர். இவர் இயற்றிய நூல்கள் சிறிய திருமடல், பெரிய திருமடல், திருக் குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, பெரிய திருமொழி என்பனவாம். திரு மால் அடியார்க்குத் தொண்டு செய்ய வழிப்பறி செய் யும்போது திருமாலால் ஆட்கொள்ளப்பட்டார். "பொய் வண்ணம் மனத் தகற்றிஞல் மெய்வண்ணனைக் காண லாம்" என்பது இவர் நம்பிக்கை. தன்னை நாயகி யாகவும் பகவானை நாயகனுகவும் பாவித்து நாயக நாயகி பாவத்தில் இறைவனை அனுபவித்த பெருமை இவரைச் சாரும்.

**திருப்பாணாழ்வார்:—** சோழ வளநாட்டில் உறை யூரில் நாராயணனின் ஸ்ரீவத்ஸாம்சமாகிய இவர் பாணர் மரபில் தோன்றினர். 'அமலனுதி பிரான்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினர். கொண்டல் வண் ணனைக் கண்டு மனம் நெகிழ்ந்து பாடிப் பரவச மடைந்தார் இவர்.

**குலசேகர ஆழ்வார்:—** பெருமாள் திருமொழி என் னும் நூல் அருளிய இவர். திருவஞ்சைக் களத்தில் சேர மரபில் தோன்றியவர். பெருமாள், குல சேகரப் பெரு மாள் என்ற பெயர்களாலும் இவர் அழைக்கப்படு கிருர். 'சரணுகதித் தத்துவம்' இவரது பாடலில் சிறப்பாகச் சித்திரிக்கப்படுகிறது.

**"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்**
**மீளாத்துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ**
**ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே."**

**நம்மாழ்வார்:—** ஆழ்வார்களுள் தலை சிறந்த இவர் பாண்டிய நாட்டில் திருமாலின் அவதாரமேயென ஆழ்வார் திருநகரியில் தோன்றியவர். சடகோபன், பராங்குசன், குருக்கைக் காவலன், காரிமாறன், தமிழ் மாறன், வகுளா பரணன் முதலிய பெயர்களும் இவருக்கு உண்டு.

''ரிக், யஜுர், அதர்வணம் என்னும் மூன்று வேதங்களின் சாரமாக முறையே திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற மூன்று தமிழ்ப் பிரபந்தங்களைச் செய்து 'திருவாய்மொழி' என்னும் நூல் மூலமாகச் சாமவேதத்தை உலகோர் அறியும்படி உதவியவர். இவ்விதம் வடமொழியில் உள்ள வேதத்தைத் தமிழில் யாவரும் அறியும்படி பாசுரங்களாகச் செய்தமையால் எல்லாரும் நம்மாழ்வார் எனப் புகழ்ந்தனர்.''

**மதுரகவியாழ்வார்:—** பூவையும், காயாவும், நீலமும் பூக்கின்ற காவி மலரும் மற்றும் அனைத்தும் பிரான் உருவே என்ற உண்மையை உணர்த்தியவர் மதுரகவியாழ்வார். நம்மாழ்வாரின் சீடரான இவர் பாண்டி நாட்டுத் திருக்கோளூரைச் சார்ந்தவர். 'கண்ணிநுண் சிறுதாம்பு' என்ற சிறந்த பிரபந்தத்தை அருளியுள்ளார். நம்மாழ்வாரே தம் கண்கண்ட கடவுள் என்ற நம்பிக்கை மிக்கவர். செவிக்கினிய சிந்தைக்கினிய பாடல்களைப் பாடிய காரணத்தால் மதுரகவியார் எனப் பெயர் பெற்றார்.

மேற்குறித்த பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிரதிவ்யப் பிரபந்தங்களுக்கும் பெரிய வாச்சான் பிள்ளை உரை எழுதியிருக்கிறார்.

இவ்வாறு தமிழையும் சமயத்தையும் ஒன்ருக இழைத்துச் சைவச் சான்ருேர்களும் வைணவப் பெரியோர்களும் தமிழ் நாட்டில் பக்தி மார்க்கத்தைத் தோற்றுவித்தனர். அவர்தம் தெய்வப் பாடல்கள் வாழ்க்கைக்கு ஒழுக்க நெறியைக் காட்டி மன இருளைப் போக்கும் மாண்பு படைத்தவைகளாக விளங்குகின்றன.

# காப்பியங்கள்*

(Sep '61, '62, Sep '65)

சங்க காலத்தில் காப்பியங்கள் இருந்தனவாக அறிகிறோம். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் செய்யுளியல் என்ற பகுதியில் வனப்பு வண்ணம் என்பனவற்றிற்குப் பல காப்பியங்களை எடுத்துக் காட்டுகின்றனர் உரையாசியர் பலர். இக்காப்பியங்கள் பிற்கால நூல்களேயாயினும், இலக்கணப் புலவன் தன் காலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டே இலக்கணத்தை வரையறை செய்வான். இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல் இயல்பாதலின் தொல்காப்பியம் தமக்கும் முற்பட்ட காப்பியங்களைக் கண்டே காப்பியத்தின் இலக்கணங்களாக வனப்பு, வண்ணம் என்பனவற்றைக் கூறுகிறது எனக் கருதலாம்.

ஆகவே, பழங்காப்பியங்களின் அடிச்சுவட்டை அறிகிறோமேயன்றி அதன் உருவத்தைக் காணமுடியவில்லை.

தனித்தனிப் பாடல்களாகப் பாடும் சங்க கால நிலை மாறிக் கிறித்துவ சகாப்தத்தின் துவக்கத்தின்போது நமது மொழி அழியாத காப்பியத்தைப் பெற்றுவிட்டது. சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியமே தமிழில் முதல் காப்பியம் என்ற பெருமையைப் பெறுகிறது. இதனைத் தொடர்ந்து மணிமேகலை தோன்றியது. பின்னர், சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் நூல்கள் தோன்றின. இவ்

---

* இத்துடன் சிலப்பதிகாரக் கட்டுரையையும் இரட்டைக்காப்பியங்கள் என்னும் தலைப்பில் உள்ள மணிமேகலையையும் சேர்த்துப் படிக்கவும்.

வைந்தும் ஐம்பெருங்காப்பியம் என்று பாராட்டப் பெறுகின்றன. இவ்வாறே, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகிய ஐந்து நூல்களைச் சேர்த்து ஐஞ்சிறு காப்பியங்களாக அமைத்தனர்.

சீவகசிந்தாமணி: இடைக்காலத்தில் தமிழ் இலக்கியப் போக்கையே மாற்றி ஒரு புதுத் திருப்பத்தை ஏற்படுத்தியது சீவகசிந்தாமணியே. ஈடும் இணையும் இல்லா இப்பெருங்காப்பியமே தமிழ் மொழியில் விருத்தப் பாவால் ஆன முதல் காப்பியம் ஆகும். இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர். காப்பியத் தலைவனாகிய சீவகன் மகளிர் எண்மரை மணந்து கொண்ட செய்தி பரவலாகக் கூறப்படுவதால் இந்நூலுக்கு மணநூல் என்ற பெயரும் ஏற்படுவதாயிற்று. இந்நூல் பதின்மூன்று இலம்பகங்களாக இயலுகின்றது.

ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் சிற்றின்பத்தில் மூழ்கி மனைவி விசயையின் அந்தப்புரத்திலேயே காலங் கழிக்கின்றான். கட்டியங்காரன் என்னும் அமைச்சன் தன்னைக் கொல்லத் திருமணம் பார்ப்பதை உணர்ந்த மன்னன் மனைவியை மயிற்பொறியில் ஏற்றி அனுப்புகிறான். மன்னன் கொல்லப்படுகிறான். கட்டியங்காரனின் வெற்றிமுரசு மயிற்பொறியில் பறந்து செல்லும் விசயையின் காதில் விழுகிறது. தன்னிலை சோர்ந்தாள்; தளர்ந்தாள். மயிற்பொறி இடுகாட்டில் இறங்கிற்று. அங்கே பிறந்தான் காப்பியத் தலைவனான சீவகன். தமிழ் இலக்கியத்தில் சுடுகாட்டில் பிறந்த நாயகன் இவனே! கந்துக் கடன் என்னும் வணிகன் அவனை வளர்த்தான்.

சீவகன், காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனக மாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற மகளிர் எண்மரை மணந்தான். பின்னர் ஏமாங்கத நாடு சென்று கட்டியங்காரனை வென்று நாட்டைக் கைப்பற்றி இனிது ஆண்டு, இறுதியில் துறவறத்தை மேற்கொண்டான்.

இன்பச் சுவை மலிந்த காப்பியமே யாயினும், துறவின் சிறப்பே இந்நூலிலுள் வற்புறுத்தப் பெறுகின்றது. முத்தி இலம்பகம் இதற்குச் சான்று பகரும். கற்பனை வளத்திற்கும் கருத்துச் செறிவுக்கும் இந்நூலுக்கு இணையாகத் தமிழ்மொழியில் இரண்டொரு நூல்களையே குறிப்பிட முடியும்.

சீவகன் எண்மரை மணந்து இல்லறம் நடத்திய போதிலும், தந்தை சச்சந்தனைப் போல் காமுகனாய் மாறிக் கருத்தழியவில்லை. தன்னுடன் இல்லறம் புரியும் மகளிர்க்கு நம்பி கூறிய நல்லறத்தைக் கேண்மின்.

**"திருந்திய நல்லறச் செம்பொற் கற்பகம்**
**பொருந்திய பொருளொடு போகம் பூத்தலால்**
**வருந்தினும் அறந்திறம் மறத்தல் ஓம்புமின்**
**கரும்பெனத் திரண்டதோள் காலவேல் கணீர்."**

இயற்கைக் காட்சிகளை எழிலுறக் காட்டும் திறம் உடையவர் தேவர். வண்ணமலர் பூத்துக்குலுங்கும் இயற்கையன்னைக்குப் புலவன் சூடிய சொன்மாலையைக் காணுங்கள்.

**"வண்டுதுயில் கொண்டுகுயில் ஆலிமயில் அகவி**
**விண்டுமது விட்டுவரி போதுபல பொதுளி**
**கொண்டு தளிர் வேய்ந்து சினை தாழ்ந்துநனை ஆர்ந்தென்**
**றுண்டுபொழில் இமையவர்கள் உலகமுறு வதுவே."**

சமண சமயக் கருத்துக்களை இந்நூலில் எங்கும் காணலாம்.

**வளையாபதி:** இந்நூல் கிடைக்கவில்லை. வைசிய புராணமே வளையாபதிக் கதையைக் கூறுகிறது. நவ கோடி நாராயணன் என்ற வைர வியாபாரிக்கு மனைவி யர் இருவர். இளையவள் வேறு குலத்தைச் சார்ந்தவள். ஊரவரின் கட்டளையால் இரண்டாம் மனைவியைத் துரத்தி விட்டான். அவள் வீட்டை விட்டு வெளியேறிய போது கருவுற்றிருந்தாள். அவளுக்கு சில நாட்களில் ஆண் மகவு பிறந்து வளர்ந்தது. ஒரு நாள் தன் தாயை நோக்கித் தந்தை யார் எனக் கேட்டான் மகன். அவள் உண்மையை உரைத்தாள். உடனே அவன் தன் தந்தை நவகோடி நாராயணனிடம் சென்று தான் அவன் மகன் என்பதை அறிவிக்க அவனோ ஏற்க மறுத் தான். பின்னர் காளிதேவியின் அருளால் உண்மை உணர்ந்த தந்தை, அம்மகனுக்குப் பெரும் செல்வம் கொடுத்து வாணிபத்தில் ஈடுபடச் செய்தான்.

புறத் திரட்டிலும் யாப்பருங்கல விருத்தியிலும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களின் உரைகளிலும் காணப்படும் வளையாபதியின் பாடல் களின் எண்ணிக்கை 72. இவையே நமக்குக் கிடைப் பவை.

இந்நூலாசிரியர் சமண சமயத்தவர். மக்கட் செல் வத்தின் மாண்பை இந்நூல்,

> ''பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமைவேத்
> துறையிலா வனசவாவி துகிலிலாக் கோலத்தூய்மை
> நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
> சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே''

என்று பாராட்டுகிறது.

**குண்டலகேசி:** இதன் ஆசிரியர் நாகுதத்தனுர் என் பவராவர். இந்நூல் பௌத்த சமயத்தைத் தழுவியது.

இராசகிருகம் என்ற நாட்டு அமைச்சனின் மகள் பத்திரை. இவள் கள்வனெருவனைக் கண்டு காதலித் துத் திருமணம் செய்து கொண்டாள். ஒருநாள் அவர் களிடையே ஊடல் நேர்ந்தது. பத்திரை நாகாவாமல் கணவனைக் கள்வன் என்று கூறிவிட்டாள். கடுஞ்சினம் உற்ற அவன் அவளைக் கொல்லக் கருதி மலையுச்சிக்கு அழைத்துச் சென்ருன். அவனுடைய வஞ்சக எண் ணத்தை உணர்ந்த பத்திரை தந்திரமாக அவனையே மலையுச்சியில் இருந்து கீழே தள்ளிக் கொன்று விட் டாள்.

பிறகு துயர் தாங்காது வாழ்க்கையில் வெறுப் புற்றுச் சமணத் துறவியானுள். சாரிபுத்தர் என்ற பௌத்தத் துறவிடம் வாதம் புரிந்து தோல்வியுற்ற பின்னர் பௌத்த சமயத்தைச் சார்ந்தாள்.

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகிய வற்றைப் பின்வரும் இந்நூற் பாட்டு அழகாக எடுத் துரைக்கின்றது.

> **''பாளையாம் தன்மை செத்தும் பாலனும் தன்மை செத்தும்**
> **காளையாம் தன்மை செத்தும் காமுறு இளமை செத்தும்**
> **மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரு மூப்பு மாகி**
> **நாளுநாள் சாகின் ருமால் நமக்குநாம் அழாததென்னே!''**

**பெருங்கதை:** களப்பிரர் காலத்தில் தோன்றிய நூல் இது. உதயணன் என்னும் மன்னனுடைய வர லாற்றைக் கூறும் இந்நூலை இயற்றியவர் கொங்கு வேளிர் என்னும் சமணராவர். ஆசிரியப்பாவால் ஆன இந்நூல் உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம்,

மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என்னும் ஐந்து பகுதிகளையுடையது.

இந்நூற்கண் ஆட்சி முறை, அமைச்சர் இயல்பு, நண்பர் கடமை, சமண சமயச் சிறப்பு ஆகியவற்றைக் காணலாம். சொல்லழகும் பொருளழகும் கொண்டு விளங்குகிறது இந்நூல். இது ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டிருப்பினும் கூறப்படும் பொருளுக்கேற்ற ஓசை இன்பம் தோன்றுமாறு யாத்த புலவரின் திறம் வியக்கத் தக்கது.

**நீலகேசி:** ஐந்து சிறு காப்பியங்களுள் நீலகேசி தர்க்க நூலாகும். குண்டலகேசியைப் போலவே நீலகேசியும் வாதத்திறம் மிக்கவளாக விளங்கிப் பல சமய வாதிகளுடன் சமய வாதம் புரிந்து வெற்றி பெற்றதை இந்நூல் உரைக்கும். இதனை இயற்றியவர் யார் எனத் தெரியவில்லை. இந்நூல் தருமவுரைச் சருக்கம், முதலாக வேதவாதச் சருக்கம் ஈருகப் பத்துச் சருக்கங்களை யுடையது. சமய திவாகர வாமன முனிவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

**சூளாமணி:** இந்நூல் சீவக சிந்தாமணி போன்ற சிறப்புடையது. இது பன்னிரண்டு காண்டங்களைக் கொண்டது. திவிட்டன் என்னும் மண்ணுலக நம்பி சுயம்பிரபை என்னும் விண்ணுலக நங்கையை மணந்து வாழ்ந்த வீர வரலாற்றைக் கூறுகிறது, விருத்தப் பாவாலான இக்காப்பியம்.

**உதயணகுமார காவியம்:** இந்நூல் பெருங்கதையில் வரும் உதயணன் வரலாற்றைக் கூறுவது. எளிமையான இதன் பாடல்கள் அழகிய விருத்தப்பாவால்

ஆனவை. இந்நூல் ஆறு காண்டங்களாக அமைந்து 367 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது.

**யசோதர காவியம்:** இதன் ஆசிரியர் பெயர் அறிய முடியவில்லை. 320 விருத்தப்பாக்களை யுடைய இந்நூல், மாரிதத்தன் என்னும் மன்னனுக்கு உயிர்க் கொலையின் தீமையை உணர்த்தும் பொருட்டு யசோதரன் என்பவனுடைய பல பிறப்புக்களை விளக்கிக் கூறுகிறது. சிற்றின்பத்தின் இழிவையும், பேரின் பத்தின் மேன்மையையும் இந்நூலால் உணரலாம்.

**நாககுமார காவியம்:** இப்படி ஒரு காப்பியம் இருந்ததாக அறிகிறோமே தவிர இந்நூலைப் பற்றி வேறு எதுவுமே தெரியவில்லை.

பிங்கலகேசி, அஞ்சனகேசி முதலிய காப்பியங்களும் இருந்து மறைந்தன என்பதனை அறிகிறோம். நீலகேசி உரையிலிருந்து விம்பசார கதை என்னும் பௌத்த காப்பியம் இருந்ததாக அறிகிறோம்.

**பெரியபுராணம்:** இதனைத் தேசியக் காப்பியம் என்று போற்றுவர் சான்றோர். சிலப்பதிகாரம் மணிமேகலை போல இந்நூல் தமிழ்நாட்டுக் கதையைக் கூறுகிறது. பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்பெறும் இந்நூல், அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறுகளையும் 'பக்திச் சுவை நனிசொட்டச் சொட்ட' எடுத்துரைக்கின்றது. சுந்தரரே இக் காப்பியத்திற்குத் தலைவர் ஆவார். சுந்தரர் இயற்றிய திருத்தொண்டர் தொகையையும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடிப்படையாகக்கொண்டே சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடியருளினார். இதனைத் தமிழ்நாட்டு

வரலாற்று நூல் எனப் போற்றுவர் வரலாற்று ஆசிரியர்கள். சைவசமயச் சான்ருேர்களைப் பற்றி அறிய இதுபோல் உதவுகின்ற நூல் வேறெதுவும் இல்லை. தமிழ் நாட்டுத் திருத்தலங்கள், மக்கள் வாழ்க்கை முறை, ஆட்சி முறை ஆகிய செய்திகள் இந்நூற்கண் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் கற்பனை வளமிக்க பல பாடல்களைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காண்போம்:

**''கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ**
**பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து**
**விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ**
**அற்புதமோ சிவனருளோ அறியேன்என் றதிசயித்தார்''**

பதின்மூன்று சருக்கங்களைக் கொண்ட இந்நூல் 4286 பாடல்களைக் கொண்டு திகழ்கிறது.

**கம்பராமாயணம்:** பெருங்காப்பியங்களுள் கம்பரது இராமாயணம் ஒப்புயர்வற்று விளங்குகிறது. தமிழிலக்கியத்தை இமயமலைக்கு ஒப்பிட்டால், கம்பராமாயணம் அதன் எவரெஸ்ட் சிகரம் எனக் கூறலாம். தமக்கு முன் தோன்றிய புலவர்கள் அத்தனைபேருடைய ஆற்றலையும் ஒருங்கே பெற்ற மகாகவி கம்பர். இன்று வரை அப்பெரும் புலவனுக்கு இணையாக இலக்கிய வரலாற்றில் ஒரு புலவன் தோன்றவில்லை.

**''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்**
**பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை''**

எனப்பாடும் பாரதியார் தாம் அறிந்த புலவரில் கம்பருக்கே முதலிடம் தருவது இச்சிறப்பு நோக்கியே.

அறம் வளர்க்கும் கண்ணாளனை இராமபிரானைத் தலைவனாகக் கொண்ட கம்பராமாயணம் 'மண்ணினை

அளக்க நீண்ட மாலென' வளர்ந்து உயர்ந்து தோன்று கிறது. கம்பர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் எனக் கூறினும் சமரசப் பான்மையில் மிகச் சிறந்தவராவார். தான் சிந்தையாலும் சென்னியாலும் போற்றும் தக வுடையானுகிய இராமபிரானை மும்மூர்த்திகளின் அவ தாரம் என்றே அனுமன் வாயிலாகப் பாடுகிருர்:

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்தி
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட்டு அயோத்தி
வந்தான்"

கம்பர் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் மிகுந் தவர். இக் கவிஞன் காணும், இலட்சிய உலகில் இல்லாரும் இல்லை, ஈவாரும் இல்லை; கள்வரும் இல்லை; காவலரும் இல்லை. காரணம் அங்கே எல்லாரும் எல்லாப் பொருளையும் பெற்று வாழ்கின்றனர் என புதிய தோர் உலகைப் படைத்து அதனையே கோசலமாக மாற்றிக் காட்டினர், புலவர். காப்பியவளத்திலும் கற்பனைச் செறிவிலும் பாத்திரப் படைப்பிலும் கம்ப ராமாயணம் மூல நூலான வான்மீகி இராமாயணத்தை யும் விஞ்சுகிறது என்பர் கற்ருேர்.

இவ்வாறு சங்க காலத்தில் அகத்தையும் புறத்தை யும் பாடிக் கொண்டு தனித்தனிப் பாடல்களாக இருந்த தமிழ்மொழி, சங்க மருவிய காலத்தில் ஆசிரியப் பாவில் தனிமனிதனுடைய முழு வாழ்க்கையைப் பாடும் காப்பிய நிலையை எய்தியது. சில நூற்ருண்டுகளுக்குப் பிறகு விருத்தப்பாவில் சீவக சிந்தாமணி எனும் முழுக் காப்பிய நூல் தோன்றியது. முதன் முதலில் விருத்தப் பாவில் அமைந்த காப்பியம் என்னும் பெருமை அதற்கு

உண்டு. அடுத்துச் சில காப்பியங்கள் தோன்றியபிறகு பெரிய புராணம் பிறந்தது. பின்னர்க் காப்பியங்களில் தனக்கு நிகரில்லை என்று கூறும் வகையில் கம்பராமாயணம் எழுந்தது. தமிழிலக்கியப் பூங்காவில் இறுதியாக மலர்ந்த நறுமண மலர் இதுவேயாகும். வடிவால் வண்ணத்தால் எண்ணத்தால் இப்பெருங்காப்பியத்திற்கு இணையாக முன்னும் பின்னும் இன்றுவரை ஒரு காப்பியமும் தோன்றவில்லை.

# உரையாசிரியர்கள்

(April, '61)

பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் துறைபோகிய நல்லோர் தாம் கண்ட இன்பங்களைத் தமிழ் மக்களும் நுகருமாறு அவற்றிற்கு உரை வகுத்தனர். இவர்கள் உரை இன்றேல் அப்பழைய நூல்களின் பெருமையை நம்மால் அறிந்து கொள்ள முடியாது என்பது ஒருதலை. பரந்த நூற் பயிற்சி மிக்க சான்றோரே ஒரு நூலுக்கு நல்லுரை காண வியலும்; பண்டைய உரையாசிரியர்கள் இப்பயிற்சி மிக்கவர் என்பதை அவர்கள் உரையால் உணரலாம். இவ்வுரையாசிரியர்களின் உரையே பிற்கால உரை நடைக்கு அடிப்படையாக அமைந்தது. உரையாசிரியர் காலம் 12ஆம் நூற்றாண்டிலிருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை எனக் கூறுவர்.

இறையனார் களவியலுக்கு அமைந்த உரையே நாம் காணுகின்ற மிகப் பழைய உரையாகும். இவ்வுரைகண்ட நக்கீரர் சங்க காலத்தவரல்லர். கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய 'கோவை'ப் பாடல்கள் சிலவற்றை மேற்கோள் காட்டுவதிலிருந்து, இவர் 8ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு.

இளம்பூரணர்:— இவர் தமிழ் மொழியில் கிடைத்த மிகப் பழைய நூலான தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் முழுமைக்கும் உரை அருளியவர். இவரது உரை எளிமையும் இனிமையும் உடையது. 'உரையாசிரியர்' என்று கூறினாலே அது இவரைத்தான் குறிக்கும். பிற்கால உரையாசிரியர்கள் இளம்பூரணரைப் பெரிதும் போற்றியிருக்கிறார்கள்; இவர் "உளங்

கூர்க் கேள்வி இளம்பூரணன்'' என்றும் 'ஏதமில் மாதவன்' என்றும் பாராட்டப் பெறுகிறுர்.

**பேராசிரியர்:** இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவருடைய உரை முழுவதும் கிடைக்கவில்லை. மெய்ப் பாட்டியல், உவமயியல், செய்யுளியல், மரபியல் என்ற நான்கு இயல்களுக்கு எழுதிய உரைகளே கிடைக்கின் றன. இவரது நுண்மாண் நுழை புலத்தை இவர் எழுதிய உரைகளால் அறிய முடியும். மாணிக்க வாசகரின் திருவாசகத்திற்கும் திருக்கோவையாருக் கும் உரை எழுதியுள்ளார். குறுந்தொகையில் 380 பாடல்களுக்கு உரை வகுத்தார் என்றும் கூறுவர். ஆனுல் அவ்வுரை கிடைத்திலது.

**சேனுவரையர்:** தொல்காப்பியச் சொல்லதிகார உரைகளுள் இவருடைய உரையே சிறந்தது. "வடநூற் கடலை நிலை கண்டறிந்த சேனுவரையர்'' என்று இவரைச் சிவஞான முனிவர் போற்றுகிறுர். மற்றவர் உரைகளை நயம்பட வாதத்திறனுடன் மறுத்துரைப் பதில் வல்லவர். சொல்லதிகாரம் தவிர வேறு எதற்கும் இவர் உரை எழுதியதாகத் தெரியவில்லை. இவரது உரையை 'சேனுவரையம்' என்றே அறிஞர் போற்று வர். "ஆனு இயல்பில் சேனுவரையர்'' என்று ஆன் ருேர் இவரைப் பாராட்டுவர்.

**நச்சினுர்க்கினியர்:** இவரது காலம் 14-ஆம் நூற் ருண்டாகும். "உச்சிமேல் புலவர்கொள் நச்சினுர்க் கினியர்'' எனப் புலவரால் பாராட்டப் பெற்ற இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியதோடு இலக்கியங்களில் பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி ஆகிய நூல்களுக்கும் உரைவகுத்து அரிய

சாதனை புரிந்துள்ளார். இவரது உரை இல்லையானால் பத்துப்பாட்டையும் சிந்தாமணியையும் புரிந்து கொள்ளுதல் அரிதினும் அரிதாகும். ஆற்றொழுக்காக நேரிதாகப் பொருள் கொள்ளாமல் முன்னும் பின்னும் மாற்றிப் பொருள் கொள்ளுதல் இவருடைய உரையின் இயல்பாம். இவரது உரை பொருட் செறிவு மிக்கது; சொல்நயம் கூறுவதில் இவர் ஆற்றல் மிக்கவர். குறுந்தொகையில் இருபது பாடல்களுக்கு இவர் உரை எழுதினர் என்பர்.

**கல்லாடர்:** ''தொல்காப்பியத்திற்கு உரையிட்ட விரகர் கல்லாடர்'' என்று இவர் போற்றப்படுகிறார். ஆயின், தற்போது சொல்லதிகார உரை மட்டுமே காணப்படுகிறது.

**அடியார்க்குநல்லார்:** இவர் சிலப்பதிகாரம் முழுமைக்கும் உரை எழுதியிருக்கிறார். ஆயினும் முதல் பத்தொன்பது காதைகளுக்கு எழுதிய உரையே கிடைக்கிறது. முத்தமிழிலும் வல்லவர் என்பதனை இவரது உரை விளக்கும். மறைந்து போன பல இசைத்தமிழ் நூல்களையும் நாடகத் தமிழ் நூல்களையும் இவரது உரையால் அறிகிறோம். மேற்கோள் பகுதிகள் இன்ன இன்ன நூல்களில் உள்ளவை எனக் குறிப்பிடும் இயல்பினையுடையவர். எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளமையே இவரது பரந்த நூலறிவைப் புலப்படுத்தும்.

சிலப்பதிகாரத்திற்கு வேறோர் அரும்பதவுரையும் உண்டு. அதன் ஆசிரியர் இயற்பெயர் அறிய இயலவில்லை. அதனைச் செய்தவரை அரும்பதவுரைகாரர் என்றே அழைப்பர். அவ்வுரையே சிலப்பதிகாரத்திற்கமைந்த பழைய உரையாகும்.

**பரிமேலழகர்:** திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதினர் என்ற செய்தியைப் பின்வரும் பாடல் உணர்த்தும்.

> ''தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
> பரிதி பரிமேலழகர்—திருமலையார்
> மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கு
> எல்லையுரை செய்தார் இவர்''

இப்பதின்மருள் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்த உரையாகும். இவர் உரை சுருக்கமாகக் குறளைப் போலவே திட்பநுட்பம் செறிந்து விளங்குகிறது.

> ''உரையெல்லாம் பரிமேலழகர் தெரித்த
> உரையாமோ தெளி''

என்ற தொடரால் இவருடைய உரையின் மாண்பை உணரலாம். வாதத்திறம் மிக்க இவரது உரை இலக்கணக் குறிப்புக்கள் நிறைந்தது. சுருங்கக் கூறினல் இவரது உரையையே ஒரு பேரிலக்கியம் எனலாம்.

இவர் பரிபாடலுக்கும் உரை வகுத்துள்ளார்.

**பிற உரையாசிரியர்:** புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகிய நூல்களுக்குப் பழைய உரைகள் காணப்படுகின்றன. ஆனல் அவற்றை எழுதிய ஆசிரியர்களைப் பற்றி அறியமுடியவில்லை.

சைவ சமய சாத்திரங்கட்கு விருத்தியுரைகள் எழுந்தன. சிவஞான போதத்திற்கு மாபாடியம் எனும் உரை சிறந்து தோன்றுகிறது. இதனை அருளியவர் சிவஞான முனிவராவர்.

வைணவப் பிரபந்தங்கட்கும் இது போலவே விருத்தி உரைகள் எழுந்தன. நம்மாழ்வாரின் திருவாய்

மொழிக்கு ஐந்து பேருரைகள் காணப்படுகின்றன. அவை ஆருயிரப்படி, ஒன்பதினுயிரப்படி, பன்னீரா யிரப்படி, இருபத்தி நாலாயிரப்படி, முப்பதாயிரப்படி என்பன. இவற்றை முறையே ஆளவந்தார், நஞ்சீயர், அழகிய மணவாள ஜீயர், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை ஆகியோர் இயற்றி அருளினர். படி என்பது ஒருவகைக் கிரந்தம். இவ் வுரைகள் மணிப் பிரவாளத்தால் ஆனவை.

இலக்கண நூல்களுள் நன்னூலுக்கு மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், ஆறுமுக நாவலர் ஆகியோர் உரை வரைந்துள்ளனர். யாப்பருங்கலம், யாப்பருங் கலக் காரிகை ஆகியவற்றிற்குக் குணசாகரர் உரை எழுதியுள்ளார். ஆனுல் அதை வகுத்தவர் யார் எனத் தெரியவில்லை. வீரசோழியத்திற்குப் பெருந்தேவனுர் உரை எழுதியிருக்கிறுர்.

இன்று மல்கிப் பெருகியிருக்கும் உரைநடை வளர்ச்சிக்கு இவ்வுரை யாசிரியர்கள் செய்த தொண்டு மறக்க முடியாததாகும். இவர்கள் தோன்றிப் பழைய நூல்களைக் கற்றுணர்ந்து "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் பெரு நோக்கோடு வகுத்த உரைகள் மூல நூலின் பெருமையை என்றும் பறை சாற்றும்.

# உரைநடை

(Sep, '62, '63, April, '65)

தமிழ் இலக்கியத்தில் முதன் முதலில் தோன்றியது பாட்டா உரைநடையா என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது. "பழைய காலத்தில் பாட்டுக்களே இருந்தன; எனவே பாட்டே முன் தோன்றிற்று" என்று யாவரும் கூறுவர். ஆயினும் பாட்டுக்கு முன் உரைநடை தோன்றியது என்பதற்குச் சான்றுகள் இல்லாமல் இல்லை. "மொழி சிறுகச்சிறுக எழுத்தாகி எழுத்துச் சொல்லாகி, சொல் சொற்றொடர் அல்லது வாக்கியமாகி அல்லது உரைநடையாகி, பிறகு கடைசியாகக் கற்பனையோடு கலந்தோ, அன்றித் தனித்தோ, பாட்டு உருவாகி யிருக்க வேண்டும்" என்று கருதுவாரும் உண்டு.

**"உரையும் பாட்டும் உடையோர் சிலரே"**

என்று புறப்பாட்டு உரைநடையை முன்னிறுத்திக் கூறுகிறது. பாட்டும் உரையும் பயிலாத செவிகளை ஓட்டைச் செவி என்கிறது, ஒரு பழம் பாட்டு ஒன்று.

**"பாட்டும் உரையும் பயிலாதன இரண்டு**
**ஓட்டைச் செவியும் உள"**

எனவே பழங்காலத்திலிருந்தே பாட்டும் உரைநடையும் பயின்று வந்தன என்று கருதலாம்.

தொல்காப்பியர் காலத்தில் உரைநடை வழக்கில் இருந்ததாக அறிகிறோம்.

**"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே"**

**"தொன்மைதானே**
**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"**

எனவரும் சூத்திரங்கள் உரைநடையைக் குறிக்கின்றன.

சங்கமருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரத்தை உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பர். அதிலும் தொடர்ந்த உரைநடையை நாம் காணவியலவில்லை.

கி.பி. எட்டாம் நூற்ருண்டில் தோன்றிய இறையனுர் களவியல் உரையில்தான் நாம் தெளிந்த உரைநடையைக் காணமுடிகிறது. அதன் செவ்வி சிறிது காண்போம்.

“அக்காலத்துப் பாண்டிய நாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசிகடுகுதலும், அரசன் சிற்றரை எல்லாம் கூவி, வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன். என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீவிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்” என்ருன்.

களவியலுரைக்குப் பின்னர் உரையாசிரியர்கள் பலர் தோன்றினர். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கும் பத்துப்பாட்டுப் போன்ற இலக்கிய நூல்களுக்கும் அவர்கள் உரையெழுதினர். இளம்பூரணர், பேராசிரியர், நச்சினுர்க்கினியர், பரிமேலழகர், சேனுவரையர் முதலிய உரையாசிரியர்கள் பிற்காலத்தில் உரைநடை வளர உதவி செய்தனர் எனலாம்.

இடைக்காலத் தமிழ் இலக்கியத்தில் சமணர்களும், வைணவர்களும், புதிய நெறியைப் புகுத்தினர். மணிப்பிரவாளம் எனும் அப்புதிய முறையில் நூல்களுக்கு உரை எழுந்தது. ஸ்ரீபுராணம் எனும் சமண நூல் முற்றிலும் மணிப்பிரவாள நடையால் ஆனது. முத்தும் பவ

ழுமும் சேர்த்துக் கட்டிய மாலை எவ்வாறு கண்ணுக்கு இனிமை பயக்கிறதோ, அதே போல் தமிழும் வட மொழியும் கலந்த இம்மணிப்பிரவாள நடை காதுக்கு இனிமை பயப்பதாக அக்காலச் சான்ருேர் கருதினர்.

தமிழ் உரைநடை வளர்ச்சியில் கல்வெட்டுக்கும் பங்கு உண்டு. இனிய உரைநடையில் சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. பிற்கால உரைநடை வளர்ச்சிக்கு இவை அடிகோலின. கடந்த இரண்டு நூற்ருண்டுகளில்தான் தமிழ்மொழியில் தனித்த உரைநடை நூல்கள் தோன்றின. மேனுட்டுக் கிறித்துவப் பாதிரி மார்கள் தங்கள் சமயத்தைப் பரப்ப இந்நாடு போந்த போது தங்கள் பணிக்குக் கருவியாக உரைநடையைப் போற்றினர்.

பதினெட்டாம் நூற்ருண்டில் இங்கு வந்த பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் "பரமார்த்த குரு கதை" "வேதியர் ஒழுக்கம்" "வேதவிளக்கம்" முதலிய உரை நடை நூல்களை எழுதினுர்.

"விக்ரமாதித்தன் கதை, பன்னிரெண்டு மந்திரி கதை, பஞ்சதந்திரக் கதை", ஆகியவை முழு உரை நடை நூல்களாம். "ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட் குறிப்பும்" குறிக்கத் தகுந்தது. இந்நூற்ருண்டில் இறுதியில் வாழ்ந்த சிவஞான முனிவர் பலவகை உரை நடை நூல்களை எழுதி உரைநடை வளர்ச்சிக்கு ஈடு இணையிலாத் தொண்டு புரிந்தார்.

பத்தொன்பதாம் நூற்ருண்டினரான ஆறுமுக நாவலரை உரை நடையின் தந்தை எனப் போற்றலாம். இந்நாவலர் பெருமான், திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம், கந்தபுராண வசனம்,

பாலபாடம், சைவவினாவிடை ஆகிய உரைநடை நூல்களை இயற்றியுள்ளார். வேதநாயகம் பிள்ளை அவர்களின் "பிரதாப முதலியார் சரிதம்", "குணசுந்தரி கதை" போன்ற உரைநடை நூல்கள் குறிக்கத் தக்கவை. திருவருட்பாவை நல்கிய இராமலிங்க அடிகள், ஜீவகாருண்ய ஒழுக்கம் மனுமுறை கண்ட வாசகம் முதலிய உரைநடை நூல்களை அளித்துள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே உரைநடை நூல்கள் மல்கிப் பெருகின. கவியரசு சுப்பிரமணிய பாரதியார் கட்டுரைகளும் கதைகளும் எழுதி உரை நடையின் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்தார். மறைமலையடிகள், திரு. வி. கல்யாணசுந்தரனார் முதலிய சான்றோர்கள் பற்பல உரை நடை நூல்களை இயற்றினர். மறைமலையடிகளாரின் "முல்லைப்பாட்டு ஆராய்ச்சி" "மாணிக்கவாசகர் காலம்" "அறிவுரைக் கொத்து" "நூறாண்டு வாழ்வதெப்படி" முதலிய நூல்கள் குறிப்பிடத் தக்கவை. திரு. வி. க. வின் பேச்சும் எழுத்தும் ஒரே தன்மைய. எவ்வளவு அரிய கருத்துக்களையும் சிறிய தொடர்களால் விளக்கும் ஆற்றல் அவருடைய உரைநடைக்கு உண்டு. "பெண்ணின் பெருமை" "முருகன் அல்லது அழகு" "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" முதலிய உரைநடை நூல்கள் சிறந்தவையாம். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் தமிழ்த் தொண்டைத் தமிழ் உலகம் என்றும் நன்றியோடு போற்றக் கடமைப்பட்டுள்ளது. ஐயரவர்களின் நடைச் சிறப்பினை அவருடைய "நான் கண்டதும் கேட்டதும்" "நல்லுரைக் கோவை" "நினைவு மஞ்சரி" "சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்" ஆகிய நூல்களில் காணலாம்.

உ. வே. சா. அவர்கள் நாளெல்லாம் நாடெல்லாம் அலேந்து உழன்று உழைத்துத் தமிழ் நூல்களைத் தேடி அச்சேற்றி வெளியிட்டதோடு தமிழ் உரை நடையையும் வளர்த்தார் என்பதற்கு "என் சரிதம்" என்ற அவருடைய நூலே சான்று. அச்சான்றேனே "நிலேகாத்த மலே இமய நெற்றி மேலான்" என ஒரு புலவர் புகழ்வது ஏற்புடைத்தே. பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களின் "உரைநடைக்கோவை" என்னும் நூல் செறிந்த தமிழ் உரைநடைக்குப் பெருமை தருவதாம். வீராசாமி செட்டியாரின் "விநோதரச மஞ்சரி" குறிக்கத்தக்க உரைநடை நூலாகும். இலக்கிய வரலாறு, சைவ சமயாசாரியர் சரிதம் ஆகிய உரைநடை நூல்களே கா. சுப்பிரமணிய பிள்ளே இயற்றியுள்ளார். இத்துறையில் நா. மு. வேங்கடசாமி நாட்டார், வையாபுரிப்பிள்ளே, சோமசுந்தர பாரதியார், ரா. பி. சேதுப் பிள்ளே ஆகியோரின் தொண்டுகள் பாராட்டற்குரியன.

இனிய எளிய தமிழில் எதையும் தெளிவாக விளக்கு மாற்றல் டாக்டர் மு. வரதராசன் அவர்கள் எழுத்துக்களுக்கு உண்டு. காந்தியடிகளின் தூய வாழ்க்கை போல இவருடைய உரைநடை எளிமையும் இனிமையும் தோன்ற விளங்குகின்றது.

தமிழர் போற்றும் மற்ருெரு உரைநடை ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா. இவருடைய "ஐசுவரிய அமெரிக்கா" "ரூசோ" "காந்தியும் விவேகானந்தரும்" "ராஜதந்திர யுத்தகளப் பிரசங்கங்கள்" "பிளாட்டோவின் அரசியல்" "சமுதாய ஒப்பந்தம்" ஆகிய நூல்கள் கற்பார் உள்ளத்தைக் கவரும் பான்மைய. இந்நூல்கள் இந்நூற்ருண்டின் உரைநடை வளர்ச்சியை அளந்து காட்டுகின்றன. அரசியல் பொருளா

தாரம், வரலாறு முதலிய பல்வேறு கலைகளையும் எளிய நடையில் இனிய முறையில் கூற இயலும் என்பதை உணர்த்தியவர் இவரே. பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின்தொண்டு குறிப்பிடத்தக்கதாகும். "கானல்வரி" என்னும் நூலில் அவருடைய உரை நடையின் திட்பத்தையும் செறிவையும் உணரலாம்.

'தமிழ்க் காதல்' என்னும் அரிய நூல் இயற்றிய டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் தமிழ் மொழியின் உரைநடை வளத்திற்கு ஆக்கம்தரும் வகையில் "வள்ளுவம்" "தொல்காப்பியப் புதுமை" போன்ற அரிய நூல்களை ஆக்கியுள்ளார். எளிமையும், நளினமும் மிக்க இன் தமிழில் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் எண்ணற்ற நூல்களை எழுதி உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்று பணியாற்றி வருகிறார். எளிய தமிழில் கடினமான இலக்கண நூல்களையும் விளக்கு மாற்றல் உரைநடைக்கு உண்டு என்று கூறும்வகையில் "வாழும் தமிழ்" "பயப்படாதீர்கள்" என்னும் நூல்களை இயற்றி வளரும் தமிழுக்கு ஆக்கம் தந்துள்ளார்.

எண்ணற்ற சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதிக் குவித்து இத்துறையில் அசுர சாதனை புரிந்த 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தொண்டு மறக்கற்பாலதன்று. நல்ல பாட்டின் உணர்ச்சியை உரை நடையிலும் உண்டாக்க முடியும் என்று காட்டியவர் 'கல்கி' அவர்கள். காந்தியடிகள் இறந்த பொழுது இவர் எழுதிய இரங்கற் செய்தி அப்போது தோன்றிய பாடல்களைக் காட்டிலும் சிறந்த உணர்ச்சி மிக்கது எனப் பாராட்டுவர். அரசியல், இன்னிசை ஆகிய இரண்டையும் அவரைப்போல் நகைச்சுவையுடன் எளிதில் புரியுமாறு விளக்கியவர் வேறு யாருமிலர்.

இன்று எண்ணற்ற எழுத்தாளர்கள் தோன்றி உரைநடையில் நாவல்களும், சிறுகதைகளும் எழுதி வருகின்றனர். கால வெள்ளத்தை எதிர்த்து எத்தனை நூல்கள் நிலைத்து நிற்கும் என்பதனைக் கூறுவது கடினம். சங்க காலத்தில் கவிதை வடிவில் நின்று காட்சியளித்த தமிழ்த்தாய் இன்று உரைநடையில் நடக்கின்றாள். அக்காலக் கவிதை வளத்தை இன்று தமிழ் மொழி இழந்தது என்று நாம் வருந்தினாலும், அது உரைநடையைப் பெற்றிருக்கிறது என்பதை எண்ணி மகிழலாம்.

# இசைத்தமிழ்

(Aprll '63)

இசைத் தமிழ், மொழியின் இனிமையைப் புலப்படுத்தி மனத்தைச் செம்மைப்படுத்தும் இயல்புடையது. பண்டைத் தமிழர் தமிழ் மொழியை இயல் இசை நாடகம் என மூவகைப்படுத்தி ஒவ்வொரு பகுதியிலும் எண்ணற்ற நூல்களை இயற்றிப் போற்றினர். அவற்றுள் இயல் தமிழ் நூல்களை நாம் காண்கின்றோமே யன்றி ஏனையவற்றைக் காணமுடியவில்லை. பழந்தமிழ் இலக்கியங்களில் சிலப்பதிகாரம் ஒன்றுதான் மூவகைத் தமிழும் விரவி வரப் பெற்றுள்ளது.

மிடற்றுப் பாடல், யாழ், குழல் ஆகிய இசைக்கருவியின் ஒலியுடனும் தாளத்துடனும் பொருந்த இசைவது இசையாகும். இவ்விசையினை எடுத்தல், படுத்தல், நலிதல் தோன்றப் பண்ணிச் சீர்ப்படுத்திப் பாடப் பெறுவது பண்ணாகும். இசை, பண் ஆகியவற்றின் இயல்பினை, "பாவோடணைதல் இசை" எனவும், "எடுத்தல் முதலா இரு நான்கும் பண்ணிப் படுத்தமை யாற் பண்" எனவும் மொழிவர்.

சிலப்பதிகாரத்தில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழிசைகளைப் பற்றிய செய்திகளையும் அறியலாம். நான்கு நிலத்திலும் வாழ்ந்த பழந்தமிழர் தத்தம் நிலத்திற்குரிய யாழ் பண் முதலிய இசைக்கூறுபாடுகளைப் போற்றிப் பாதுகாத்தனர். தோற்கருவி, துளைக்கருவி, மிடற்றுக் கருவி எனப் பல்வகை இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர் ஆன்றோர். நரம்புக் கருவிகளான பேரியாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் ஆகிய

யாழ்களை இசைப்பதிலும் பண்டையோர் சிறந்திருந்தனர். பொருநர், பாணர், கூத்தர், விறலியர் ஆகியோர் இசைக் கலையில் தேர்ந்து விளங்கினர்.

காவிரிப்பூம்பட்டினத்து மருவூர்ப் பாக்கத்தில் இசைப்பாணர்க்கு இருக்கைகள் அமைந்திருந்தன. இசைவலோர், துளைக்கருவி வாசிப்போர், தோற்கருவி வாசிப்போர் எனப் பலவகையினராகி இசையைப் போற்றி வளர்த்தனர். இச்செய்திகளை,

"குரலினும் யாழினும் குரல்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்"

என்ற சிலப்பதிகார அடிகள் கூறுகின்றன. இந்நூலுள் வரும் அரங்கேற்று காதை, கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை ஆகிய பகுதிகள் பழந்தமிழரது இசையறிவைப் புலப்படுத்துகின்றன. "இசைத்தமிழ் நூல்களாகிய பெருநாரையும் பெருங்குருகும் பிறவும் தேவ இருடி நாரதன் செய்த பஞ்ச பாரதியமும் முதலாக உள்ள தொன்னூல்கள் இறந்தன" எனச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார்.

சங்க காலத்தில் வளர்ந்தோங்கியிருந்த இசை நூல்கள் அழிந்தொழிந்தன. தமிழரல்லாத இனம்(களப்பிரர்) இந்நாட்டை ஆட்சி புரிந்தபோது தமிழ், தன் தனித்தன்மையை இழந்தது; மக்களிடையே ஒழுக்கத்தை வற்புறுத்த விழைந்த சமணர்கள் விலக்கவேண்டியவற்றுள் இசையும் ஒன்று என இதனைக் கடிந்தனர். இதனால் இசைத் தமிழின் வளர்ச்சி குன்றலாயிற்று.

6-ஆம் நூற்ருண்டிற்குப் பின் தோன்றிய நாயன் மார்கள் ஆழ்வார்கள் காலத்தில் தமிழ் இசை மறு மலர்ச்சியுற்றது. சமய குரவர் இறைவனை ஏழிசையாய் இசைப்பயனுய்க் கண்டு இன்புற்றனர். அவர்கள் பண்ணேடு இசைந்த பாடல்களைத் தமிழ்நாடெங்கும் இசைத் துப் பாடினர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞான சம்பந்தர் பாடிய திருப்பதிகங்களை யாழில் அமைத்துப் பாடி ஊர்தோறும் சென்று இசை வளர்த்தார் என அறிகிருேம். ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் ஆயிரக்கணக்கான இசைப் பாடல் களைப் பாடிப் பரமன் அடி தொழுதனர். அவர்களால் பாடப் பெற்ற தீஞ்சுவைப் பாடல்களே தேவாரமாகும்.

இடைக் காலத்தில் மீண்டும் பிறமொழியாளர் தொடர்பால் தமிழ் இசை தாழ் நிலையுற்றது. முகமதி யர்களும், மராட்டியர்களும், ஆங்கிலேயர்களும் தமிழ கத்தை ஆளத் தொடங்கியபோது தமிழ் மொழி தன்னிலை திரிந்தது.

ஆயினும் சென்ற இரு நூற்ருண்டுகளாகத் தமிழ் இசை வளர்ந்து வருகிறது எனக் கூறலாம். முத்துத் தாண்டவர் என்பவர் அனைவரும் போற்றும் வகையில் சில கீர்த்தனைகளை இயற்றினுர். அருணுசலக் கவிராயர் இராம நாடகக் கீர்த்தனைகளை இயற்றியருளினுர். கோபாலகிருஷ்ண பாரதியார் நந்தனுர் கீர்த்தனைகளை இயற்றினுர். மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள் சர்வ சமய சமரச கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். அருட்பா அருளிய இராமலிங்க அடிகளாரும் பல கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். அண்ணுமலை ரெட்டியார் தோன்றிக் காவடிச் சிந்து பாடினுர். சுவாமி விபுலா னந்தர் பண்டைய நூல்களை ஆராய்ந்து 'யாழ் நூல்'

என்னும் சிறந்த இசை நூலை இயற்றியருளினர். "கருணமிருத சாகரம்" எனும் நூலை இயற்றிய தஞ்சை அபிரகாம் பண்டிதரின் தொண்டு போற்றற் குரியது.

இந்நூற்றுண்டில் தோன்றிய ராஜா சர். அண்ணமலை செட்டியாரும் அவருடைய மகனர் முத்தைய செட்டியாரும் தமிழ் இசைக்குச் செய்த தொண்டு மறக்கற் பாலதன்று. இவர்கள் முயற்சியால் தோன்றிய தமிழிசைச் சங்கம்; பண் ஆராய்ச்சி செய்து பழங் காலத்துப் பண்களுக்குத் தற்காலத்துக்கு ஏற்ற ராகம் அமைத்து ஆண்டுதோறும் வெளியிடுகிறது. மேலும் ஆங்காங்கு வாழும் பழங்குடி மக்களை வரவழைத்து அவர்தம் கலைத்திறனை நாகரிக மக்களுக்கு உணர்த்து கிறது.

தமிழிசையின் சிறப்பையும் தேவையையும் உலகுக் குணர்த்த கல்கி அவர்கள் எழுதிய கட்டுரைகளும் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் மறக்க முடியாதன. மேலும் கல்கியே பல தமிழ்க் கீர்த்தனைகளை எழுதியுள் ளார் என்பது குறிப்பிடத் தக்கது. இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் பல தமிழ்ப் பாடல்களுக்கு இசையமைத்தும், அவற்றைப் பாடியும் பெருந்தொண் டாற்றினர்.

இந்நூற்றுண்டின் புதுமைக் கவிஞரான பாரதியார் தம் கவிதைகளில் இசைக்குச் சிறப்பிடம் கொடுத் துப் பல பாடல்களை ராக, தாளக் குறிப்புக்களுடன் வெளியிட்டார். அவரைப் பின்பற்றிப் பாடிய சுத் தானந்த பாரதியார் எண்ண இனிக்கும் இசைப் பாடல் களை வழங்கினர். பாரதிதாசனரின் 'இசையமுது'

தொகுதிகளும் கவிமணியின் 'தேவியின் கீர்த்தனைகள்' எனும் நூலும் நாமக்கல்லாரின் பல பாடல்களும் தமிழ் இசைக்குப் புதுப் பொலிவு தந்தன.

தற்போது திரும்பிய பக்கமெல்லாம் தேன்தமிழ்ப் பாடல்களைக் கேட்க முடியும். புதிய புதிய இசைப் பாடல்களை எழுதும் கவிஞர்க்கும், அவற்றை விரும்பிப் பாடும் கலைஞர்க்கும், அவர்தம் இசையைச் செவி குளிரக் கேட்டுச் சிந்தை குளிரும் மக்களுக்கும் பஞ்சமில்லை. அதனால் இசைத் தமிழ் செழித்து வளரும் என்பதில் ஐயமுண்டோ?

# சிலப்பதிகாரம்

(Sep '64)

தொன்மைத் தமிழரின் கலைச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வது சிலப்பதிகாரம். கிறித்தவ சகாப்தத் துவக்கத்தில் தோன்றிய இந்நூல் தமிழ் மொழியின் பெருமைக்குரிய முதல் சான்ருகத் திகழ்கிறது. தமிழ்த்தாய் சங்ககாலத்தில் இளங்கோவைப் பெற்று ஏற்றம் கொண்டாள். இடைக்காலத்தில் மகா கவி கம்பரைப் பெற்று மாண்புற்ருள். பிற்காலத்தில் பாரதியை ஈன்று பெருமையுற்ருள்.

தன்னுணர்ச்சிப் பாடல்களையே கொண்டு திகழ்ந்த சங்க இலக்கியப் போக்கை மாற்றிப் புரட்சி செய்தவர் இளங்கோவடிகள். தனிப் பாடல்களிலேயே தங்கியிருந்த தமிழ்த்தாயை முதன் முதலில் காப்பிய மாளிகையில் குடியேறச் செய்த பெருமை இளங்கோவையே சாரும். சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியம் முத்தமிழின் திறமெல்லாம் காட்டி நிற்கிறது. காப்பியத்திற்கு இட்ட பெயரிலேயே அப்புரட்சியைக் காண்கிருேம். மகாகவி காளிதாசர் சாகுந்தலம் எனும் நாடகம் இயற்றினுர். அந்நூலின் சிக்கலுக்கு ஒரு கணையாழியே காரணமாயிற்று. ஆயினும் அதனை நாடகத்தின் பெயராக அமைக்காமல், நாடகத் தலைவியின் பெயரையே அந்நூலுக்கு இட்டார். ஆங்கிலக் கவிவாணர் ஷேக்ஸ்பியர் ஒதெல்லோ எனும் நாடகம் இயற்றினுர். கதைச் சிக்கலுக்கு ஒரு கைக்குட்டை காரணமாயிற்று. ஆயினும் அந்நூலுக்கு கதைத் தலைவன் பெயரையே வழங்கினுர் ஷேக்ஸ்பியர். ஆனுல்

இளங்கோவடிகள் தம் நூலுக்குத் தலைவியின் பெயரையோ, தலைவனின் பெயரையோ இடாமல் கதைச் சிக்கலுக்குக் காரணமான சிலம்பையே—காப்பியத்தின் பெயராக அமைத்துப் புரட்சி செய்துள்ளார்.

பெண்ணுக்குப் பெருமை தரும் முதல் தமிழ்க் காப்பியம் இதுவேயாம். கண்ணகி நல்லாள் புகாரில் அமைதிப் பெண்ணாகத் தோன்றி, மதுரையில் வீரம் விளைத்து, வஞ்சியில் வானவர் வாழ்வு பெறுகிறாள். பத்தினி வழிபாட்டை இளங்கோவடிகள் இந்நூல் வாயிலாக வெற்றிகரமாக நிறைவேற்றுகிறார். மண்ணக மாந்தர்க்கு அணியாய கண்ணகி, விண்ணக மாந்தர்க்கு விருந்தாகிய செய்தியை இந்நூல் திறம்படச் சித்திரிக்கிறது. நூலின் முப்பெரும் பிரிவுகளுக்கு முறையே புகார்க்காண்டம், மதுரைக்காண்டம் வஞ்சிக்காண்டம் என்ற பெயர்களை அமைத்த திறம் நோக்கிப் புலவர்கள், 'இளங்கோவடிகள், மும்மைத் தமிழகத்தை, ஒருமைத் தமிழகமாக—ஒற்றுமைப்பட்ட தமிழகமாகக் காண விழைகிறார்' என்று கூறுவர். நூலை ஆழ்ந்து நோக்கின் வேறொரு கருத்தும் புலனாகும். கண்ணகிச் சிலை வடபேரிமயமலையிற் பிறந்து, கடுவரற் கங்கையில் புனலாடி வரும் நிகழ்ச்சியைக் கொண்டும், குமரியாடிச் செல்லும் மாடலன் கங்கை மூழ்கி வருதலும் ஆகிய செய்திகள் இளங்கோவின் இந்திய ஒருமைப்பாட்டின் பரந்த கொள்கையைக் காட்டுகின்றன எனலாம்.

கருணை மறவனான கோவலனைச் செவ்வேள் என்றும், ஒரு மாமணியாய் உலகிற் றோன்றிய திருமாமணியான கண்ணகியை வள்ளி என்றும் இக்காப்பியம் போற்றும். ஆயினும் இவர்களுடைய இல்லற

வாழ்வின் இன்பம் இனிது நீடிக்கவில்லை. கருங்கயற் கண் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாநெடுங்கண் மாதவியை நாடுகிறான் கோவலன். அடிக்கடி அவளையும் பிரிந்து, வம்பப் பரத்தரோடும், வறுமொழியாளரோடும் திரிகிறான். அவன், இவ்வாறு அலைந்ததற்குக் காரணம் அக்காலச் சமுதாய அமைப்பேயாகும்.

"பெண்களை இரு பிரிவாகப் பிரித்தது அந்நாளைய சமுதாயம். ஒரு சில பெண்களேனும் கற்புடன் வாழப் பிற பெண்களை அது பரத்தையர் ஆக்கியது. தம்மையும் இழந்து சமுதாயத்தை வாழ்விக்கும் அவர்கள் வாழக் கலையையே இந்தச்சமுதாயம் அவர்களுக்குரிய பொருளாக்கிற்று. கலைமகள் விலைமகள் ஆனாள் ஆதலின், கற்புடைப் பெண்ணிற்குக் கலை வாழ்வில்லை. கலையுள்ளம் படைத்த ஆடவன் என் செய்வான்? கலையினைத் தேட விலைமகளைத் தேட வேண்டும். கற்பைத் தேடக் குலமகளைத் தேடவேண்டும். ஈதே அந்நாளையச் சமுதாயத்தின் இரண்டாட்டம்! எனவே இதுவே ஊழின் கொண்டாட்டமாயிற்று! ஆனால் இதனிடையே புகுந்த மக்களுக்கோ பெருந் திண்டாட்டமே விளைந்தது" *

தமிழ்க் காப்பியத் தலைவியர் யாருக்குமே நேராத மாக்கொடுமை கண்ணகி வாழ்வில் நேர்ந்துவிட்டது. அத்தெய்வ மங்கை தன் கணவனை இழந்து விடுகிறாள். ஆயினும் கடமைக்காக அக்காரிகை சில நாட்கள் உயிர் வாழ்கிறாள். தன் கணவன் கள்வன் அல்லன் என்ற உண்மையை நிலைநாட்டிய பின்னரே தன்பெருவாழ்வை

* கானல்வரி—தொ. பொ. மீனாட்சிசுந்தரனார்

முடித்துக் கொள்கிருள். இந் நிகழ்ச்சியின் மூலம் கடமையுணர்வை இக்காப்பியம் வற்புறுத்துகிறது என்றும் கூறலாம்.

இளங்கோவடிகள் விதியின் ஆற்றலைக் காப்பியத்தில் பல இடங்களில் குறிப்பிடுகிருர். கோவலன் குன்ற மன்னதோர் செல்வத்தைத் தொலைத்து மல்லல் மதுரையை நாடிச் செல்வது ''வினைகடைக் கூட்டுவதால்'' தான். இதே வினைவிளை காலத்தின் கோலத்தினுல்தான் சினையலர் வேந்தன் யாதும் தேராணுகிக் கோவலனைக் கொன்று சிலம்பைக் கொணரப் பணித்து விட்டான்

ஊழ்வினை ஒருநாளும் ஒழிக்க முடியாதது என்பது உண்மையே. என்ருலும் வாழ்வில் நம்பிக்கையை இழத்தல் கூடாது என்பது இளங்கோவின் நோக்க மாகும்.

வீட்டைப் பிரிந்து உற்ருர், உறவினரைப் பிரிந்து, நாட்டைப் பிரிந்து வேறு நாடு சென்ற கண்ணகி கணவனை·இழந்து துயரத்தில் மூழ்கிக் காய்கதிர்ச் செல்வனைச் சாட்சிக்கழைக்கின்ருள். பின் பொங்கியெழுந்து காவலனிடம் கட்டுரைத்து வெற்றி கொண்டு மதுரை மாநகரை எரிக்கின்ருள். மதுரைத் தெய்வத்தை ஏவல் கொள்கிருள். இவ்வாறு துயரக் கடலில் தத்தளிக்கும் கண்ணகி செயற்கரியன செய்கிருள்.

கண்ணகி சாதாரணக் குடியில் பிறந்தவளேயாயினும், காப்பியத் தொடக்க முதல் முடிவுவரை தெய்வமாக அனைவராலும் போற்றப் படுகிருள். மார்தரார் தொழுதேத்தும் குணம் கொண்ட கண்ணகியை

இளங்கோ அடிகள் 'சாலி ஒரு மீன் தகையாள்' என்றே குறிப்பிடுகிறார். தெய்வ மேறப்பெற்ற சாலினி தன் னிலை மறந்து,

"இவளோ
கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய் தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகில் தோன்றிய
திருமா மணி"

எனப் பாடுகிறாள். "காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு நாமமல்லது நவிலாது என்நா" என்று அரு கனைத் தவிரப் பிற கடவுளர் பெயரைக் கூறவும் மாட்டேன் எனக் கழறிய கவுந்தியடிகள் அந்நிலை மறந்து,

"கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"

எனப் போற்றி வழிபடுகிறார்.

மதுரை மாநகரத்தில் கையில் ஒற்றைச் சிலம்பு டன் திரிதரும் கண்ணகியைக் கண்ட மல்லல் மதுரை யார், எல்லாரும் தாம் மயங்கி "செம்பொற் சிலம் பொன்று கையேந்தி நம்பொருட்டு வம்பப் புதுத் தெய்வம் வந்ததால்" எனப் புகழ்வர்.

இக் கண்ணகி, வஞ்சிக் காண்டத்தில் பலவிடங் களில் கடவுள் என்ற பெயராலேயே அழைக்கப்படு கிறாள். குன்றக் குரவையில் வேங்கை மரத்தடியில் ஒரு முலை யிழந்து நிற்கும் கண்ணகியைக் கண்ணுற்ற குரவர்கள்,

"இவள் போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம் இல்லையால்"

என வியந்து,

"சிறுகுடியீரே, சிறுகுடியீரே தெய்வங்
கொள்ளுமின் சிறுகுடியீரே"

எனத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

"பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"

எனச் சேரமாதேவியும் சேரனிடம் மொழிகின்ருள்.

"இமயமால் வரை எங்கோன் செல்வது
கடவுள் எழுதவோர் கற்கே யாதலின்"

என்று கண்ணகியின் கடவுள் நிலையை வில்லவன் கோதையும் மொழிகின்ருன்.

மாதவியும் கண்ணகி போலச் சிறந்தவளே. ஆடல், பாடல், அழகு என்னும் மூன்ருலும் சிறந்தவள் அவள். கணிகையர் குலத்தே பிறந்தாலும், கடவுள் நிலைபெற்ற கண்ணகிபோல் இவள் நலமும் காப்பியத்தில் சிறப்புற அமைக்கப்பெற்றுள்ளது. உணர்ச்சி வயப்பெற்ற கோவலன் முதலில் இவளை, "ஆடல் மகளே யாதலின்" எனப் பழித்துரைத்துப் பிரிந்தாலும், பின்னர் உண்மை நிலையுணர்ந்ததும், 'தன்தீதிலள்' எனத் தளர்ச்சி நீங்கி, இது 'என் தீது' என உணர்கிருன். இதனுல் மாதவி யின் மாசின்மை விளங்கும். மாதவியால் குலப்பிறப் பாட்டி எனப் பாராட்டப்பெறும் கண்ணகி மாதவியைப் பற்றி என்ன நினைக்கிருள்?

"மடம்படு சாயலாள் மாதவி தன்னைக் கடம்படாள்"

என்ற கண்ணகி கூற்ருல் மாதவியின் உயர்நிலையை உணரலாம்.

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"

ஆகிய மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் எழுந்தது என்று பதிகம் கூறுகிறது. எனினும் மேலும் பல விளக்கங்களையும் இந்நூல் தரத் தவறவில்லை.

அக்காலத்து நாட்டுவளம், மன்னர் மாண்பு, மக்கள் நிலை, பழக்க வழக்கங்கள், சமயப் பொறை ஆகியவற்றைக் கூறும் சிலப்பதிகாரம் தமிழ் மொழி வளத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

தம் சமயம் இன்னதென்று துணிந்து கூற முடியாதவாறு தம்மைச் தமிழ்ச் சமுதாயத்தோடு ஐக்கியப் படுத்திக்கொண்ட ஆசிரியர் திறம் போற்றற்குரியது. இது, மேலும் இவருடைய பெருமைக்குச் சான்ருக அமைந்துவிட்டது.

சேரன் கல்லையடுக்கிக் கண்ணகிக்கு அமைத்த கற்கோயில் இன்றில்லை. ஆனல், இளங்கோவடிகள் சொல்லை இழைத்து அமைத்த சுந்தரமாமொரு காப்பியக் கோயிலில் கண்ணகியைக் கண்டு போற்றி வழிபடலாம்.

# சமணர்கள் தமிழ்த் தொண்டு

( April '65 )

தமிழ் மொழிக்குச் சமணர்கள் செய்த சீரிய தொண்டு மிகப் பெரிதாம்; சங்க இலக்கியப் போக்கை மாற்றி ஆசிரியப்பாவில் ஒரு காப்பியமே சமைக்க முடியும் என்று காட்டியவர் சமணராகிய இளங்கோ வடிகள். ஆசிரியப்பாவில் முதலில் தோன்றிய காப்பியம் அதுவேயாம். விருத்தப்பாவில் முதல் முதல் காப்பியத்தைத் தோற்றுவித்த திருத்தக்க தேவரும் சமணரே. தமிழ்மொழியில் காலங்கள் தோறும் புதுமை தோற்றுவித்தவர் சமணப்புலவரே ஆவர். மொழியின் வளர்ச்சிக்கான எல்லாத்துறையிலும் சமணச் சான்ளுேர் ஓயாது உழைத்தனர். காப்பியங்களையும் அற நூல்களையும், இலக்கணங்களையும், புராணங்களை யும், நிகண்டுகளையும், சிற்றிலக்கியங்களையும், சோதிட நூல்களையும் படைத்துக் குன்ருத பெருமையுற்றனர்.

**காப்பியங்கள்:** ஐம்பெரும் காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் சீவகசிந்தாமணியும், வளையாபதியும் சமணர்களால் செய்யப்பெற்றவை. முத்தமிழின் திறமெலாம் காட்டி நிற்பது சிலப்பதிகாரம். கண்ணகி நல்லாளின் கதையைக் கவினுறக் கூறும் இக்காப்பியம் தமிழ் மொழியின் பண்டைப் பெருமைக்கு என்றும் சான்று பகரும். பிற காப்பியத் தலைவியருள் கண்ணகி போல் தனித்து நின்று வெற்றி பெற்றவர் யாருமிலர். இந்நூலின் கதை அமைப்பிலும் கருத்துச் செறிவிலும், காப்பியப் பண்பிலும், ஈடுபட்டு உள்ளத்தைப் பறி கொடுத்த பாரதியார் இதனை, "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாராட்டியுள்ளார்.

திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி மிகச் சிறந்த சமண காவியமாகும். சீவகன் மகளிர் எண்மரை மணந்து இல்லறத்தை இனிது நடத்தி இறுதியில் துறக்க வாழ்வு கொண்ட பெருநெறியைக் கூறுகிறது இந்நூல். காப்பியப் பண்புகள் அனைத்தும் ஒருங்கே பெற்ற பெருமை மிக்க இந்நூல் பிற்காலத்தில் தோன்றிய காப்பியங்களுக்கு வழி காட்டியாக அமைந்தது. மகாகவி கம்பரையே மெய்ம் மறக்கச் செய்த காப்பியம் இது. சைவ சமயத்தவராகிய நச்சினார்க்கினியர், இச் சமண காப்பியத்தில் திளைத்து, அற்புதமான உரையைப் படைத்துள்ளார். உரையாசிரியர்கள் பலரும் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளனர். நூல் முழுவதும் சமண சமயக் கருத்துக்கள் விரவித் தோன்றும். ஆயினும் இதன் காப்பிய இன்பத்தில் பிற சமயத்தவரும் ஈடுபடுவர். பெருங்கதையும் சமண நூலேயாகும். ஒன்பான் சுவையும் கொண்டு இலங்கும் இதனை இயற்றியவர் கொங்குவேளிர் என்னும் சமணராவர்.

ஐஞ்சிறு காப்பியங்கள் என்று போற்றப்பெறும் சூளாமணி, யசோதர காவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம், நீலகேசி ஆகிய ஐந்து நூல்களும் சமணருடையவை. இவற்றில் சூளாமணியைச் சமணர்கள் பெரிதும் போற்றுவர். காப்பிய இன்பத்தில் இந்நூல் சிந்தாமணியைப் போன்ற சிறப்புடையது. பெருங்காப்பியப் பண்பினைப் பெற்றுள்ள இந்நூல் சிறு காப்பிய வரிசையில் இடம்பெற்றது ஏனோ தெரியவில்லை. முடியில் சூடிக்கொள்ளத்தக்க மணிபோன்ற பெருமையுடைய காரணத்தால் இதனைச் "சூளாமணி" எனப் போற்றினர். திவிட்டனின் வீர

வாழ்வைக் கூறுவது இந்நூல். இதன் ஆசிரியர் தோலாமொழித் தேவர். நீலகேசி சிறந்த தர்க்க நூலாகும்.

**புராணங்கள்:** சமணர் செய்த புராணங்களில் குறிப்பிடத் தக்கவை, மேருமந்தர புராணம், ஸ்ரீபுராணம், மாபுராணம் மல்லிநாதபுராணம், சாந்தி புராணம் என்பன. இவற்றுள் மேருமந்தர புராணம் நல்ல தமிழால் ஆன நூலாகும். இது மேரு – மந்தரன் என்பவருடைய கதையைக் கூறுவது. இதன் ஆசிரியர் வாமன முனிவர். ஒவ்வொருவரும் தத்தம் வினைப் பயனை எத்தனை பிறவி எடுத்தாலும் அனுபவித்தே ஆக வேண்டும் என்பதனை அறிவுறுத்துகிறது இந்நூல்.

**அறநூல்கள்:** அற நூல்களுள் நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை, ஏலாதி, சிறுபஞ்சமூலம் ஆகியவை சமணர் ஆக்கியவை. இவற்றுள் நாலடியார் மிகச் சிறந்த நூலாகும். இது இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை முதலியவற்றை விளக்கிக் கூறி மக்களை அறம் செய்யுமாறு வற்புறுத்தும். உவமை நலம் மிக்க இந்நூல் திருக்குறளுடன் வைத்து எண்ணத்தகும் பெருமையுடையது.

**இலக்கண நூற்கள்:** இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் எழுதிய தொல்காப்பியர் சமணர் என்று சிலரும், அல்லர் என்று சிலரும் மொழிவர். சமண முனிவராகிய பவணந்தியார் இயற்றிய நன்னூல் எனும் இனிய இலக்கண நூலை அறியாதார் இலர். நாற்கவிராசநம்பி என்னும் சமணர் நம்பியகப்பொருள் என்ற நூலை இயற்றியுள்ளார். இந்நூல் அகப்பொருள் இலக்கணங்களை அழகுறக் கூறுகிறது. யாப்பிலக்கணங்

களைக் கூறும் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி ஆகிய இரு நூல்களையும் அமிதசாகரர் எனற சமணச் சான்றோர் இயற்றியருளினர். குணவீர பண்டிதர் என்பவர் நேமிநாதம் என்னும் நூலையும், வச்சணந்திமாலை என்னும் நூலையும் செய்துள்ளார். நன்னூலுக்கு முதலில் உரை வகுத்த மயிலைநாதரும் ஒரு சமண முனிவராவர்.

**நிகண்டுகள்:** தமிழ் மொழியில் அகர வரிசை இல்லாத குறையைப் போக்கி நிகண்டுகளைச் செய்த பெருமை சமணருக்கு உரியது. மண்டல புருடரால் செய்யப்பெற்ற சூடாமணி நிகண்டு எல்லாராலும் போற்றப்படுகிறது. இந்நிகண்டைக் கற்றவரே அந்நாளில் புலமையுடையவர் எனக் கருதப்பட்டனர். மற்ற நிகண்டுகளில் திவாகரர் இயற்றிய திவாகரமும், பிங்கலர் இயற்றிய பிங்கலமும் குறிப்பிடத்தக்கவை.

**சிற்றிலக்கியங்கள்:** நரி விருத்தம், எலி விருத்தம், கிளி விருத்தம், திருநூற்றந்தாதி, திருக்கலம்பகம், திருவெம்பாவை, ஆதிநாதர் பிள்ளைத் தமிழ் என்பவை குறிப்பிடத்தக்கவை.

**நரி விருத்தம்:** நரி விருத்தத்தைப் பாடியவர் சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் ஆவார். சீவகனுடைய கதையை இயற்றத் தம் ஆசிரியரிடம் அனுமதி வேண்டிச் சென்றபோது அவர், இவருடைய ஆற்றலை அறிவதற்காக அருகில் ஓடும் நரியைக் குறித்து ஒரு நூல் செய்யுமாறு கூறினர் என்றும், அதன்படி இவரும் அதனைப் பாடி முடித்துச் சிந்தாமணி எழுத அனுமதி பெற்றார் என்றும் கூறுவர். நாற்பது விருத்தப் பாக்களையுடைய நரி விருத்தம், இளமை நிலையாமை,

யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகிய நிலையாமைகளைத் தெளிவாகக் கூறுகிறது. காட்டில் வேட்டையாடச் சென்ற வேடன் ஒருவன் யானையைக் கொல்ல வில்லில் நாண் ஏற்றி அம்பு தொடுக்கும் வேளையில் அவனைப் பாம்பு ஒன்று கடித்தது. உடனே வில்லால் அதனை அடித்துக் கொன்றான். வில்லில் இருந்து கிளம்பிய அம்பு யானையை அதேவேளையில் கொன்றது. சிறிது நேரத்தில் பாம்பின் நஞ்சு தலைக்கேறி வேடனும் மாண்டான். வேடனும், யானையும், பாம்பும் பிணமாகக் கிடந்த அவ்வழியே நரி ஒன்று வந்தது. வில்லில் இருந்த நாண் கயிற்றை அது கடித்த அளவில் விரைந்து நிமிர்ந்த வில் அதன்மீதுபட அதுவும் இறந்தது. இவை யனைத்தும் ஆசையால் நேர்ந்த அழிவு. ஆகவே, ‘ஆசை அறுமின்’ என்று கூறுவதுபோலக் கதை அமைந்துள்ளது!

**திருநூற்றந்தாதி:** இருபத்து நான்கு தீர்த்தங்கரருள், நேமிநாதரைத் துதிக்கும், இந்நூல். அருகக் கடவுள் மீது இயற்றப்பெற்றது.

**திருக்கலம்பகம்:** அருங்கலச் செப்பு என்னும் நூலைத் தழுவி எழுதப்பெற்ற நூல். அறநெறிச் சாரம், நற்காட்சி, நல்ஒழுக்கம், நல் ஞானம் ஆகிய அற நூல்களைத் தெளிவாகக் கூறும் பெற்றியுடையது இந்நூல்.

**திருவெம்பாவை:** அவிரோதியார் இயற்றிய திருவெம்பாவை, மாணிக்கவாசகருடைய திருவெம்பாவையைப் போலவும், ஆண்டாளுடைய திருப்பாவையைப் போலவும் கருதத் தகும் சிறப்புடையது.

சோதிடக் கலையையும் சமணர் வளர்த்தனர் எனத் தெரிகிறது. கணிதமும், சமணரால் வளர்ந்தது என்பர்.

இவ்வாறு சமணர்கள் காவியங்களையும், இலக்கணங்களையும், புராணங்களையும். சிற்றிலக்கியங்களையும், நிகண்டுகளையும் இயற்றித் தமிழ் மொழிக்கு இணையிலாத் தொண்டு புரிந்துள்ளனர்.

# ஐரோப்பியர் தமிழ்த் தொண்டு

(Sep '60, April '61, '64)

தமிழ் மொழியின் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியவர்கள் கிறித்தவ சமயச் சான்றோர். இவர்கள், உரைநடை நூல்களை மட்டுமேயன்றிக் கவிதைகளையும் காப்பியங்களையும் படைத்துத் தமிழ்த் தாய்க்குப் பல அணிகலன்களை அணிவித்துப் பெருமையுற்றனர். தமிழ் அகராதியை அமைத்து உதவியவர்களும் அவர்களே. தமிழில் அச்சு எழுத்துக்களைக் கண்டுபிடித்துத் தமிழ் நூல்களை அச்சேற்றி அழியாத் தன்மைபெறச் செய்தவர்களும் அவர்களே. மேலும் தமிழ் நூல்களை நன்கு கற்றுச் சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அகிலம் உணருமாறு செய்த பெருமையும் அவர்களையே சாரும். நிலநூல் வானநூல், வரலாற்று நூல் நிலக்கணித நூல், வேதி நூல், ஆகியவற்றைத் தமிழ் மொழியில் இயற்றிய பெருமையும் அவர்க்கே உரியது. செய்தித்தாள், கிழமைத்தாள், திங்கள் தாள் ஆகிய அறிவுக் கருவூலங்களை இந்நாட்டில் தோற்றுவித்த பெருமையும் கிறித்தவர்க்கல்லால் வேறு யார்க்குரியது? இவ்வாறு பல்லாற்றானும் மொழித் தொண்டு புரிந்த மேலோர்களைப் பற்றிச் சிறிது காண்போம்.

**ராபர் டி நொபிலி:** இத்தாலி நாட்டில் பிறந்து தென் பாண்டிய நாடு போந்து வாழ்ந்த பெரியவர் இவர். தென்மொழி வடமொழிகளில் புலமை பெற்றவர். தமிழருடைய நடையுடை பாவனைகளை மேற்கொண்ட இவர் 'தத்துவ போதக சாமி' என்று தம் பெயரையும்

மாற்றிக்கொண்டார். மந்திரமாலை, கடவுள் நிருணயம், ஏசுநாதர் சரித்திரம் என்பன இவர் எழுதிய நூல்களாகும். ஞான உபதேசம் எனும் நூல் இவருடைய சொற்பொழிவுகளின் தொகுப்பாகும்.

**சீகன்பாகு:-** இவர் ஜெர்மன் நாட்டைச் சார்ந்தவர். தரங்கம்பாடியில் தங்கிச் சமயத்தொண்டு புரிந்தபோது அங்கு ஓர் அச்சுக்கூடத்தையும், காகிதத் தொழிற்சாலை யொன்றையும் நிறுவித் தமிழ்த் தொண்டும் செய்தார். இவர் விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 'தமிழ்-இலத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு' எனும் நூலை இயற்றித் தமிழ் மொழியின் மேன்மையை மேல் நாட்டார்க்கு உணர்த்தியுள்ளார்.

**வீரமாமுனிவர்:-** இலத்தீன், தமிழ், தெலுங்கு, பாரசீக மொழிகள் ஆகிய பன்மொழிகளில் புலமை மிக்கவர். இவர் இயற்பெயர் 'கான்ஸ்டான்டியஸ் பெஸ்கி' என்பதாகும். எண்ணற்ற இலக்கியங்களைத் தமிழில் படைத்தவர் இவர். காப்பியம், பிரபந்தம், உரைநடை, இலக்கணம், அகராதி, மொழிபெயர்ப்பு ஆகிய பல துறைகளில் உழைத்துத் தமிழ் மொழியை மேன்மையுறச் செய்த இவர் தொண்டுகளை விரிவாகக் காண்போம்.

தேம்பாவணி என்னும் பெருங்காப்பியமே இவர் தொண்டின் மேன்மைக்குப் போதிய சான்று பகரும். தமிழ் இலக்கிய மரபினை எவ்வாறு ஊன்றிக் கற்றுள்ளார் என்பதனை இந்நூலை நோக்குவார் உணர்வர். இக்காப்பியம் ஏசுநாதரின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரது வரலாற்றைக் கூறுகின்றது. மூன்று காண்டங்களையும் முப்பத்தாறு படலங்களையும்

மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாடல்களையும் கொண்டு இலங்குகிறது இந்நூல். இதனைச் சீவக சிந்தாமணிக்கு இணையான காவியம் என்கிறார் பூரண லிங்கம் பிள்ளையவர்கள். காவியச் சிறப்பாலும் கற்பனை வளத்திலும் இது கம்பராமாயணம் போன்றது என்றும் கூறுவர். ஜெருசலேம் நகரை இவர் வருணிக்கும் பான்மையை நோக்குமின்.

**''பயனினால் மறைநூல் ஒக்கும் பகலினை மணியால் ஒக்கும்**
**வியனினால் உலகம் ஒக்கும் வேலியால் கன்னி ஒக்கும்**
**முயலினால் அலையை ஒக்கும் முனிமுனி ஒன்றார்க்கொக்கும்**
**நயலினால் உயர்வீ டொக்கும் நகரினைஒக்கும் வீடே''**

கம்பராமாயணப் பாடலைப் படிப்பது போன்ற உணர்வு தோன்றுகின்ற தல்லவா?

வீரமாமுனிவர் திருக்காவலூர் தேவமாதாவின் மீது சந்த இன்பம் மிக்க 101 பாக்களைக் கொண்ட "திருக்காவலூர்க் கலம்பகம்'' என்னும் நூலை இயற்றியுள்ளார். மேலும், "கித்தேரி அம்மாள் அம்மானை'' "அடைக்கலநாயகி வெண்கலிப்பா'' ஆகிய நூல்களையும், தேவாரப் போக்கில் அமைந்த "கருணாம்பரப் பதிகம்'' என்ற ஒன்றையும் இயற்றியுள்ளார். தமிழ் நீதி நூல்கள் சிலவற்றைத் 'தமிழ்ச் செய்யுள் தொகை' என்னும் பெயரால் தொகுத்துள்ளார்.

நகைச்சுவை ததும்பும் 'பரமார்த்தகுரு கதை' என்னும் உரை நடை நூலையும் 'வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம்' ஆகிய நூல்களையும் படைத்துள்ளார். திருக்குறள் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

'தொன்னூல் விளக்கம்', 'கொடுந்தமிழ் இலக்கணம்' ஆகிய இலக்கண நூல்களையும் செய்துள்ளார்.

வீரமாமுனிவரின் 'சதுரகராதி'யே தமிழில் தோன்றிய முதல் அகராதி என்னும் சிறப்பைப் பெற்றிருக்கிறது. மேலும் 'தமிழ்—இலத்தீன் அகராதி', 'போர்த்துகீசியம்—தமிழ்—இலத்தீன் அகராதி' ஆகிய இரு அகராதிகளையும் இயற்றியுள்ளார்.

**எல்லீசர்:** தமிழ் வடமொழி ஆகிய இரண்டிலும் புலமைமிக்க இவர், வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை இவ்விரு மொழிகளிலும் வரைந்துள்ளார். திருக்குறளின் முதல் பதின்மூன்று அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதியுள்ளார். தமிழ்ச் சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாப்பதில் பற்றுடையவர்.

**இரேணியஸ்:** ஜெர்மன் நாட்டைச் சார்ந்தவர். திருநெல்வேலியில் வாழ்ந்தவர். 'புதிய ஏற்பாடு' முழுவதையும் தமிழில் வரைந்துள்ளார். தமிழ் இலக்கண நூல் ஒன்றையும், வேத உதாரணத் திரட்டையும் தொகுத்துத் தந்துள்ளார்.

**போப்பையர்:** இவர் திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய நூல்களையும், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் சில பகுதிகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இத்தொண்டினால் இவருடைய தமிழ்ப்பற்றை அறிய முடிகிறது. இறந்த பிறகு தன்னுடைய கல்லறையில் "ஒரு தமிழ் மாணவன்" என்று பொறிக்குமாறு செய்தவர். இவர் எழுதிய இலக்கண நூல் ஒன்றினைத் திரு. வி. க. அவர்கள் வியந்து பாராட்டியுள்ளார்கள். போப்பையர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பல

ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ்த் தொண்டு புரிந்திருக்கிறார்.

**டாக்டர் கால்டுவெல்:** பன்மொழிப் புலமைமிக்க இச் சான்றோர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற அரிய நூலை இயற்றியுள்ளார். இவருடைய 'திருநெல்வேலிச் சரித்திரம்' வரலாற்று ஆசிரியர்க்குப் பெரிதும் பயன் தரும். தமிழில் 'நற்கருணைத் தியான மாலை', 'தாமரைத் தடாகம்' ஆகிய நூல்களை வரைந்துள்ளார்.

மேற்கூறிய சான்றோரெல்லாரும் மேலை நாட்டில் தோன்றித் தமிழகம் வந்து தமிழ்த் தொண்டாற்றியவர்கள். இங்குப் பிறந்து இம் மொழிக்குத் தொண்டாற்றியவரும் உளர்.

**வேதநாயகம் பிள்ளை:** சோழ நாட்டுக் குளத்தூரில் பிறந்த இவர் 'தமிழில் தோன்றிய முதல் நாவல்' என்னும் பெருமை மிக்க பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதியுள்ளார். சுகுணசுந்தரி சரிதம் என்னும் நாவலையும் இயற்றியுள்ளார். தாம் எழுதிய 'நீதி நூலை' திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைக் கொண்டு அரங்கேற்றினார். திருவருள் அந்தாதி, திருவருள் மாலை, தேவமாதா அந்தாதி, பெரியநாயகி அம்மாள் பதிகம் ஆகிய சிற்றிலக்கியங்களையும் படைத்துள்ளார். பல தனிப் பாடல்களையும் பாடியுள்ளார். இவருடைய இசைத்திறனை 'சத்திய வேத கீர்த்தனை', 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை' ஆகிய நூல்களில் காணலாம். இவருடைய தொண்டினைத் தமிழகம் என்றும் போற்றும் என்பது உறுதி.

**கிருஷ்ணப்பிள்ளை:** இவர் முதலில் வைணவரா யிருந்து பின்னர் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். ஆங்கிலப் புலவர் ஜான் பனியனின் 'The Pilgrims Progress' என்ற நூலைத் தழுவி இரட்சணிய யாத்திரிகம் என்னும் காப்பியத்தை இயற்றியுள்ளார். இவரைக் 'கிறித்தவக் கம்பன்' என்றும் ''தமிழ் பனியன்'' என்றும் பாராட்டுவர்.

இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள் என்பன இவர் எழுதிய பிற நூல்களாகும்.

**நல்லூர் ஞானப்பிரகாசர்:** பன்மொழிப் புலமை மிக்க இவர், சொல்லாராய்ச்சியில் பற்றுடையவர். இவருடைய 'சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதி' என்னும் நூல் மொழி ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வதாகும்.

**சாமுவேல் பிள்ளை:** தொல்காப்பியம் நன்னூல் ஆகிய இரு நூல்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை களைக் காட்டும் 'தொல்காப்பிய நன்னூல்' என்னும் நூலை இயற்றியுள்ளார்.

**வேதநாயக சாஸ்திரியார்:-** இவர் பெத்லேகம் குற வஞ்சி எனும் நாடக நூலை இயற்றியுள்ளார்.

தண்தமிழ் மொழியின் தகைமையைத் தரணி யெலாம் பறை சாற்றிய பெருமை மேல்நாட்டுக் கிறித் தவத் தமிழ்ப் புலவர்க்கே உரியது எனலாம்.

# முஸ்லீம் புலவர்கள்

(Sep '62)

முஸ்லீம் புலவர்கள் தங்கள் மதச் சான்றோர்களின் வரலாறுகளைக் காப்பியங்களாகப் பாடிக் கன்னித் தமிழ் வளர்த்தனர். புராணங்கள், கலம்பகங்கள், அந்தாதி, பிள்ளைத் தமிழ் போன்ற பலவகை இலக்கியப் படைப்புகளைப் படைத்துள்ளனர். அம்மானை, சிந்து, கோவை, ஞானப் பாடல்கள் ஆகிய பலவற்றையும் தமிழ் மொழியில் இயற்றியுள்ளனர். நாடகங்களையும் செய்துள்ளனர்.

**உமறுப்புலவர்: சீறுப்புராணத்தைப்பாடிப்** பெருமை பெற்ற பெரும்புலவர் இவர். இந்நூல் நபிநாயகத்தின் வரலாற்றையும், அவர் செய்த அற்புதங்களையும் கூறுகின்றது. நபிநாயகத்தின் நற்றுளைப் போற்றுபவர்கள் பெறும் நற்பேறுகளையும் நன்கு விளக்கும். இப்புராணம் காண்டங்களாகவும், படலங்களாகவும் வகுக்கப்பட்டு ஐயாயிரம் பாடல்களுடன் திகழ்கிறது.

அரபு நாட்டின் வளத்தைக் குறிக்கும் பாட்டில் உமறுவின் கற்பனை வளம் புலப்படுகிறது. மழை பெய்தலால் மலையினின்றும் பெருக்கெடுத்தோடும் வெள்ளம் மலைபடு பொருள் பலவற்றையும் அடித்துக்கொண்டு இழிந்தோடுகிறது. அக்காட்சி விலைமகள் மன்னனைச் சார்ந்து மயக்கி அவனிடமிருந்து பொன் மணிகளை வாரிக்கொண்டு ஓடுவதைப்போல விளங்குகிறதாம்.

**''மலையெனும் அரசன் புயங்களைத் தழுவி**
**மகிழ்ச்சி செய்து அவனுழைச் சிறந்த**
**நிலைகெழு பொன்னும் முரசுசெம் மணியும்**
**நித்தில ராசியுங் கவர்ந்து**

தொலேவிலாப் பண்டம் அனைத்தையும் வாரிச்
சுருட்டியே எல்லேவிட் டகலும்
விலேமகள் போன்று பலபல முகமாய்
வெள்ளருவிச் திரள் சாயும்

கம்பர் கோசலநாட்டுச் சரயு நதியைக்கண்ட காட்சியை அல்லவா அரபு நதி நினைவுபடுத்துகிறது.

செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்னும் பெயர் பெற்ற வள்ளலான சீதக்காதியின் வேண்டுகோட் கிணங்கியே உமறுப் புலவர் சீருப்புராணம் பாடினர் என்பர்.

குணங்குடி மஸ்தான் சாயபு: இவருடைய பாடல் களைத் தமிழுலகம் நன்கு பாராட்டுகிறது. காயல்பட் டினத்தில் பிறந்து சென்னை இராயபுரத்தில் வாழ்ந்த இவரது இயற்பெயர் 'சுல்தான் அப்துல் காதிறு' என்பதாகும். இவருடைய பாடல்கள் தாயுமானவர் பாடல் களைப் போன்ற சிறப்புடையவை. நந்தீசர் சதகம், அகத்தீசர் சதகம், மனோன்மணிக் கண்ணி, முகைதீன் சதகம், நிராமயக் கண்ணி முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

செய்குதம்பிப் பாவலர்: நாஞ்சில் நாட்டைச் சார்ந்த இலங்கடை என்னும் ஊரில் பிறந்தவர். பல புலவர் களிடையே இவர் அவதானம் (மறப்பு இன்மை) செய்து காட்டியதால் இவர் அவதானி செய்குதம்பிப் பாவலர் எனும் பெயர் பெற்றார். அவையில் பத்துப் புலவர் கேட்ட வினக்கட்கு விடையிறுத்துப் பாடிய காரணத் தால் இவர் தசாவதானி எனப்பட்டார். சம்சுத்தா சீம் கோவை, நாகைக் கோவை, திருநாகூர் திரிபந் தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களை

இயற்றியுள்ளார், இவர் சீறுப் புராணத்திற்கு உரை எழுதியுள்ளார் என்றும் கூறுவர்.

**வண்ணக்களஞ்சியப் புலவர்:** வண்ணப் பாடல்கள் பாடுதலில் வல்லவராதலால் இவர் வண்ணக் களஞ்சியப் புலவர் எனப்பட்டார். இவரது பாடல்களில் நீதிமொழி கள் மிளிரும். இவர் பாடிய நூல்களில் முகைதீன் புராணம் என்பது சிறந்ததாகும்.

**சேகனுப் புலவர்:** அரபி, பார்ஸி, வடமொழி ஆகியவற்றில் தேர்ந்த இத்தமிழ்ப் புலவர், நாகை அந்தாதி, திருமணி மாலை, கோத்திர மாலை முதலிய நூல்களும், அட்டபந்தம், நாகபந்தம், கமலபந்தம் முதலிய சித்திரக் கவிதைகளையும் பாடியிருக்கிறார்.

**ஜவ்வாது புலவர்:** முகம்மது நபிகள்மீது "முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ்" என்று ஒரு நூல் இயற்றி யுள்ளார். இவர் சரம கவிகளையும் பாடியிருக்கிறார்.

**சர்க்கரைப் புலவர்:** மெதீனாவின்மீது ஓர் அந்தாதி பாடியுள்ளார். நகைச் சுவைப்படப் பேசுதலிலும் பாடல் இயற்றுதலிலும் வல்லவர்.

**சையத் முகமது கண்ணுவியார்:** இவர் அலி நாமா என்னும் நூலையும், பத்துப் புராணங்களையும் பாடி யுள்ளார்.

**குலாம் காதிறு நாவலர்:** இவர் மும்மணிக்கோவை, நாகூர் புராணம், நாகூர் கலம்பகம், மதுரைக் கோவை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

**முகமது இபுருகிம் சாகிப் புலவர்:** நபி நாயகத்தின் வரலாற்றை வினா விடையாகப் பாடியுள்ளார்.

**பிச்சை இபுறகீம் புலவர்:** இலக்கணக் கோடரி எனும் சிறப்புப் பெயர்பெற்ற இவர் சீதக்காதிப் பதிகம், நாயகத் திருப்புகழ், திருமதினத்து மாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

**பீர்முகமது சாகிபு:** இப்புலவர் ஞானமணிமாலை, திருநெறி கீதம் முதலிய நூல்களைப் பாடியிருக்கிருர்.

**ஸயது முகம்மதுப் புலவர்:** மதுர கவி எனும் சிறப்புப்பெயர் தாங்கிய இப்புலவர், மகாபாரத அம்மானை, அலி நாமா, நூறு நாமா ஆகிய நூல்களைச் செய்துள்ளார்.

**செவத்த மரைக்காயர்:** இவர் முகமது நபியின் மீது மாக்கோவை எனும் நூலை இயற்றியுள்ளார், பிள்ளைத்தமிழ், அந்தாதி, கலம்பகம், மாலை எனும் வகைகளில் பல நூல்களைப் பாடியுள்ளார்.

இவ்வாறு முஸ்லீம் புலவர்கள் நம் தாய் மொழியில் எண்ணற்ற நூல்களை இயற்றித் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்துள்ளனர்

# சிறுகதை

( Sep '61, April '64 )

இருபதாம் நூற்றுண்டில், தமிழ் மொழியின் மறு மலர்ச்சியினைத் தெளிவாக விளக்குவன சிறு கதைகளே யாம். இலக்கிய வரலாற்றில் 'காப்பியக் காலம்' என்று வழங்குவதைப்போல இந்நூற்றுண்டைச் 'சிறுகதைக் காலம்' என அழைக்கலாம்.

வாழ்வின் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஒன்றை எடுத்து அழகுபடச் சித்திரிப்பதே சிறுகதை யாகும். ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகளைக் காண்கிருேம். ஆனுல் அனைவருமே அதனை ஆழ்ந்து நோக்கி உணர்வதில்லை. நாம் உண ராத ஒன்றை உணர்ந்தாலும் பிறருக்கு உணர்த்த முடியாத ஒன்றைக் கற்பனை வளம் மிக்க கலைஞன், உணர்ந்து, சிறுகதையாக்கிப் பிறரும் உணருமாறு செய்கிருன்.

''கதை யளவில் மிகச் சிறியதாக இருக்கலாம்; பெரியதாகவும் இருக்கலாம்; கதாபாத்திரங்கள் ஒன்ருே பலவோ இருக்கலாம்; கதை நடக்கும் காலம்கூட ஐந்து நிமிடமோ, ஒரு நாளோ, ஒன்பது ஆண்டுகளோ இருக்கலாம்; ஆனுல் கதையைப் படித்து முடித்த பின்பு உணர்ச்சி மட்டும் படிப்பவர் நெஞ்சில் நிறைய வேண் டும். எழுதி முடித்த கதைக்குப் பின்னேயும், முன்னே யும் உள்ள எழுதாத கதைகள் படிப்போர் உள்ளத்தில் விரிய வேண்டும். இதில் வெற்றி பெற்றுவிட்டால் அஃது அருமையான சிறுகதை என்பதில் ஐயமில்லை. முழுமையான வாழ்வையோ, வாழ்வின் பல கோணங் களையோ, சிறுகதையில் எதிர்பார்ப்பதற்கில்லை.

வாழ்க்கையின் ஒருகோணம், வாழ்க்கை வெள்ளத்தில் ஒரு சுழிப்பு, உணர்ச்சிப் பெருக்கில் ஒரு திருப்பம் இவற்றுள் ஒன்று போதும் சிறுகதைக்கு'' எனக் கூறு கிருர் திரு. அகிலன்.

''அரை மணியிலிருந்து இரண்டரை மணி நேரத் திற்குள் படித்து முடிக்கக் கூடியதாகச் சிறுகதை அமைய வேண்டும்'' என்பார் எட்கார் அலென்போ எனும் அமெரிக்க சிறுகதை எழுத்தாளர்.

வ.வே.சு ஐயர் அவர்களின் ''மங்கையர்க்கரசியின் காதல்'' எனும் கதைத் தொகுப்பில் எட்டுக் கதைகள் அடங்கியிருக்கின்றன. இவ்வளவு வேகமான உணர்ச் சியை உரைநடையில் எழுதிக் காட்ட முடியுமா என வியக்கும் அளவுக்குச் சிறந்து விளங்குகிறது ''மங்கை யர்க்கரசியின் காதல்'' எனும் கதை. இத்தொகுப்பில் வரும், 'குளத்தங்கரை அரசமரம்' அனைவர் உள்ளத் தையும் கவரக்கூடியது. ஆசிரியரின் புகழ் மேம்பாட் டிற்கு இந்தக்கதை ஒன்றே போதும். அரசமரம் கதை சொல்கிறது. இதில் வரும் ருக்மணி இறந்துவிட்டாள்; ஆனுல் வாசகர் உள்ளத்தில் அவள் வாழ்கிருள். 'இது ஓர் உணர்ச்சி மயமான காதல், சோகக்கதை—சிறு காவியம்' என்கிருர் க. நா. சுப்பிரமணியன்.

தமிழில் நல்ல சிறுகதை தோன்றிய காலம் மணிக் கொடி இதழ் வெளிவந்த காலமாகும். அவ்விதழில் கதை எழுதி வெளியிட்டவர்கள் மணிக்கொடி ஆசிரியர் கள் என்றழைக்கப் படுகிருர்கள். அவர்களுள் புது மைப்பித்தன், மௌனி, கு. ப. ரா. பி. எஸ். ராமையா, க. நா. சுப்பிரமணியன், சி. சு. செல்லப்பா ஆகியோர் குறிக்கத்தக்கவராவர்.

தமிழ் நாட்டில் பாரதிக்குப் பின் தோன்றிய இலக்கிய ஆசிரியர்களுள் ஒரு மேதை என்று கருதத்தக்கவர் புதுமைப்பித்தன். அவருடைய கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தையோ கற்பனைக்கு எட்டாத கருத்தையோ உணர்த்துவனவாக அமைந்துள்ளன. அவருடைய 'காஞ்சனை' என்னும் தொகுப்பில் வரும் கதைகள் அற்புதமானவை. அதில் வரும் 'சாபவிமோசனம்' என்னும் கதை இந்நூற்றுண்டில் தலைசிறந்த கதைகளில் முதன்மையானது எனக் கருதலாம். கல்லாகக் கிடந்த அகலிகை இராமனுடைய பாத விசேடத்தால் பெண்ணுக உயிர்த்தெழுந்தாள் என்பது இராமாயணக் கதை. ஆனுல் அவளோ புதுமைப்பித்தனின் இந்தக் கதையில் மீண்டும் கல்லாகிக்கிடக்கிருள். அயோத்திக்குத் திரும்பியபிறகு ஒருநாள் இராமனும் சீதையும் கௌதமரின் வீட்டிற்குச் செல்கிருர்கள். அங்கு, முன்பு கல்லாகிக்கிடந்து பின் பெண்ணுகமாறிய அகலிகை சீதையுடன் உரையாடுகிருள். அப்போது சீதை இராமனுல் அக்கினிப்பரீட்சைக்குள்ளானதைக் கேள்வியுற்றதும், திடுக்கிட்டு மீண்டும் கல்லாகி விடுகிருள் அகலிகை.

இவ்வாறு காப்பிய நிகழ்ச்சியைத் தன் புரட்சி மனப்பான்மையால் மாற்றி இலக்கிய உலகில் ஓர் எழுச்சியூட்டினுர் புதுமைப்பித்தன். இவருடைய 'கடவுளும் கந்தசாமியும்' என்னும் கதையைப் பாராட்டாதார் இலர். வளர இருக்கும் சிறுகதை மாளிகைக்குப் புதுமைப்பித்தன் அடித்தளம் அமைத்தார் எனச் சுருக்கமாகக் கூறலாம்.

இவரோடு எண்ணத்தக்க மற்ருெரு சிறந்த எழுத்தாளர் கு.ப. ராஜகோபாலன். 'கனகாம்பரம்' என்னும்

தொகுப்பில் இவருடைய கதைகள் அடங்கியிருக்கின்றன. பத்துப் பக்கத்தில் அடங்கிய "விடியுமா?" என்னும் கதை மிகச் சிறந்ததாகும்.

'அழியாச்சுடர்', 'குடைநிழல்', 'பிரபஞ்சகானம்' போன்ற பல சிறந்த கதைகளை மௌனி எழுதியுள்ளார். இவரைப் பற்றிப் புதுமைப்பித்தன், "கற்பனையின் எல்லைக் கோட்டில் நின்று வார்த்தைகளுக்குள் அடைபட மறுக்கும் கருத்துக்களையும் மடக்கிக் கொண்டு வரக்கூடியவர் அவர் ஒருவரே," எனக் கூறியுள்ளார்.

லா. ச. ராமாமிருதத்தின் கதைகள் 'ஜனனி,' 'இதழ்கள்' என்னும் தொகுப்புக்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவருடைய கதைகளில் முக்கிய இடம் பெற்றுள்ளது குடும்பந்தான். அவருக்கு உள்ள சிறப்பியல்பு புலனுணர்ச்சிகளைச் சித்திரிப்பதுதான்.

பெரும்பாலோரைச் சிறுகதை படிக்குமாறு தூண்டும் வகையில் கதை எழுதிப் பெயர் பெற்றவர் 'கல்கி'. விறுவிறுப்பாகவும், நகைச்சுவைப் படவும் எழுதுவதில் தலைசிறந்தவர் இவர். இவருடைய கதைகள் கலைமெருகு கொண்டு ஒளிர்கின்றன. சங்க இலக்கியச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு கதை எழுதி வெற்றி பெற்றவர்கள் டாக்டர் மு. வரதராசனுர், கி.வா. ஜகந்நாதன் ஆகியோர்.

'சிறுகதை' உலகில் அகிலனுக்குத் தனி இடம் உண்டு. கற்பனை வளம் குன்ருமல் பதினெட்டு ஆண்டுகளாக இவர் எண்ணற்ற கதைகளை எழுதியுள்ளார். காலத்தை யொட்டி கதை அமைப்பதில் நிகரற்றவர். அரியலூர் ரயில் விபத்தை ஒட்டியும், தற்போதைய பாகிஸ்தான் படையெடுப்பை ஒட்டியும் இவர் எழுதிய

கதைகள் சிறந்தவை. இவருடைய 'நான் கதை எழுதின கதை' என்னும் கதை எழுத்தாளனுடைய மன நிறைவை அளந்து காட்டுகிறது.

மணிக்கொடி யுகத்தைச் சார்ந்த பி.எஸ், ராமையா காலத்தின் வளர்ச்சிக்கேற்றவாறு கதை எழுதுவதில் சிறந்து விளங்குகிருர்.

சிறுகதை எழுத்தாளர்களின் பெயர்ப்பட்டியல் நீளும் பட்டியலாகும். விந்தன், சோமு, தி.ஜ.ர. கு. அழகிரிசாமி, தேவன், மாயாவி, தூரன், ஜெக சிற்பியன் ஆகியோர் புகழ்மிக்க எழுத்தாளர் ஆவர். ரா. கி. ரங்கராஜனின் 'பல்லக்கு' ஜெகசிற்பியனின் 'நரிக்குறத்தி', தி. ஜானகிராமனின் 'சிலிர்ப்பு' ஆகிய கதைகள் நெஞ்சிருக்கும்வரை நினைவில் நிற்பவை.

குடிசை வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதில் ஜெயகாந்தன் மிகவும் வல்லவராவர். 'யாருக்காக அழுதான்' என்னும் கதை தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு நல்ல சான்று தருகிறது.

ஆர். சூடாமணி, அநுத்தமா, ராஜம் கிருஷ்ணன், குகப்ரியை ஆகியோர் பெண் எழுத்தாளர்களில் சிறந்தவராவர்.

குழந்தைகளுக்கு ஏற்றவாறு கதை புனைவதில் பூவண்ணன் சிறந்து விளங்குகிருர். பிஞ்சு உள்ளங்களில் படிக்கும் ஆர்வத்தை உண்டாக்குவதில் இவர் பெரிதும் வெற்றி பெற்றுள்ளார். இவருடைய 'அன்புத் தாத்தா' எனும் சிறுகதைத் தொகுதி பல பதிப்புக்கள் வெளி வந்துள்ளன.

நூற்றுக் கணக்காக எழுத்தாளர்கள் தோன்றி ஆயிரக்கணக்கான கதைகளைப் படைக்கின்றனர்

என்பது உண்மை. ஆயினும் அவற்றுள் நூற்றுக்கு ஒன்றுகூட இலக்கிய மதிப்பைப் பெறவில்லை என்று தான் கூற வேண்டும். காரணம், அக் கதைகள் பொழுது போக்கு ஒன்றையே கருத்தில் கொள்வது-தான். ஆகவே பொழுது போகும்போது அக்கதைகளும் கூடவே போய் விடுகின்றன. நிலைத்து நிற்க முடிய வில்லை.

சிறுகதை எனும் இலக்கியக் கோயிலில் தீய பண்பு களை நுழைய விடாமல் நல்லொழுக்க உணர்ச்சியைப் புகுத்தல் வேண்டும். வாழ்க்கையில் உள்ளதை உள்ள வாறு விளக்குவது, சிறுகதை ஆசிரியனின் வேலைதான் என்றாலும் ஒழுக்கக் கேட்டை வருணித்துக் கொண் டிருக்க வேண்டாமே.

இப்போது கதைக்கு எங்கும் வரவேற்பு காணப் படுகிறது. திரைப்படம் கதையைத் தேடி அலைகிறது. பத்திரிகை 'கதை தேவை' என விளம்பரம் செய்கிறது. வானொலியும் கதையைத் தேடுகிறது. நல்ல கதையைப் படைப்போர்க்குப் பத்திரிகைகளும் திரைப்படங் களும் பெருந்தொகையைச் சன்மானமாகத் தர முன் வந்துள்ளன. ஆகவே கதைக்கு நல்ல எதிர்காலம் உண்டு எனக் கருதலாம்.

# நாவல் (புதினம்)

(April, '61)

"வால்மீகியும் கம்பரும் இந்நூற்றுண்டில் தோன்றி யிருந்தால் காப்பியம் இயற்றியிருக்க மாட்டார்கள்; நாவலே புனைந்திருப்பார்கள்" என ஒரு திறனுய் வாளர் மொழிந்தார். இக்கூற்று அப்படியே பொருந் தாது என்றாலும் இதனால் நாவலுக்கு இன்று உள்ள கவர்ச்சியைத் தெரிந்து கொள்ளலாம்.

கி.பி. 18 ஆம் நூற்றுண்டில்தான் நாவல் இலக்கி யம் தோன்றியது. அது தோன்றிய சில ஆண்டுகளுக் குள் மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. விற் பனையும் மிகுதியாயிற்று.

கதை, சூழ்ச்சி, பாத்திரங்கள், உரையாடல், காலம், இடம் முதலியன பொருத்தமாகவும் சிறப்பாகவும், நாவல்களில் அமைதல் வேண்டும். நாவல் ஆசிரியன் பாத்திரங்களோடு ஒன்று படவேண்டும். பாத்திரங் களை ஆசிரியன் ஆளுவது போல் இல்லாமல், ஆசிரி யனைப் பாத்திரங்கள் ஆளுவது போல் அமைய வேண்டும். அப்போதுதான் நாவல் மாந்தர் கற்பனை என்ற எண்ணம் எழாது. ஆழ்ந்த கற்பனையும் தெளிந்த உள்ளமும் உடையவர்களே சிறந்த நாவல்களைப் படைக்க இயலும். தமிழ் மொழியில் முதல் முதலாக நாவல் இலக்கியத்தைத் தோற்றுவித்தவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளையாவார். பிரதாப முதலியார் சரித் திரம், சுகுண சுந்தரி ஆகியவைகள் இவர் எழுதிய நாவல்களாம். பிரதாப முதலியார் சரித்திரத்தின் நடை ஜான்சனின் நடையைப் பின்பற்றுகிறது என்பர். தொடக்கம் முதல் முடிவுவரை சிறிதும் சுவை குன்ரு

மல் விளங்குகிறது இந்நூல். இது ஒரு சமூக நாவல். இப் பிரதாப முதலியாரும் ஞானம்பாளும் மறக்க முடியாத பாத்திரங்களாவர். வேதநாயகம் பிள்ளைக் குப் பிறகு ராஜம் ஐயர் 'கமலாம்பாள் சரித்திரம்' எனும் நாவலைப் படைத்தார். இவர் எழுதியது இந் நூல் மட்டுமே. இது ஒன்றே அவருக்குப் பொன்றுப் புகழ் தருகிறது. மாதவையாவின் "பத்மாவதி சரித் திரம்" மறக்க முடியாத ஒன்றாகும். சரவண முத்துப் பிள்ளையின் 'மோகனுங்கி' குறிப்பிடத்தக்க நாவ லாகும். இவையெல்லாம் சமூக நாவல்களாகும்.

ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், செய்யூர் சாரநாயகி அம்மாள், ரங்கராசு ஆகியோர் எண்ணற்ற துப்பறியும் நாவல்களை இயற்றி னர். அவை மக்களால் விரும்பி வரவேற்கப்பட்டன.

நாவல் உலகத்தில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் 'கல்கி'யாவார். இவர் வரலாற்றுப் புதினங்களைப் படைத்து இலக்கிய வரலாற்றில் தனி இடத்தைப் பெற் றுள்ளார். சிவகாமியின் சபதம், பொன்னியின் செல் வன், பார்த்திபன் கனவு முதலிய நாவல்கள் அவருக் குக் குன்றுப் புகழ் தருபவை. கற்பவரின் ஆர்வத்தை மிகுதியாக்கும் ஆற்றல் கல்கி அவர்களின் தனிச் சிறப் பியல்பாகும். அடுக்கடுக்காகச் சிக்கல்களைப் புகுத்தி அவற்றை அற்புதமாக விடுவிக்கும் விரகு பெற்றவர் அவர். அவருடைய சிவகாமி, நாகநந்தி, மகேந்திரன், மாமல்லன், புலிகேசி, குந்தவை ஆகியோரை யாரால் மறக்கமுடியும்?

சோழர் காலத்திலும் பல்லவர் காலத்திலும் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றை அடிப்படையாகக்

கொண்டு, அக்காலத் தமிழ்நாட்டு நிலையை அகக் கண்ணுற்கண்டு சித்திரித்துக் காட்டும் வகை பாராட்டத் தக்கது. சர். வால்டர் ஸ்காட் என்னும் நாவலாசிரியர் எவ்வாறு சரித்திர நாவல்களை எழுதி ஆங்கில மொழியை வளப்படுத்தியுள்ளாரோ அவ்வாறே கல்கியும் சரித்திர நாவல்களை எழுதித் தமிழ் மொழியைச் சிறப்பித்துள்ளார்.

வரலாற்று நாவல்கள் படைப்பதில் கல்கியைப் போல் சிறந்த மற்றொருவர் சாண்டில்யன் ஆவார். இவருடைய 'மலைவாசல்' என்றும் நிலைத்து நிற்கும் சிறப்புடையதாகும். நீண்ட சொற்றொடர்களை அமைத்து எழுதுவது இவருடைய இயல்பாகும். ஆயினும் வாசகர்கள் அவற்றை அலுப்படையாமல் படிக்கின்றனர். ஜெகசிற்பியனின் 'திருச்சிற்றம்பலமும்' அரு. இராமநாதனின் 'வீரபாண்டியன் மனைவியும்' அகிலனின் 'வேங்கையின் மைந்த'னும் சிறந்த வரலாற்றுப் புதினங்களாகும். இவற்றுள் 'வேங்கையின் மைந்தன்' சாகித்ய அகாடெமியின் பரிசுபெற்றுள்ளது என்பது குறிக்கத் தக்கது.

சிநேகிதி, நெஞ்சின் அலைகள், பெண் ஆகியவை அகிலனின் படைப்புக்களில் சில; இவருடைய நாவல்கள் சமூகக் குறைபாடுகளை எடுத்துரைக்கின்றன. 'பாவை விளக்கு' எனும் இவருடைய நாவல் மிகச் சிறந்ததாகும். அதில் வரும் "உமா" கற்பார் நெஞ்சைக் கனியச் செய்யும் பான்மையள். இந்நாவல் 'கல்கி' இதழில் தொடர்ந்து வந்து ஆயிரக்கணக்கான வாசகர்களைப் பெற்றுவிட்டது. கதை முடிந்ததும் பலர் பாராட்டி எழுதினர். "இன்னும் தொடர்ந்து எழுதக்

கூடாதா?'' என வேண்டினர் பலர். அதற்கு அகிலன் அவர்கள் ''உமா இறந்த பிறகுமா நான் அதைத் தொடர்ந்து எழுதவேண்டும்?'' எனப் பதிலளித்தார். உமா எனும் பாத்திரத்தில் ஆசிரியர் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளார் என்பதனை இதிலிருந்து உணரலாம்.

நாவல்கள் அறிஞர்க்குக் கருத்து விளக்கத்தையும் மற்றையோர்க்கு வெறும் கதைகளாகவும் அமைதல் வேண்டும் என்பர். இம்முறையில் நாவல் எழுதிய பெருமை மு. வரதராசனுருக்கு உண்டு. சமுதாயக் குறைகளைப் பண்போடு சுட்டிக்காட்டி, நெஞ்சுருகச் செய்து, திருத்தும் ஆற்றல் மு. வ.வின் நாவல் களுக்கு உண்டு. தனித் தமிழில் இவ்வளவு அழகாக வும், தெளிவாகவும், எளிமையாகவும் எழுதுவோர் மிகச் சிலரே எனலாம். இவருடைய நாவல்கள் பல்லா யிரக் கணக்கான வாசகர்களைப் பெற்றிருக்கின்றன. கள்ளோ? காவியமோ? நெஞ்சில் ஒரு முள், கரித்துண்டு, கயமை, அகல்விளக்கு ஆகிய இவருடைய நாவல்கள் மிகச் சிறந்தனவாம். மனப் போராட்டத்தை அழகு படச் சித்திரிக்கும் 'அகல் விளக்கு' சாகித்ய அகா டெமியின் பரிசைப்பெற்றது.

டாக்டர் மு. வ. அவர்களின் நடையைப் பின்பற்றி கு. ராஜவேலு அவர்களும் நல்ல நாவல்களைப் படைத் துள்ளார். 'காதல் தூங்குகிறது', 'இளவேனில்' ஆகி யவை இவர் தம் சிறந்த நாவல்களாகும்.

குடும்பச் சூழலை அடிப்படையாகக் கொண்டு நாவல் கள் படைப்பதில் பி. எம். கண்ணன், ஆர் வி., மாயாவி அநுத்தமா போன்றோர் சிறந்து விளங்குகின்றனர். பி. எம். கண்ணனின் 'நாகவல்லி'யும், ஆர். வி.யின்

'அணையா விளக்கு', மாயாவியின் 'எத்தனை கோடி இன்பம்', ராஜம் கிருஷ்ணனின் 'குறிஞ்சித்தேன்' அநுத்தமாவின் 'ஜயந்திபுரத் திருவிழா' ஆகியவை தலை சிறந்த நாவல்களாகும். சீர்திருத்த நாவல்கள் புனைந்தோருள் குறிப்பிடத் தகுந்தவர் வ.ரா. வ.ரா.வின் 'சுந்தரி'யை விஞ்சும் அளவில் ஒரு புரட்சி நூல் பின்னர்த் தோன்றவில்லை. விந்தனின் 'பாலும் பாவையும்', ஜீவாவின் (நாரண துரைக்கண்ணன்) 'வேடதாரி'யும் சிறந்தன.

தலைசிறந்த பெண் எழுத்தாளர் லட்சுமி. 'காஞ்சனையின் கனவு', 'பெண் மனம்' நாயக்கர் மக்கள்' ஆகியவை இவரது அரிய படைப்புகளாகும்.

இந்தி, மராத்தி, வங்காளி போன்ற மொழிகளிலிருந்து. தமிழில் மொழிபெயர்க்கப் பெற்ற நாவல்கள் பல. மராத்திய ஆசிரியரான காண்டேகரின் நூல்கள் என்றும் பொலிவுடன் திகழும் தன்மை வாய்ந்தவை. இவற்றை மொழிபெயர்த்தவர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. என்பவராவார். அழகான உவமைகளைப் பக்கந்தோறும் அமைத்து வாசகர்களை இன்ப வெள்ளத்தில் மூழ்குமாறு செய்யும் பெருமை காண்டேகருக்கு உண்டு: 'புயலும் படகும்', 'கிரௌஞ்சவதம்', 'வெறும்கோயில்' என்பன அவருடைய சிறந்த நாவல்களுள் சில. சுத்தானந்த பாரதியார் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த 'ஏழைபடும்பாடு', 'இளிச்சவாயன்' ஆகிய நாவல்கள் சிறந்தன. தாகூர் வங்க மொழியில் எழுதிய 'பூந்தோட்டம்', 'புயல்' ஆகியவற்றை த. நா. குமாரசாமியும் 'குமுதினி' என்னும் நாவலை ரங்கநாயகியும், 'மாயாவிநோதினி'யைத் 'தஞ்சமும்' மொழிபெயர்த்துள்ளனர். பங்கிம் சந்திரர் எழுதிய 'ஆனந்தமடம்', 'விஷ

விருட்சம்' முதலிய நாவல்களும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

இந்நூற்றுண்டில் நாவல்கள் நல்ல முறையில் வளர்கின்றன என்று கூறலாம். நூல்நிலையங்கள் பெருகுகின்றன; அரசு பெரும் பொருளை அந்நூல் நிலையங்கட்குத் தருகிறது. எழுதுவோர் தொகையும் கூடுகிறது. ஆகவே, நாவல் இலக்கியத்திற்கு நல்ல எதிர்காலம் உண்டு.

# நாடகம்

(April '61, '62)

தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என முன்னோர் வகுத்தனர். ஆகவே நம் தமிழ் முத்தமிழ் என வழங்கலாயிற்று. இயற்றமிழ் படித்து உணரத்தக்கது; இசைத்தமிழ் கேட்டு இன்புறத் தக்கது; நாடகத் தமிழ் பார்த்து மகிழத் தக்கது. இவ்வாறு மொழியை முக்கூறுகப் படுத்திப் பாராட்டிய பெருமை உலகத்தில் வேறு எம்மொழிக்கும் இல்லை. "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தைக்கொண்டு பண்டைக் காலத்திலேயே தமிழில் நாடகம் இருந்திருக்க வேண்டும் என்று உறுதியாக நம்பலாம்.

சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் நாடக அமைப்பு முறையைக் கூறுகிறது. நாடக மேடையின் நீளம், அகலம், உயரம் ஆகியவை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும், தூண்கள், திரைச்சீலைகள் ஆகியவற்றின் அமைப்பு முறையைப் பற்றியும் அந்நூல் விரிவாகக் கூறுகிறது. நாடகம் ஆடுவோர்க்கு இன்ன இடம், நாடகத்தைப் பார்ப்போர்க்கு இன்ன இடம், பின்பாட்டுப் பாடுவோர்க்கு இன்ன இடம், நாடகத்தைப் பார்க்க வரும் அரசர் முதலியோர் உட்கார இன்ன இடம் ஆகிய செய்திகளையும் இந்நூல் கூறத்தவறவில்லை. இந்நூலின் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார், அகத்தியம், பரதம், பூத புராணம் முதலிய நாடக நூல்களைக் குறித்துள்ளார். சிலம்பின் உரைப்பாயிரத்தில், 'நாடகமேத்தும் நாடகக் கணிகை'

என்னும் சொற்றொடரை விளக்கும்போது, 'நாடகத் திற்கே பெருமையளிக்கும் மாதவி' எனக் குறிப்பிட் டுள்ளார். இவ்வாறு சங்க காலத்தில் நாடகத்தைப் பற்றிய செய்திகள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

இடைக் காலத்தில், சோழர் ஆட்சியில் நாடக மாடுவோர் மன்னனிடம் மான்னியங்கள் பெற்ற செய் தியைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராஜ ராஜ சோழனின் வெற்றியைக் குறிக்கும் "இராஜ ராஜ விஜயம்" எனும் நாடகம் நடிக்கப்பட்டதாகத் தஞ்சைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. பின்னர், 'குலோத்துங்க சோழ நாடகம்', 'பூம்புலியூர் நாடகம்' ஆகிய நாட கங்கள் தோன்றின.

இவ்வா்று காலங்கள்தோறும் சிறந்திருந்த நாடகக் கலை படிப்படியாகப் பண்டைய பெருமை இழந்துவிட் டது என்பர். நாடகக் கலைஞர்களைக் கூத்தாடிகள் என்று இழிவாக நடத்தினர்; அவர்கள் வாழ்வும் வள மிழந்தது.

17, 18 நூற்றுண்டுகளில் நாடகப் பண்பு நிறைந்து செய்யுள் வடிவில் குறவஞ்சி, நொண்டி, பள்ளு ஆகிய நூல்கள் தோன்றின. கற்பனை வளம் மிக்க திரிகூட ராசப்ப கவிராயர் காலத்தின் தேவைக்கேற்ப இவ்வகை நூலை இயற்றினர்.

இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் கதை களை நாடகமாக்கினர் சிலர். அருணசலக் கவிராயரின் இராம நாடகம், சுவாமிநாத பிள்ளையின் இராம நாட கம் என்பன இராமயணத்தை ஒட்டித் தோன்றிய நாட கங்களாம். அல்லி நாடகம், அர்ச்சுன நாடகம், அபி மன்யு நாடகம், அதிருபாமராவதி ஆகிய நாடகங்கள்

பாரதத்தினின்றும் தோன்றின. இதே காலத்தில் தோன்றிய கோபாலகிருஷ்ண பாரதியாரின் 'நந்தன் சரித்திரம்' புகழ் மிக்கதாகும். 'அரிச்சந்திர விலாசம்', 'மதுரை வீரன் விலாசம்', 'வள்ளி திருமணம்' ஆகிய நாடகங்களும் குறிக்கத்தக்கவையே.

ஆயினும் சென்ற நூற்றுண்டில் இருந்துதான் நாடகம் புத்துயிர் பெற்றது என்று கூறவேண்டும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் ஷேக்ஸ் பியர், காளிதாசர், பவபூதி ஆகியோரின் ஆங்கில, வடமொழி நாடகங்களைத் தழுவியும் மொழிபெயர்த் தும் தமிழ் நாடகங்கள் இயற்றினர். பேராசிரியர் சுந் தரம் பிள்ளையவர்களின் மனோன்மணீய நாடகம் தமிழ் மொழிக்குப் பெருமை தரும் வகையில் ஒப்பும் உயர்வும் அற்ற ஒன்றுக விளங்குகிறது. ஆங்கிலப் புலவர் லார்டு லிட்டன் எழுதிய இரகசிய வழி எனும் கதை யைத் தழுவியது மனோன்மணீயம். இது தழுவல் நாடகமே எனினும் மூல நாடகத்தையும் விஞ்சும் வகையில் ஆக்கப்பெற்றுள்ளது பாராட்டத்தக்க தாகும். எனினும் மனோன்மணீயம் படிக்க எழுந்த நாடகமே அன்றி நடிக்கத் தோன்றியதன்று. மகாகவி காளிதாசரின் சாகுந்தல நாடகத்தை வடமொழி யினின்றும் தமிழில் சிறப்பாக மொழிபெயர்த்துத் தந்துள்ளார் மறைமலையடிகளார். பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிய 'டம்பாச்சாரி விலாசம்' என்னும் நூல் சிறந்த சமூக நாடகமாகும்.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பரிதி மாற்கலைஞர்) நாடகக் கலைக்குச் சிறந்த தொண்டாற்றி யுள்ளார். நாடகம் அமையும் முறையையும், நாடகப் பாத்திரங்களைப் படைக்கும் முறையையும், விளக்கும்

வகையில் அரிய 'நாடகவியல்' என்னும் நூலை இவர் அளித்துள்ளார். 'கலாவதி', 'மானவிஜயம்', 'ரூபாவதி' ஆகிய நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார்.

சங்கரதாஸ் சுவாமிகள் நாடக உலகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினர் எனக் கூறல் வேண்டும். நாடகங்கள் பலவற்றை எழுதியதோடு தாமே நடித்தும் நாடகக் கலையின் உயர்வுக்கு அவர் வழி அமைத்தார். திறந்த வெளியில் தெருக்கூத்து மேடைகளில் இருந்துவந்த நாடகத்தைத் திரைக்காட்சி அமைப்புக் களோடு முதன் முதலாகக் கூரைபோட்ட கொட்டகை களில் நடித்தவர் தஞ்சையைச் சார்ந்த கோவிந்தசாமி ராவ் என்பவராவார். இவரைத் தொடர்ந்து பலர் நாடக சபைகளைத் தோற்றுவித்தனர். அவர்களுள் குறிப்பிடத்தகுந்தவர் பம்மல் சம்பந்த முதலியாரா வார். இவர் சென்னையில் சுகுண விலாச சபையைத் தோற்றுவித்தார். இதைத் தொடர்ந்து ரசிக ரஞ்சனி சபை தோன்றியது.

நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார் நாடகக் கலைக்குச் செய்த தொண்டு இணையில்லாததாகும். ஷேக்ஸ்பியர், காளிதாசர் ஆகியோரின் நாடகங்களை மொழிபெயர்த்ததோடு தாமும் பல புதிய நாடகங்களை எழுதினர். பலவற்றில் தாமே நடித்தும் உள்ளார். அவர் நாடகங்களில் 'மனோகரா'வும் 'சபாபதி'யும் தமிழரால் மறக்க முடியாதன.

தமிழ் நாடக உலகம், ''தமிழ் நாடகத் தலைமை யாசிரியர்'' என்று சங்கரதாஸ் சுவாமிகளையும் 'தமிழ் நாடகத் தந்தை' என்று பம்மல் சம்பந்த முதலியாரை யும் இதயத்தில் வைத்துப் போற்றி வருகிறது.

இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் 'கீசகன்', 'பிருதிவிராஜன்' எனும் நாடகங்களை நமசிவாய முதலியார் இயற்றியுள்ளார். வெறும் புராணக் கதைகளையும், நாடோடிக் கதைகளையுமே நாடகமாக்கி நடித்து வந்த தமிழ் மேடை 1920-க்குப் பிறகு மறுமலர்ச்சி பெறலாயிற்று.

விபுலாநந்தரின் ''மதங்க சூளாமணி'' சிறந்த நாடக நூலாகும்.

சமூக சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு பல நாடகங்கள் கடந்த இருபது ஆண்டுகளில் தோன்றியுள்ளன. ஜே. ஆர். ரங்கராஜுவின் 'இராஜாம்பாள்', 'மோகனசுந்தரம்', வடுவூர் துரைசாமி ஐயங்காரின் 'மேனகா' முதலிய நாடகங்களை எம். கந்தசாமி முதலியார் மேடை நாடகங்களாக்கி நடிக்கச் செய்தார்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் நாடகம் பெரும் பங்கேற்றது. 'கதரின் வெற்றி', 'தேசபக்தி' ஆகிய நாடகங்கள் மக்களிடையே தேசிய உணர்ச்சியை உண்டாக்கின. எஸ். டி. சுந்தரம் எழுதிய 'கவியின் கனவு' சிறந்த தேசிய நாடகமாகும்.

கு. சா. கிருஷ்ணமூர்த்தியின் 'அந்தமான் கைதி', ப. நீலகண்டனின் 'முள்ளில் ரோஜா', எஸ். வி. சகஸ்ரநாமத்தின் 'பைத்தியக்காரன்', நாரண துரைக்கண்ணனின் 'உயிரோவியம்', தி. ஜானகிராமனின் 'வடிவேலு வாத்தியார்', பி. எஸ். ராமையாவின் 'தேரோட்டி மகன்' ஆகிய நாடகங்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

ஆங்கில அரசை எதிர்த்துத் தூக்குமேடை ஏறிய வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றை ரா. வேங் கடாசலம் 'முதல் முழக்கம்' என்ற பெயரால் நாடகமாக எழுதியுள்ளார். இவருடைய 'இமயத்தில் நாம்' என்னும் மற்ருெரு நாடகமும் சிறந்ததே.

அரு. இராமநாதனின் 'இராஜராஜ சோழன்' நாடகம் வெற்றிகரமாக நடிக்கப்பெற்று மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

நடிப்பதற்கன்றிப் படிப்பதற்காகவே தோன்றிய நாடகங்களுள் சிறந்தது டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் 'மனைவியின் உரிமை' என்னும் நாடக மாகும். இந்நூல் செம்மை சான்ற இலக்கிய நடையில் அமைந்துள்ளது. பழைய தமிழ் இலக்கியங்களில் காணும் சிறந்த கருத்துக்களை விளக்கும் வகையில் கி. ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் 'தமிழ்ச் செல்வம்' என்னும் நாடகம் விளங்குகிறது.

# புறநானூறும் வரலாறும்

(April '63)

நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டு நிகழ்ச்சிகளை முறைப்படி கூறுவதாகும். நாட்டை ஆண்ட மன்னனுடைய காலம்—அவன் காலத்து நிகழ்ச்சிகள்—அவன் ஆற்றிய செயல்கள்—அவன் மறைவு—அவனுக்குப் பிறகு அரசு கட்டிலேறியவன் என இவ்வாறு முறைப்படி நடந்த நிகழ்ச்சிகளைச் சங்கிலித் தொடர் போல் கூறுவதே வரலாறு எனப்படும். கல்வெட்டு, நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றின் வாயிலாக ஒரு நாட்டின் வரலாற்றை அறியலாம்.

தமிழ் நாட்டின் சங்ககால வரலாற்றை அறிவதற்கு அக்காலக் கல்வெட்டுக்களோ அன்றி நாணயங்களோ கிடைத்தில; இலக்கியங்களே கிடைத்துள்ளன. அவ்வாறு கிடைத்த இலக்கிய நூல்களுள் புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் தமிழ் நாட்டு வரலாற்றை அறியப் பெரிதும் உதவுகின்றன. அந்நூல்கள் கூட முதலில் குறித்தவாறு நாட்டின் வரலாற்றை முறையாகத் தொடர்ந்து கூறுகின்றன எனக் கூறவியலாது. ஆயினும் முடியுடை மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள் ஆகிய இவர்களுடைய வரலாறுகளைப் பற்றிய குறிப்புக்களை நாம் புறநானூற்றில் கண்டு களிக்கலாம். புறப்பாடல்களைப் பாடிய புலவர்கள் என்றோ நடந்த நிகழ்ச்சிகளைப் பின்னர் நினைத்துப் பார்த்துப் பாடினரல்லர். அவர்கள் தத்தம் காலத்து மன்னர்கள் வள்ளல்கள் முதலியோரைப் பற்றி அவ்வப்போது பாடி முடித்

தனர். வாழ்தல் வேண்டிப் பொய் கூருத புலவர்கள் கூற்றில் 'நம்பத்தகாதன' இருக்க முடியாது.

இனி வரலாற்றுச் சிறப்புடைய குறிப்புக்கள் சில வற்றைக் காண்போம்.

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!"

என வரும் புறப்பாட்டு வரிகள், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்னும் அரசன் பாரதகாலத்தில் வாழ்ந்தவன் என்ற வரலாற்றைக் கூறுகின்றன. இப் புறப்பாட்டின் ஆசிரியரான முரஞ்சியூர் முடிநாகனுர் முதற் சங்கத்தைச் சார்ந்தவர் எனக் கருதப்படுகிருர்.

புறநானூற்றில் ஒன்பதாவது பாட்டு வடிம்பலம்ப நின்ற பாண்டியனைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

"எங்கோ வாழிய குடுமி, தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர் பஃறுளி மணலினும் பலவே"

என அவன் வாழ்த்தப் பெற்றுள்ளான். இந்நெடி யோன் தொல்காப்பியர் காலத்தைச் சார்ந்தவன் எனத் தொல்காப்பியப் பாயிரம் கூறுகிறது. தொல்காப்பியர் காலம் கி.மு. 400 எனக் கூறுவர். ஆகவே நெடியோ னும் அக்காலத்தவனே என அறியலாம். இவனுக்குச் சயமாகீர்த்தி என்னும் பெயரும் உண்டு.

முதற் கரிகாலனைப் பற்றி இரு புறப்பாடல்கள் கூறுகின்றன. இவன் கரிகாற் பெருவளத்தானுக்குப்

பாட்டனுவான். இம்முதற் கரிகாலன் வெண்ணிப்பறந் தலையில் 'பெருஞ் சேரலாதனுடன் போரிட்டபோது, சேரன் புறப்புண் நாணி வடக்கிருந்தான் என அறி கிறோம்.

இரண்டாம் கரிகாலன் இமயம் வரை சென்று பகைவரை வென்றவன். இவன் காலத்தில் பூம்புகார் மிகச் சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது என அறிகிறோம். இவனுக்குப்பின் நலங்கிள்ளி, நெடுங் கிள்ளி, கிள்ளி வளவன், கோப்பெருஞ்சோழன் முதலி யோர் சோழநாட்டை ஆண்ட செய்தியையும் புற நானூறு தெரிவிக்கிறது.

"வட இந்தியாவை அடிப்படுத்திய வரலாற்றுச் சிறப்புடைய பேரரசன் மோரிய சந்திர குப்தன் ஆவன். அவனைப் போலவே பாண்டியருள் சயமா கீர்த்தி விளங் கினன்; சோழருள் இரண்டாம் கரிகாலன் தோன்றினன்; சேரருள் செங்குட்டுவன் விளக்க முற்றான். அதனுல் தான், சயமா கீர்த்தி சாவகம் முதலிய கடல் கடந்த நாடு களை வெல்ல முடிந்தது; கரிகாலன் இமயம்வரை செல்ல முடிந்தது; சேரன் ஆரிய அரசரை வென்று பெருஞ் சிறப்போடு இமயத்தினின்றும் பத்தினிக்குக் 'கல்' கொணர முடிந்தது."

முடியுடை வேந்தர் நாடுகளில் குறுநில மன்னர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் பாரி, காரி, ஓரி, மலைய மான், அதியமான் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவ ராவர். முடியுடை வேந்தன் ஒருவன் தனக்கு இணை யான வேந்தனுடன் போர் எதிருங்கால் தன் சிற்றரச ருடன் வந்து போரிடல் இயல்பு. தலையாலங்கானத் துச் செருவென்ற நெடுஞ்செழியனை, வேளிர் ஐவர்

துணையுடன் இருபெரு வேந்தரும் எதிர்த்தமை கொண்டு இதனை அறியலாம். அரசியல் நிலை, சமுதாய நிலை முதலியவற்றின் வரலாற்றை அறியவும் புறப் பாடல்கள் பயன்படுகின்றன. மக்களுடைய துன்பங் களைத் துடைத்து அவர்களைப் பேணல் மன்னனின் கடமை. குற்றத்திற்கேற்பத் தண்டித்து நீதி கூறு வதும் அவனது பொறுப்பு. "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்று புலவர்கள் மன்னரைச் சார்ந்து கூறியதற்கேற்ப மன்னர்கள் தம் கடமை யாற்றினர். கொடை, மன்னனின் தனிப்பண்பாகக் கருதப்பட்டது. கைம்மாறு கருதாது பாணர்க்கும் புலவர்க்கும் மன்னன் பரிசு அளித்தான். மன்னர்கள் புலவர்க்குப் பரிசில் கொடுத்த தோடல்லாமல் நட்புப் பூண்டு வாழ்ந்த வரலாற்றைப் புறப்பாடல்கள் பல விளக்குகின்றன.

புவியாளும் வேந்தரும் புலமைச் செல்வம் பெற்றுத் திகழ்ந்த சிறப்பியல்பையும் நாம் காண்கிறோம். தலை யாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன், ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், சோழன் நலங்கிள்ளி, சேரமான் கணைக்கா லிரும்பொறை முதலிய மன்னர்கள் கவித்திறம் மிக்க வர்களாய் விளங்கினர்.

வீரம் புறவாழ்வில் சிறந்து ஓங்கியது. மன்னர்கள் போர்க்களம் சென்று இறுதிவரை போரிட்டு வெற்றி பெறுவர் அல்லது இறப்பர். மன்னர்தம் இவ்வீரம் மக்களிடையே பரவியிருந்தது. தாய் தன் மகன் போரில் வெற்றி பெற்றுச் சிறக்க வேண்டும் என விரும்

பினன். 'ஈன்று புறந்தருதல்' எனத் தொடங்கும் பொன் முடியார் பாட்டு இதற்குச் சான்று பகரும்.

மக்கள் வாழ்க்கையை இந்நூல் திறம்படச் சித்திரிக்கிறது. பழந் தமிழரின் வாழ்க்கை வரலாற்றினை இந் நூற் பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றன. குறவர் வாழ்ந்த புல்வேய் குரம்பைகள் முதல் பெரும் மன்னன் வாழ்ந்த அரண்மனை வரையில் எல்லா வகுப்பினருடைய மனைகளைப் பற்றிய குறிப்புக்களையும் நாம் அறிகிறோம். தமிழரின் தனிப்பண்பு விருந்தோம்பல். தம்மை நாடி வருவோர்க்கு உணவு கொடுத்து இன்புறுத்தி இன் புற்று வாழ்ந்தனர் பழமையோர். அவர்கள் அணிந் திருந்த அணிகலன்களைப் பற்றியும், ஆடைகளைப் பற்றியும் நாம் அறிகிறோம்.

பண்டைத் தமிழரின் இனப்பாகுபாடு அவரவர் செய்த தொழில்களின் தன்மையை யொட்டி அமைந் திருந்தது. உழவர், தச்சர், வணிகர், வேட்டுவர், ஆயர் முதலிய இனப் பெயர்கள் காணப்படுகின்றன. வேத வேள்வி செய்தல் அந்தணர் கடமை என அறிகிறோம்.

தமிழ் மக்கள் வழிபட்ட தெய்வங்களையும் புறப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. சிவன், திருமால், முருகன் முதலிய தெய்வங்களை மிகுதியாக வழிபட்ட னர் தமிழர்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழரின் சமூக வர லாறு புறநானூற்றில் பொலிவுடன் விளங்குவதைக் கற்பார் உணர்ந்து மகிழ்வர்.

# பதிற்றுப் பத்தும் வரலாறும்

( Arpil '63 )

பதிற்றுப்பத்து, எட்டுத்தொகையில் அமைந்த ஒரு நூலாகும். பத்துப்பத்து என்பது பதிற்றுப்பத்தின் பொருள். பத்துச் சேர மன்னர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப் பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது. இந் நூலைத் தொகுத்தோரும், தொகுப்பித்தோரும், இன்னார் இன்னாரென்பது விளங்கவில்லை. இந்நூல் சேர மன்னர்களை மட்டுமே பாராட்டுகிறது. 'அவ்வரசர்களிற் சிலரைப் பற்றிய செட்யுட்களும், செய்திகளும் வேறு தொகை நூல்களில் வரினும், குறிப்பிட்ட ஓர் அரசரைக் குறித்துத் தொடர்ச்சியாகப் பத்துச் செய்யுட்கள் இதிலேதான் காணப்படுகின்றன.

இந்நூலில் ஒவ்வொரு பத்துப் பாட்டின் இறுதியிலும் பதிகம் என்னும் தலைப்பில் சில அடிகள் செய்யுளாகவும் சில பகுதிகள் உரைநடையாகவும் காணப்படுகின்றன. இவற்றை இயற்றியவரைப்பற்றி ஒன்றும் அறியமுடியவில்லை.

இந்நூல், பழங்காலத் தமிழக மக்களைப் பற்றியும் சேர மன்னர்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணை புரிகிறது. இதில் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. எஞ்சிய எட்டுப் பத்துக்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இரண்டாம் பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர் கண்ணனார் பாடி, உம்பர் காட்டு ஐந்நூறு ஊர்களையும் முப்பத்தெட்டு ஆண்டுகள் தென்னாட்டு வருவாயில்

ஒரு பகுதியையும் பரிசிலாகப் பெற்ருர். மூன்ரும்பத்தில் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனர் பாடியுள்ளார். நான்காம் பத்தில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் காப்பியாற்றுக் காப்பியனர் பாடி, நாற்பது நூருயிரம் பொன்னும் ஆட்சியில் ஒரு பாகமும் பெற்ருர். ஐந்தாம் பத்தில் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பரணர்பாடி, உம்பர்காட்டு வருவாயையும் மன்னன் மகனையும் பரிசிலாகப்பெற்ருர். ஆரும் பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடி, ஒன்பது துலாம் பொன்னும் நூருயிரம் பொற்காசும் பரிசிலாகப் பெற்ருர். ஏழாம் பத்தில் செல்வக் கடுங்கோ வாழியா தனைக் கபிலர் பாடி, நூருயிரம் பொற் காசையும், மலை மீது நின்று கண்ணிற் கண்ட நாட்டையும் பரிசிலாகப் பெற்ருர். எட்டாம் பத்தில் பெருஞ்சேரலிரும் பொறையைப் அரிசில் கிழார் பாடி, ஒன்பது நூருயிரம் பொற்காசையும் அரசுரிமையையும் பரிசிலாகப் பெற்ருர். ஆனல் அவர் அரசுரிமையைத் திரும்பவும் மன்னர்க்கே அளித்து விட்டார். ஒன்பதாம் பத்தில் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங் குன்றூர் கிழார் பாடி, முப்பத்திரண்டாயிரம் பொற் காசுகளையும் வேறு பல பரிசில்களையும் பெற்ருர்.

சேர மன்னர்களுடைய நாட்டுவளம், கொடைச் செயல், மக்கள் வாழ்க்கை, படைத்திறன், மனைமாட்சி முதலியவற்றை இந்நூலால் அறியலாம்.

**நாட்டு வளம்:-** குறிஞ்சி, முல்லை, மருதம், நெய் தல் ஆகிய நான்கு நிலத்துப் பொருள்களும் மிகுதியாக விளைந்து சேரநாடு வளம்மிக்கு விளங்கிய செய்தியைப் பின்வரும் வரிகள் உணர்த்தும்.

''கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவு அறுபறியா முழவுமிழ் மூதூர்''

நான்கு நிலங்களில் விளைந்த பொருளேயன்றி வெளிநாட்டுப் பொருள்களும் சேர நாட்டிற்கு வந்திருந்த செய்தியை ''கடலவும் யாற்றவும் பிறவும்'' என்பதனால் அறியலாம்.

கொடை:- சேர மன்னர்கள் கொடையிற் சிறந்தவர்கள். செல்வக் கடுங்கோ ஆழியாதன் பிறருக்குப் பொருள் கொடுப்பதற்காக ஒரு நாளும் வருந்துதல் இல்லாது நிரம்பக் கொடுப்பான்.

''ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்
ஈத்தொறு மா வள்ளியன்''

இதனால் அம்மன்னன் பொருள் மிகுதியாகக் கொடுத்ததனால் பொருள் செலவாயிற்றே என வருந்தாதவன் என்பதனை அறியலாம். தன்னால் கொடுக்கப்பட வேண்டிய நிலையில் மக்கள் இருக்கின்றார்களே என நினைந்து அவன் வருந்தும் இயல்பினன் என்பதனை ''ஈத்தொறும் மகிழான்'' என்ற தொடர் உணர்த்துகிறது.

பரிசிலர் வாராக் காலத்தும் அவர்கள் இருக்கும் இடம் நாடித் தேடிப் பரிசில் வழங்கும் பான்மையன் இவன் என்பதனைப் பின் வரும் அடிகள் உணர்த்தும்.

''வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்
தேரில் தந்த வர்க் கார்பதம் நல்கும்
நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்''

கொடுக்கும் மாண்பு மன்னர்க்கு மட்டுமே அமைந்த ஒன்று என்பதன்று; மக்களிடையேயும் அது சிறந்திருந்தது. பாணன் ஒருவன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனிடம் சென்று பரிசு பெற்றான். பொதுவாகப் பரிசு பெற்ற பாணன் அது பெறக் கருதும் மற்றொரு பாணனைப் புரவலனிடம் ஆற்றுப் படுத்துதல் மரபு. ஆனால் இந்தப் பாணனே தான் பெற்ற பெருவளத்தைத்தானே பரிசிலாகக் கொடுக்க முன் வருகிறான்.

பசியால் வாடுவார்க்கு முதலில் கள்ளைக் கொடுத்தான். பிறகு சமையற் செய்வதற்குரிய உதவிகளைச் செய்தான். தான் பெற்ற பரிசிலைக் கொடுத்து விட்டால் என்ன செய்வது என்று வருந்த வேண்டாம்; மாரி பொய்ப்பினும் நம் வேந்தன் கொடுப்பதில் தவற மாட்டான். ஆகவே எப்போது வேண்டினும் அவனிடம் சென்று பரிசிலைப் பெறலாம். ஆகவே அவனுடைய கொடையை அறிந்த நாம் பசியால் நலிவோர்க்கு நல்குவோம் எனக் கூறுகிறான்.

**"உண்மின் கள்ளே அடுமின் சோறே"**

**"கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே"**

**"மாரி பொய்க்குவது ஆயினும்**
**சேரலாதன் பொய்யலன் நசையே"**

இதனால் மன்னன் கொடைச் செயலும், பாணனின் கொடுக்கும் தன்மையையும் ஒருசேர அறியலாம்.

**வீரம்:-** சேர மன்னர் கடற்போரில் சிறந்தவர்கள் என்ற செய்தி பல இடங்களில் கூறப்படுகிறது.

**"இரு முந்நீர்த் துருத்தியுள்**
**முரணியோர்த் தலைச்சென்று**
**கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின்சேரன்"**

என ஒரு சேர மன்னன் பாராட்டப்படுகிருன். படை வீரர்கள் வீரம் மிக்கவர்களாய்ப் பகைவரைத் தொலைத் தாலன்றி உண்ணுதவராய் இருந்தார்கள் என்பதனைப் பின்வரும் பகுதியால் உணரலாம்.

"..................எயில் எறிந்தல்லது
உண்ணுது அடுக்கிய பொழுதுபல கழிய
நெஞ்சுபுகல் ஊக்கத்தார்"

மனைமாட்சி:- சேர மன்னருடைய மனைவியரது மாண்பு பல இடங்களிற் உணர்த்தப்பட்டுள்ளது.

"ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்னகை
அமிர்து பொதி துவர்வாய் அமர்த்தநோக்கிற்
சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்"

என்னும் இப்பகுதியால் இமயவரம்பன் நெடுஞ்சேரலா தனுடைய மனைவி சீற்றமே கொள்ளாதவள் என்பதும், ஊடற் காலத்திலும் இனியவற்றைக் கூறும் நீர்மையள் என்பதனையும் அறியலாம்.

மக்கள் வாழ்க்கை:- சேர நாட்டு மக்கள் செம்மை சான்ற வாழ்வு நடாத்தினர். அன்பு நெறியை மேற் கொண்டு கவலையில்லாமல் பெருவாழ்வு வாழ்ந்தனர். அவர்கள் பல விழாக்களைக் கொண்டாடினர். மருத நிலத்து மாண்புறு மகளிர் இரவெல்லாம் செல்வக் களிப் பிஞல் குரவை யாடினர் என்ற செய்தியை,

"சொரிசுரை கவரு நெய்வழிபு உராலின்
பாண்டில் விளக்குப் பருஉச் சுடரழல
நன்னுதல் விறலியர் ஆடும்"

என்ற பாடற் பகுதியால் அறிகிருேம்.

223

# பௌத்தர்களின் தமிழ்த்தொண்டு

(April '62, '65)

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எல்லாச் சமயத் தவரைப் போல் பௌத்தர்களும் தொண்டு புரிந்துள் ளனர். தங்கள்மதக் கருத்துக்களை மக்களிடையே பரப் பத் தமிழில் பல நூல்களை இயற்றினர். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை மணிமேகலை, குண்டலகேசி, விம்ப சாரக்கதை, சித்தாந்தத் தொகை, திருப்பதிகம், வீரசோழியம் என்பன.

**விம்பசாரக்கதை:** மகதநாட்டு மன்னர் விம்ப சாரரைப் பற்றிக் கூறும் நூல் இது. புத்தருடைய நல்லுரையால் பௌத்தனானவன். இவனுடைய மகன் அஜாத சத்துரு என்பவன் தந்தைக்கு மாறுபட்ட குண வியல்புடையவன். பகைவர் வலையில் வீழ அஜாத சத்துரு, தந்தையைச் சிறையிலடைத்து, பட்டினி போட்டுக் கொன்றான். இறுதியில் கொடுஞ் செயலுக் குக் கழிவிரக்கம் கொண்டு கண்ணீர் வடித்துப் பௌத்த சமயத்தைச் சார்ந்து அமைதியுறுகிறான். இதுவே இந்நூற் கதையாகும். இக்கதையைச் சில ஆசிரியர் கள் மாறுபடவும் கூறுவர். நூல் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.

**சிந்தாந்தக்தொகை:** என்னும் நூல் பௌத்த சமயக் கொள்கைகளை விளக்கிக் கூறுகிறது. இந்நூலுள் சில பாடல்களே கிடைத்துள்ளன.

---

* இதனுடன் 'இரட்டைக் காப்பியங்கள்' என்னும் தலைப்பில் வரும் 'மணிமேகலை'யையும் 'காப்பியங்கள்' என்னும் தலைப்பில் வரும் 'குண்டலகேசி'யையும் சேர்த்துப் படிக்கவும்.

**திருப்பதிகம்:** என்னும் நூல் புத்தர் பிரானை வாழ்த்தும் முறையில் அமைந்த தோத்திர நூலாகும். இதனைப் பற்றி வேறு ஒன்றும் தெரியவில்லை.

**வீரசோழியம்:** இது புத்த மித்திரரால் செய்யப்பட்ட இலக்கண நூல். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் எனும் ஐந்து பிரிவுகளையுடையது. புத்தமித்திரனாரின் மாணவரான பெருந்தேவனார் இந்நூலுக்கு உரை வகுத்துள்ளார்.

இவ்வாறு பௌத்தர்கள், பைந்தமிழ்ப் பாமாலை சூடித் தமிழ் அன்னையைப் போற்றி வளர்த்தனர்.

# பரணி

(April '60)

தமிழ் மொழியில் தோன்றிய தொண்ணூற்ருறு வகைச் சிறு பிரபந்தங்களுள் பரணியும் ஒன்று. இலக்கண விளக்கப்பாட்டியல், 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி' என இதன் இலக்கணத்தைக் கூறும். மேலும், இது பரண்மீது இருந்து பாடப்படுவதால் பரணி என்ருயிற்று எனவும், காளிக்குப் பரணி நாளில் வழிபாடு செய்வது பற்றிப் பரணி என்று பெயர் பெற்றது எனவும் மொழிவர். இவ்விலக்கியம் கடவுள் வாழ்த்து கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்ப் பாடியது, இந்திரசால இராச பாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது கூழ் அடுதல் ஆகிய உறுப்புக்களைக் கொண்டு இலங்குகிறது.

வெற்றி கொண்ட வேந்தன் பெயரால் அழைக்கப் பெருது தோல்வியுற்ற மன்னன் பெயரைச் சார்ந்தே வருவது பரணி நூலின் தனிச் சிறப்பியல்பாம். கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி, இரணியவதைப் பரணி, சூரன்வதைப் பரணி, கஞ்சவதைப் பரணி, பாசவதைப் பரணி, மோகவதைப் பரணி எனப் பல பரணி நூல்கள் உள. இவ்வனைத்துள்ளும் சிறந்தது கலிங்கத்துப் பரணியேயாகும்.

**கலிங்கத்துப்பரணி:** செயங் கொண்டாரால் இயற்றப் பெற்றது இந்நூல். இவர் பரணி பாடுதலில் வல்லவர் என்பதனை, 'பரணிக்கோர் செயங் கொண்டார்' என்பதனுல் அறியலாம். கலிங்க வேந்தன் அனந்தவன்

மனை முதற் குலோத்துங்கனின் தானைத்தலைவன் கருணு கரத் தொண்டைமான் வெற்றி கொண்ட செய்தியை இந்நூல் அழகுறக் கூறுகிறது. சொல் நயமும் பொருள் நயமும் பாடல்தோறும் அமைந்துள்ளன. இப்பரணியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சந்த வேறு பாடுகள் அமைந்துள்ளன.

நூலின் அமைப்பைச் சிறிது காண்போம்:

கடவுள் வாழ்த்து எனும் முதற் பகுதியில் பரணித் தலைவன் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகிருர் ஆசிரியர். அடுத்த பகுதி கடைத்திறப்பு. போர்க்களம் சென்ற கணவர் குறித்த நாளில் வாராமையால் கதவை அடைத்து வருந்தும் மகளிரை மற்றப் பெண்கள், தார் வேந்தனும் தானைத் தலைவனும் பெற்ற கலிங்க வெற்றியைப் பாடுதற்கு நாட் காலையில் துயிலெழுப்பு வது போன்று அமைந்துள்ளது. பின்னர் வரும் காடு பாடியது, கோயில் பாடியது என்னும் பகுதிகளில்வெற் றிக் குரிய கொற்றவை உறையும் காட்டையும், கோயி லையும் பற்றிய செய்திகளை அறியலாம். தேவி பாடியது, பேய் பாடியது, இந்திரசாலம் என்னும் பகுதிகள் வியப்புச் சுவையும் நகைச் சுவையும் பொருந்திக் குலோத்துங்கனது வெற்றி மேம்பாட்டை விளக்குவன. அம்மன்னனது பரம்பரையைப் பற்றி இராசபாரம் பரியம் விளக்குகிறது. அவதாரம் எனும் பகுதி குலோத் துங்கனின் பிறப்பு,வளர்ப்பு, அவன் முடிசூடியது ஆகிய செய்திகளைக் கூறுகிறது. காளிக்குக் கூளி கூறியது என்னும் பகுதியில், கருணுகரன் கலிங்கத்தின் மீது படையெடுத்ததும் அங்நாட்டு வேந்தன் அவனை எதிர்த் துப் போரிட முனைந்ததும் ஆகிய செய்திகளைக் கலிங்கப் பேய் காளிக்குக் கூறுகிறது. போர் பாடியது என்னும்

பகுதியில் அதே கலிங்கப் பேய் காளிக்குப் போர்க்கள நிகழ்ச்சிகளை விரிவாக விளக்குகிறது. பின் அக் களத்தைக் காணுமாறு காளியை அழைக்க, தேவியும் அவ்வாறே கண்டு, பேய்களுக்குக் காட்டுவாளாய்க் கூறிய காட்சிகளைக் களம் பாடியது என்னும் பகுதி காட்டுகிறது. பிறகு, காளி தேவியின் கட்டளைப்படி பேய்கள் பல்துலக்கி, நீராடி அணி அணிந்து கூழட்டு உண்ணும் செய்திகள் நகைச்சுவைபட அமைந் துள்ளன. உண்டு களித்த பேய்கள் குலோத்துங்கனது புகழைப் பாடுகின்றன. தங்களுக்குப் பரணிக் கூழ் அளித்த அபயனைப் பேய்கள் வாழ்த்துவதோடு பரணி நூல் முடிகிறது.

> "ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
> ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ!"

என்றார் பாரதியார். இவ்வோசை இன்பத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது இக்கலிங்கத்துப் பரணி. போர்க்களத்தைச் சித்திரிக்கும் புலவர், அங்கு எழும் ஆரவார ஒலியைக் காது செவிடுபட வருணிக் கிறார்.

> "எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
> இகலொலி கடலொலி யிகக்கவே
> விடுவிடு விடு பரிகரிக்குழாம்
> விடும் விடு மெனுமொலி மிகைக்கவே"

செருக்களத்தில் வீரப்போர் புரிந்து வீழ்ந்து கிடக்கும் வீரரைப் பருந்துகளும் கழுகுகளும் உண்ணுகின்றன. அப்போதும் அவ்வீரரின் முகங்கள் மலர்ந்தே இருக் கின்றன. இக்காட்சியை,

''விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் பார்மின்''

என உவமை நலத்தால் உணர்த்துகிருர் ஆசிரியர்.

போர்க்களத்தே யானைகள் வீழ்ந்துபட்டன; முன்பு மதநீரை உண்டு களித்திருந்த வண்டுகள் யானைகள் இறந்ததும் அப்பால் விலகிச் செல்கின்றன; அவ்வாறு அவை விலகிச் செல்லும் காட்சி, செல்வம் உள்ளவரை ஒருவனிடம் இருந்து பின் அவனைவிட்டுப் பிரிந்து செல்லும் பொருட் பெண்டிரது புன்மைச் செயலைப் போல் அமைந்திருக்கிறது என ஆசிரியர் பொருந்தப் பாடியுள்ள அழகு கண்டு இன்புறத் தக்கது.

''மாமழைபோல் பொழிகின்ற தானவாரி
மறுத்துவிழுங் கடகளிற்றை வெறுத்து வானோர்
பூமழைமேல் பாய்ந்தெழுந்து நிரந்த வண்டு
பொருட்பெண்டிர் போன்றமையும் காண்மின்! காண்மின்''

மீண்டும் மீண்டும் வந்த சொல்லே வந்து பொருளும் ஓசையும் சிறப்புற அமைந்து கற்பார் உள்ளத்தைப் பிணிக்கும் பகுதிகளுக்கு இந்நூலில் பஞ்சமில்லை என்பதனைப் பின்வரும் பகுதிகளால் அறியலாம்.

''பரிசில் சுமந்தன கவிகள்
பகடு சுமந்தன திறைகள்
அரசு சுமந்தன இறைகள்
அவனி சுமந்தன புயமே''
பண்ணுக வயக்களிறு! பண்ணுக
வயப்புரவி! பண்ணுக கணிப்பில் பல்தேர்

நண்ணுக படைச் செருநர்! நண்ணுக
செருக்களம் நமக்கு இகல் கிடைத்தது எனவே

கடைத் திறப்புப் பகுதியில் வரும் அகச்சுவை பொருந்திய ஒரு தாழிசை மகளிரின் நடையழகை வருணிக்கிறது.

''சுரிகுழல் அசைவுற அசைவுறத்
துயில் எழும் மயிலென மயிலெனப்
பரிபுரம் ஒலிஎழ ஒலிஎழப்
பனிமொழியவர்; கடைதிறமினோ''

இவ்வாறு மகளிரின் மென்மையையும் அழகையும் வருணித்த ஆசிரியர், அம்மகளிர் தம் கணவரிடத்துக் கொண்ட மாறாத காதலையும், கணவர் இறந்தபின் தாம் வாழ நினையாது உடன் உயிர் துறக்கும் மன வலிமையையும் விளக்கியுள்ளார். எடுத்துக் காட்டாக ஒரு காட்சி: ஆருயிர்க் கணவன் களத்தில் பட்டான். அவனுடைய உடல் நிலமகள் மீது சாயாதவாறு அணைத்து, விண்ணாட்டு மகளிர் அவனது உயிரைத் தழுவுவதற்குள் தனது உயிரையும் விடுகிறாள் ஒரு பெண்.

''தரைமகள் தன் கொழுநன்தன் உடலம் தன்னைத்
தாங்காமல் தன்உடலால் தாங்கி விண்ணாட்டு
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின்! காண்மின்!!

இவ்வாறு அகமும் புறமும் அமைந்து கற்பார் நெஞ்சைப் பிணிக்கும் கவினுறு காட்சிகள் பலவற்றைக் கொண்டு விளங்குகிறது கலிங்கத்துப்பரணி.

# பள்ளு

(April '60)

தமிழிலக்கிய பூங்காவில் பூத்துக் குலுங்கும் வண்ணமலர்கள் பள்ளு நூல்கள். "நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ணமுடியாது" என்பது பழமொழி. இந்தப் பழமொழியில் வரும் பள்ளு வகை என்பதற்குப் பள்ளர்களின் சாதிவகை எனப் பலர் பொருள் கொள்ளினும் 'பள்ளு' என்னும் நூல் களின் வகை எனப் பொருள் கொள்ளலே சிறப்பு. பள்ளு இலக்கியங்கள்தான் சிற்றிலக்கியங்களில் மிகுதி.

முக்கூடற்பள்ளு, குருகூர்ப்பள்ளு, திருமலைப் பள்ளு, சீர்காழிப் பள்ளு, திருவிடைமருதூர்ப் பள்ளு, தஞ்சைப் பள்ளு, புதுவைப் பள்ளு, சண்பகராமன் பள்ளு, வையாபுரிப் பள்ளு, திருச்செந்தில் பள்ளு, மாங்தைப் பள்ளு, கொடுமாளூர்ப் பள்ளு எனப் பல பள்ளு நூல்கள் உள.

பள்ளு நூல்கள் பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. பள்ளர்களின் வாழ்க்கை நிகழ்ச்சி களைச் சித்திரிப்பதோடு, வேறு பல செய்திகளையும் இந்நூல்கள் புலப்படுத்துகின்றன. நாட்டுவளம், மன்னர் பெருமை, மக்கள் வாழ்வு, மழைக்குறி, ஆற்று நீர்ப் பெருக்கு ஆகிய குறிப்புக்களையும் பள்ளு நூல்கள் உணர்த்துகின்றன.

முக்கூடற்பள்ளு, பள்ளுப் பாட்டில் தலை சிறந்த தாகும். இவ்வரிய நூலைப் படைத்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை. தாமிரவருணி, சிற்றாறு, கோதண்ட ராம நதி என்ற மூன்று ஆறுகளும் கூடும் இடத்தை

முக்கூடல் எனக் கூறுவர். பாட்டுடைத் தலைவன், அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் அழகர் பெயரையே கொண்டவன். அவனுக்கு மனைவியர் இருவர். மூத்தவள் வைணவ சமயத்தைச் சார்ந்தவள். இளையவள் சைவ சமயத்தைச் சார்ந்தவள். இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டந்தானே! எப்போதும் இருமனைவியர்க்கும் பூசல். அதன் காரணமாக வரும் ஏசல்! மூத்த பள்ளி பண்ணைக்காரரிடம் முறையிட்டுப் பள்ளனைச் சிறையில் இடுவதும், பிறகு அவனுக்காக ஏங்கி விடுதலை செய்வதும் பள்ளனைக் காலை முட்டும்போது இருமனைவியரும் அவனுக்காக வருந்தி இரக்கப்படுவதும், பள்ளன் உழவுத் தொழிலில் முனைந்து செயல்படுவதும், உழவுத் தொழிலின்போது இருமனைவியரும் மீண்டும் பூசல்கொண்டு ஏசுவதும், ஏச்சுரையில் கடவுளரையும் வம்புக்கு இழுப்பதும், இறுதியாக அனைவரும் ஒன்றுபடுவதும் ஆகிய நிகழ்ச்சிகளையெல்லாம் முக்கூடற் பள்ளு சுவைபடக் கூறுகிறது.

கள்ளங் கபடமற்ற பள்ளியர்கள் குடித்து மயங்கி ஆடிப்பாடி மகிழ்கின்ற காட்சியைப் புலவர் நயம்படச் சித்திரிக்கிறார்.

"வடிக்கும் மதுவைக் குடிக்கும் ஆசை
மயக்கமும் பெருந் தியக்கமும்
வரம்பிற் பாய்ந்து பரம்பிற் சாய்ந்த
வாட்டமும் முகக் கோட்டமும்
துடிக்கும் இதழைக் கடிக்கும் எயிறும்
சோர்ந்து விரிந்த கூந்தலும்
தொடையும் நெகிழ்ந்த உடையும் கிடந்த
கிடையும் பாரும் பள்ளீரே."

கள்ளைக் குடித்துக் கருத்தை இழந்து தன்னிலை மறந்து தள்ளாடும் பள்ளியர் வாழ்வின் நிலை இது.

பாத்திரங்களின் தோற்றத்தைக் கொண்டே பண்பு நலன்களை உணருமாறு வருணிக்கின்றார் ஆசிரியர் இதோ வருகிருள் மூத்த பள்ளி. எப்படி?

"நெற்றியில் இடும் மஞ்சணைப் பொட்டும்
மற்றொரு திருநாமப் பொட்டும்
நெகிழ்ந்த கருங்கொண்டையும் ரெண்டாய்
வகிர்ந்த வகுப்பும்....
சிற்றிடையும், செம்பொனிடைக் கிடை
பெற்றிடும் பட்டாங்கு மிலங்கத்
திருமுக் கூடல் வாய்த்த பள்ளி
தோன்றினாள்."

இளைய பள்ளி அழகு மிக்கவள். சிவந்த மேனியாள். தன் கால்களில் மஞ்சளைப் பூசியிருக்கிருள். கெண்டை மீனைப் போன்ற கண்கள் இரண்டும் காதிலணிந்த குழைகளைச் சென்று தாவ, இதோ காவிய மாளிகையில் அடி எடுத்து வைக்கின்றாள் இளைய பள்ளி:

"செஞ்சரணப் பட்டமிடுங் கொச்சியின்
மஞ்சளும் பூம் பச்சையும் மணக்கப்
பஞ்சலை மீன் கெண்டைகள் எனவே
அஞ்சனந்தோய் கண்கள் இரண்டும்
பக்கக் கொண்டையினும் குழைவினும்
தைக்கக் குதிக்க......தோன்றினாள்."

இயல்புக் கேற்ற தோற்றத்தோடு இவ்வாறே பள்ளனும் பண்ணைக்காரனும் காவிய மேடையில் நடை பயில்கின்றார்கள்.

மூத்த பள்ளி, இளைய பள்ளி ஆகிய இருவருடைய ஏச்சுரையில் ஆசிரியருடைய நகைச்சுவையைக் கண்டு மகிழலாம்;

மூத்த பள்ளி:

**சுற்றிக் கட்ட நாலு முழத்துண்டுமில்லாமல் புலித்**
**தோலை உடுத்தா னுங்கள் சோதி அல்லோடி?**

இளைய பள்ளி:

**கற்றைச் சடைகட்டி மரிவுரியுஞ் சேலைதான் பண்டு**
**கட்டிக் கொண்டான் உங்கள் சங்குக் கையனல் லோடி?**

மூத்த பள்ளி:

**நாட்டுக்குள் இரந்தும் பசிக்கு ஆற்ற மாட்டாமல் வாரி**
**நஞ்சை உண்டானுங்கள் நாதனல் லோடி?**

இளைய பள்ளி:

**மாட்டுப் பிறகே திரிந்தும் சோற்றுக் கில்லாமல் வெறும்**
**மண்ணையுண்டான் உங்கள் முகில் வண்ணனல்லோடி?**

முதலில் பிணக்கோடு தொடங்கிய இந்த ஏச்சுப் பேச்சு இறுதியில் இணக்கமாக இன்பமாக முடிகிறது. இருவரும் சினம் தணிந்து சாந்தம் உற்று முக்கூடலழ கரை வாழ்த்துகிருர்கள்.

# பிள்ளைத் தமிழ்

(Sep '60)

தமிழில் வழங்கும் பிரபந்தங்களுள் பிள்ளைத் தமிழ் என்பது ஒருவகை. இதனைப் பிள்ளைப் பாட்டு எனவும் மொழிவர். ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் எனப் பிள்ளைத்தமிழ் இருவகைப்படும். வழிபடும் தெய்வங்களையோ, ஆதரித்த வள்ளல் களையோ, குழந்தையாகக் கருதி அக்குழந்தையின் மூன்றும் மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரை யில் அமைந்த மாதங்களைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துப் பருவத்துக்குப் பத்துப் பாடல்களாகப் பாடு வது இதன் இலக்கணமாம்.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில்சிதைத்தல், சிறுபறை முழக்கல், சிறு தேர் உருட்டல் ஆகியவை ஆண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களாகும். இவற்றுள் முதலில் அமைந்த ஏழு பருவங்களும் அங்ஙனமே பொருந்த, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பவற்றிற்குப் பதிலாக முறையே, அம்மானை, நீராடல், ஊசல் என்பனவற்றை அமைத்துப் பாடுவது பெண்பாற் பிள்ளைத்தமிழ் ஆகும்.

**காப்புப் பருவம்:** பாட்டுடைத் தலைவனை (அ) தலைவியைக் காப்பாற்ற இறைவனை வேண்டுவது.

**செங்கீரைப் பருவம்:** மொழி பேசுமாறு குழந் தையை வேண்டும் பருவமாகும். குழந்தை தன் கை களைத் தரையில் ஊன்றித் தலையைத் தூக்கி, காலை

முட்டியிட்டு அசைந்தாடும் பருவம் இது எனவும் கூறுவர்.

**தாலப் பருவம்:** குழந்தையைத் தாலாட்டித் தூங்க வைக்கும் பருவமாகும்.

**சப்பாணிப் பருவம்:** குழந்தையை இரு கைகளையும் தட்டி, ஓசை எழுப்புமாறு கூறும் பருவம்.

**முத்தப் பருவம்:** குழந்தையை முத்தம் தரவேண்டுகின்ற பருவம்.

**வருகை (அ) வாரனைப்பருவம்:** குழந்தையை வருமாறு வேண்டும் பருவம்.

**அம்புலிப் பருவம்:** திங்களைக் குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கும் பருவம்.

**சிற்றில் சிதைத்தல்:** சிறுபெண்கள் கட்டும் மணல் வீட்டைக் குழந்தைக் காலால் உதைத்துக் கலைக்கும் பருவம்.

**சிறுபறை முழக்கல்:** குழந்தையின் கையில் சிறு பறையைக் கொடுத்து அதனை முழக்குமாறு கூறும் பருவம்.

**சிறுதேர் உருட்டல்:** குழந்தையை மரத்தால் செய்த சிறிய தேரை உருட்டுமாறு வேண்டுதல்.

**நீராடல்:** பெண் குழந்தையைத் தண்ணீரில் குளிக்கும்படி வேண்டும் பருவம்.

**அம்மானை:** பெண் குழந்தையைக் கழங்கினை ஆடும்படி வேண்டும் பருவம்.

ஊசல்: ஊஞ்சலில் குழந்தையை ஆடும்படி வேண்டும் பருவம்.

பிள்ளைத் தமிழ் நூல்களுள் குமரகுருபர சுவாமி களின் மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழே மிகச் சிறந்த நூலாகும். அதில் காணும் அழகிய பகுதிகளில் சில காண்பாம்.

வருகைப் பருவத்தில் வரும் 'தொடுக்குங் கடவுள்' என்று தொடங்கும் பாடல் அரங்கேற்றம் பெற்ற போது, மீனாட்சி அம்மையார் ஒரு சிறுமி வடிவு கொண்டு வந்து கேட்டு, மகிழ்ந்ததாகக் கூறுவர். அப் பாட்டில் அமைந்த சொற் சுவையும், பொருட் சுவையும் கற்பார் நெஞ்சைக் கனியச் செய்யும் பான்மையது. "பழம் பாடற் றொடையின் பயனே! தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே! தொழும்பர் உளக் கோயிற் கேற்றும் விளக்கே! இளமென்பிடியே! உயிரோவியமே! வஞ்சிக் கொடியே! மலயத் துவசன் பெற்ற பெருவாழ்வே!" எனவரும் விளிகள் அம்மையாரின் திருவருட் செயலை விளக்குவனவாம்.

நீராடற் பருவத்தில் வரும் இனிய காட்சியைக் காண்போம். வையையில் நீராடச் சென்றாள் அம்மை. உடன் சென்ற தோழி "அம்மையே! நின்காதலர் முன்னாள் பிட்டுக்கு மண் சுமந்த பெருமை பெற்ற இடம் இதுதான்" என்று காட்டினாள். அது கேட்ட போது அம்மை வருந்திக் கண்ணீர் சிந்துகிறாள். அதனைக் கண்ட தோழி, "அம்மையே! இவ்வாறு நீ கண்ணீர் வடித்தால் வையையில் மீண்டும் வெள்ளம் பெருகிவிடும்! அதனால் நின் காதலர் மீண்டும் மண் சுமக்க வரவேண்டியிருக்குமே! அவருக்கு வேலை

கொடுப்பது அழகா? ஆகவே வழியும் கண்ணீரை விலக்கி நீராட வா'' என அழைக்கின்ருள்.

இவ்வாறு விளையாட்டுச் சிறுமியரிடமும் தெய்வ உணர்வு தோன்றுமாறு கற்பனை நயம்பட உரைக்கும் ஆசிரியர் திறம் போற்றற்குரியது. இனி, தாலப் பருவத்தில் வரும் இனிய தமிழ்ப்பாட்டொன்றைப் பார்ப்போம்.

''தென்னன் தமிழினுடன்பிறந்த சிறுகால்
அரும்பத் தீயரும்பும்
தேமா நிழற்கண் துஞ்சுமிளஞ் செங்கட்
கயவாய்ப் புனிற்றெருமை
இன்னம் பசும்புற் கறிக்கல்லா இளங்கன்
றுள்ளி மடித்தலநின்
றிழிபாலருவி உவட்டெறிய எறியுந்
திரைந்தீம் புனற்பொய்கைப்
பொன்னங் கமலப் பசுந்தோட்டுப் பொற்ரு
தாடிக் கற்றை நிலாப்
பொழியும் தரங்கம் பொறை உயிர்த்த பெரன்போல்
தொடுதோல் அடிப்பொலன்சூட்
டன்னம் பொலியுந் தமிழ்மதுரைக் கரசே
தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட அங்கயற்கண் அமுதே
தாலோ தாலேலோ''

சிறிய கன்றை நினைந்து எருமைகள் சொரிந்த பாலால் பொய்கையானது பாற்கடல்போலத் தோன்ற, அப்பாற் கடலில் உள்ள தாமரை மலரில் இருக்கும் அன்னம் திருமகளைப் போலத் தோன்றுகிறது என்பதே இப்பாட்டின் சுருக்கமான பொருளாகும். இதில் அமைந்துள்ள கவிதை இன்பம் நினைந்து உணரத்தக்கதாகும்.

# குறவஞ்சி

(Sep '60)

'குறவஞ்சி' எனும் சொல் குறப்பெண்ணைக் குறிக்கும். குறத்தி குறிசொல்லும் பகுதியே 'குறவஞ்சி' நூலின் சுவை மலிந்த பகுதியாகும். எனவே அச் சிறப்பு நோக்கியே நூலும் குறவஞ்சி எனப் பெயர் பெற்றது. பாடப்படும் தலைவர் பெயரைச் சார்ந்தோ தலைவரின் ஊர்ப் பெயரைச் சார்ந்தோ குறவஞ்சி அமையும். குற்றாலக் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி என்பவை தலைவர் ஊர்ப் பெயரைச் சார்ந்தவை, மீனாட்சியம்மை குறம், சரபேந்திர பூபால குறவஞ்சி என்பவை தலைவர் பெயரைச் சார்ந்தவை.

நகர் உலா வரும் தலைவனைக் கண்டு தலைவி காதல் கொண்டு, நெஞ்சழிந்து, நாண் அழிந்து, நிறையிழந்து வருந்துவாள். உலா வந்தவனை உள்ளத்தில் இருத்தி அவனைச் சேரவேண்டும் என்று தவிப்பாள். அப்போது குறத்தி தோன்றி, தலைவியின் கைக்குறி கண்டு அவள் தலைவனைப் பெறுவது உறுதி எனக் கூறுவாள். தலைவி மகிழ்ந்து பரிசில் தருவாள். பெற்ற பரிசிலைக் குறத்தி சுமந்து செல்வாள். எதிரே குறத்தியைத் தேடிவந்த குறவன் அவளைக் கண்டு மகிழ்வான். இந்நிகழ்ச்சி களையெல்லாம் சுவைபட நாடக முறையில் சித்திரிக்கும் குறவஞ்சி நூல்.

குறவஞ்சி நூல்களுள் திருக்குற்றாலக் குறவஞ்சியே சிறப்பு மிக்கதாகும். இதனை இயற்றியவர் திரிகூட ராசப்பக் கவிராயர் ஆவார். திருக்குற்றால நாட்டை வருணிக்கும் ஆசிரியர் அந்நாட்டில் ஓடுவது பூம்புனல்

வெள்ளமே, ஒடுங்குவது யோகியர் உள்ளமே; வாடுவது நங்கையர் இடையே; வருந்துபவை முத்தை ஈனும் சங்குகளே; பூமியில் போடக் காண்பது நெல் வித்துக் களே; புலம்பி ஒலிப்பது மங்கையர் சதங்கையே; மக்கள் தேடுவது அறமும் புகழுமே; என்று கூறுகிருர். அப்பாடல் வருமாறு:

''ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக்காண்பது யோகியர் உள்ளம்
வாடக்காண்பது மின்னுர் மருங்கு
வருந்தக்காண்பது சூலுளை சங்கு
போடக்காண்பது பூமியில் வித்து
புலம்பக்காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக்காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற்ருலர் தென்ஆரிய நாடே''

அந்நாட்டை விட்டுப் பிழைப்புக்காக ஓடுவோர் யாரும் இல்லை; அங்கு ஒடுங்கியவர் இல்லை. மெலிவார் இல்லை; நலிவார் இல்லை; புலம்புவார் இல்லை. பொன் னும் பொருளும் விழைவோர் இல்லை; அறமும் புகழுமே வேண்டுவோர் உண்டு என்பனவற்றை யெல்லாம் இவ்வாறு அழகுபடக் கூறியுள்ளார்.

அந்நாட்டு மலைவளத்தில் உள்ளத்தைப் பறி கொடுக்கிருர் ஆசிரியர்.

''வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கொஞ்சும்''

''செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்''

இத்தகைய மலையில் குறத்திவாழ்கிருள். அதன் பெருமையை அவள்,

"காகமணு காமலேயில் மேகநிரை சாயும்"
"செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்"

எனப்பாடி மகிழ்கிருள்.

தலைவி வசந்தவல்லியின் அழகை வருணிக்கும் போது ஆசிரியரின் கைவண்ணம் மேலும் சிறப்புறு கிறது.

"இருண்டமேகம் சுற்றிச் சுருண்டு சுழிஎறியும்
கொண்டையாள் - குழை
ஏறிஆடி நெஞ்சைச் சூறைஆடும் விழிக்
கெண்டையாள்"

அன்ன நடையில் ஒரு சின்ன நடைபயிலும் அவ்வசந்த வல்லி பந்தாடுகிருள். அப்பைங்தொடி நாரி வசந்த ஒய்யாரியின் பந்தாட்டத்தின் விரைவினை விட விரைந்து ஓடுகிறது பைந்தமிழ்ப் புலவரின் சொல் லோட்டம்.

# கவிதை

சங்க காலத்தில் ஏற்றமும் எழிலும் பெற்று விளங்கிய கவிதை இலக்கியம் இந்நூற்றாண்டில் வளம்பெற வில்லை. அன்று எதற்கும் பாட்டுதான்; அழுதாலும் பாட்டு; வேலை செய்தாலும் பாட்டு ஏர்க்களத்திலும் பாட்டு; போர்க்களத்திலும் பாட்டு! இவ்வாறு வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பாடல் சிறந்து விளங்கிய காலம் அது. இன்று அந்த இடத்தை உரைநடை பிடித்துக் கொண்டது. மேல் நாட்டவர் கூட்டுறவால் அச்சுப்பொறி கண்ட பிறகு உரைநடை எல்லையில்லாமல் வளரத் தொடங்கியது. ஆகவே கவிதை மெல்ல மறையலாயிற்று. ஆயினும் கவிதை இலக்கியம் அறவே மறைந்து போய்விடவில்லை.

இந்த நூற்றாண்டில் தோன்றிய பாரதியார், பாரதி தாசன், தேசிகவிநாயகம் பிள்ளை, இராமலிங்கம் பிள்ளை ஆகியோர் சிறந்த கவிதைகளை இயற்றிக் கவிதை இலக்கியத்திற்குப் பெருந் தொண்டாற்றியுள்ளனர். எவ்வளவு முயன்றாலும் எல்லாரும் கவிஞர்களாகிவிட முடியாது. கவிதை ஒரு வரப்பிரசாதம்தான். சில ருக்கே அது வாய்க்கிறது.

கவிதைகளின் மறுமலர்ச்சிக்கு இந்த நூற்றாண்டில் பாரதியே காரணர். காலத்தின் தேவையை அறிந்து அவர் தம் கற்பனையைக் கவிதை வானில் உலவ விட்டார்; அவர் பாடிய பொருள் புதிது; சொல் புதிது; சுவை புதிது. சங்க காலத்தில் பாரதியைப் போன்ற புலவர்கள் தோன்றி நாட்டுப் பற்றூட்டும் பாடல்

களைப் பாடவில்லை. ஏனெனில் அன்று தமிழ் நாடு அடிமை நாடாக இருந்ததில்லை; பெண்ணுரிமை பற்றிப் பேசுவதற்கே தேவையில்லாத காலம் அது. ஆகவே உரிமைபெற்ற அந்தக் காலத்தில் பெண் கல்வியை ஒருவர் உணர்த்த வேண்டிய நிலையில்லாமற் போயிற்று. முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்களைப் பெற்ற அக்காலத்தில் பெண்கல்வியை வற்புறுத்த ஓர் ஆண்பாற் புலவர்க்கு வாய்ப்பு இல்லை.

சங்க காலத்திற்குப் பிறகு நிலைமை மாறியது. தமிழ் மன்னர் மறைந்தனர்; சங்கம் அழிந்தது. இலக்கியங்களிற் பல மறைந்தன. காலப்போக்கில் சமயப் பூசல் மலிந்தது. ஆகவே சமயப் பொறை ஏற்படுத்த பொதுமைப் பாடல்களும் முகிழ்த்தன. நாட்டுப்பற்று இருக்க வேண்டிய நம் மக்கட்குச் சாதிப்பற்றே நிலைத்திருந்தது. இதனால் ஏற்பட்ட தீமையைக் களைய ஒரு புலவர் தேவைப்படவே கிளர்ந்தெழுந்தார் பாரதியார்.

> "ஆயிரமுண்டிங்குச் சாதி – எனில்
> அன்னியர் வந்து புகலென்ன நீதி-ஓர்
> தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முட்
> சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ"

எனச் சாதிப் பிரிவினால் ஏற்பட்ட கொடுமையால் நாடு அடிமைப்பட்ட திறத்தைச் சுட்டிக்காட்டி மக்களைத் தெருட்ட முற்பட்டார். எனவே புதுக் குறைகளைப் பாடிய பாரதியார் புதுமைக் கவிஞரானார்.

அடிமை மிடியில் வீழ்ந்து கிடக்கும் தாய் நாட்டவர்க்கு எவ்வாறு நாட்டுப்பற்றை ஊட்டுவது எனப் பாரதியார் சிந்தித்தார்; அச்சிந்தனையில் பாரத நாட்டின் பழமை படர்ந்தது. ஞானத்தில், கானத்தில்,

வீரத்தில், ஈரத்தில், நன்மையில், வன்மையில், நோக்கத்தில், ஊக்கத்தில் உயர்ந்து பாருக்குள்ளே நல்ல நாடாக விளங்கிய பாரத நாடு ஏன் அடிமைப்பட்டது என எண்ணினர். முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும், மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும் சீர்தூக்கிப் பார்த்தார். அடிமை வாழ்வே தாழ்வுக்குக் காரணம் எனத் தெளிந்தார்; ஓராயிரம் ஆண்டு ஓய்ந்துகிடந்த நிலையை எண்ணி மனம் புழுங்கிப் பொங்கி எழுந்தார். விடுதலை! விடுதலை! விடுதலை! இதுவே பாரதியின் பெரும் முழக்கமாயிற்று. என்று தணியும் இந்தச் சுதந்திரதாகம் என விடுதலை வேட்கை கொண்டு மக்களிடையே அவ்வுணர்ச்சி தோன்ற கவிதைகளில் வீர முழக்கம் செய்தார். எனவே காலப்பசி தணிக்க ஏற்ற கவிதைகள் பெருகலாயிற்று. விடுதலை வீரர்களைப் போற்றிப் பாராட்டும் கவிதைகள் தோன்றின.

பாரத நாட்டு வீரர்களை அவர் முறைப்படுத்திப் போற்றிப் பரவுகின்ற பான்மை எண்ணி யின்புறத் தக்கது.

> "செந்தமிழ் நாட்டுப் பொருநர் - கொடுந்
> தீக்கண் மறவர்கள் சேரன்றன் வீரர்
> சிந்தை துணிந்த தெலுங்கர் - தாயின்
> சேவடிக் கேபணி செய்திடு துளுவர்
> கன்னடர் ஒட்டிய ரோடு — போரில்
> காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்
> பொன்னகர்த் தேவர்க ளொப்ப - நிற்கும்
> பொற்புடை யார்இந்து ஸ்தானத்து மல்லர்
> பூதலம் முற்றிடும் வரையும் - அறப்
> போர்விறல் யாவும் மறப்புறும் வரையும்
> மாதர்கள் கற்புள்ள வரையும் : பாரில்
> மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்"

எனப் பாரதியார் முழங்கும் முழக்கத்தைக் கேட்டு மயிர்க்கூச் செறியாதார் இருக்க முடியாது.

எதைப் பற்றிப் பாரதியார் பாடினலும் அதில் ஒரு தனிச் சிறப்பு-வேறெவரிடத்திலும் காணமுடியாத மேன்மை இருக்கும். திருக்குறளின் மேன்மையைப் பாட 'திருவள்ளுவமாலை' என்று ஒரு நூலே தோன் றிற்று. எனினும்,

> "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு."

என்று கூறும் பாரதியார் பாட்டுக்கு இணையாக அந் நூலுள் ஒரு பாட்டாவது உண்டா?

பாரதியார் பழைய இலக்கியங்களில் மிகுந்த பற் றுடையவர். அப்பழமைச் செல்வங்களின் எழிலைக் கண்டுணர்ந்து பாராட்டும் புலவர் அவ்விலக்கிய மாந் தரின் செயல்களைக் கண்டு மகிழவும், இகழவும் செய்வர். ஆயிரங்களான நீதிகளை உணர்ந்த மேலோனகிய தருமன் பாரதம் போற்றும் பண்பாளன். ஆயினும் நாட்டை வைத்து இழந்த அவனது செயலைச் "சீச்சீ! சிறியர் செய்கை செய்தான்" எனக் கூறி இகழ்ந்தார். வெறும் மாடு நிகர்த்த துச்சாதனன் திரௌபதியின் மைகுழல் பற்றித் தெருவழியே இழுத்து வருகிறன்; வேடிக்கை காண என்றும்போல் கூட்டம் அன்றும் கூடிவிட்டது. அக்கொடுமையைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தினரைச் சாடும் பாரதியார்,

> "வீரமிலா நாய்கள் விலங்கா மிளவரசன்
> தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே
> பொன்னை யவளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
> நெட்டை மரங்களென நின்று புலம்பினர்"

எனக் கூறி, அவர்களது கீழ்மையைக் கண்டு துடிக்கின்றார்.

எதிர்காலத்தை முன்னமேயே நெடிது நோக்கி அறியும் நீர்மை பாரதியின் தனித்திறம் எனக்கூறல் வேண்டும். இத்தகு திறன் புலவனின் தனிக்கூறு என்பதனை,

''மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்''

எனத் தொல்காப்பியமும் பாராட்டும். இந்த இலக்கணத்திற்குப் பேரிலக்கியமாகத் திகழ்ந்தவர் பாரதி யாரே யாவார். சுதந்திரம் கிடைப்பதற்கு முப்பது ஆண்டுகட்கு முன்னரே பாரதியார் விடுதலை கிடைத்து விட்டதாகவே பாடினார்.

''ஆடுவோமே – பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று...''

மேலும்,

''சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்''

என்று கவிஞர் என்றோ பாடினார்; இன்று சந்திரனை நோக்கி மனிதன் பறந்து கொண்டிருக்கிறான். இவ்வாறெல்லாம் எதிர்காலத்தைத் தெளிவாக உணர்ந்து கூறிய அவரது அறிவுத்திறம் வியக்கற்பாலது.

பாரதி ஓர் இலட்சியக் கவிஞன்; ஏதோ பொழுது போக்காகப் பாடியவர் அல்லர்; ''நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்'' என்பதே அவர் குறிக்கோள். அதில் அவர் இமைப்போதும் சோர்வுறாது திகழ்ந்தார். சிறுமைகளை வெறுத்தார்; அனைவர் வாழ்விலும் அவை தோன்றக்கூடாது என அறிவுறுத்

தினர். பெறற்கரிய பிறவியை நல்வழியில் பயன் படுத்துதல் வேண்டும் என்பது கவிஞரின் நல்லுரை.

"தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்
வாடப் பல செயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடும்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போல - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?"

முன்னேற வேண்டும் எனத் துடிப்பவர்கள் இப்பாட்டில் காணும் 'வேடிக்கை மனிதரைப்போல்' இருக்கக் கூடாது என்பதனைக் கவிஞர் மனம் கொள்ளுமாறு அமைத்த திறம் அவரது உயர்ந்த குறிக்கோளுக்கு நல்ல சான்றாகும்.

பாரதியின் கண்ணன் பாட்டும், குயில் பாட்டும், பாஞ்சாலி சபதமும் பொதிய மலை பிறந்த மொழி வாழ் வறியும் காலமெல்லாம் நிலைத்து நிற்கும் சிறப்புடையன.

பாரதிதாசன்: பாரதி தோற்றுவித்த கவிதையூற்று அவர் காலத்தோடு வற்றிப்போகவில்லை; அது தொடர்ந்து பெருக்கெடுத்தோடியது. தமிழ்த்தாய் வேறொரு புலவரைப் பெற்றெடுத்தாள். அவர் 'பாரதி தாசன்' எனப் பெயர் பெற்றார். பாரதி விட்டுச் சென்ற பணியை அவர் தொடர்ந்து செய்ய முற்பட்டு, 'ஏடா தம்பி எடடா பேனா' எனக் கூறிக் கவிதைத் தொழில் புரிந்து நாட்டுக்கு உழைத்தார். பாரதிதாச னின் சமுதாயச் சீர்திருத்தப் பாடல்கள் அவரைப் பாரதியோடு வைத்து எண்ணிப் போற்றுமாறு அமைந்துவிட்டன. அவரது கவிதைகளில் உணர்ச்சி

வெள்ளம் கங்கு கரையின்றித் தங்கு தடையின்றிப் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இயற்கையை வருணிப்பதில் இவருடைய பாடல்கள் சிறந்து விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக ஒன்றைக் காண்போம்

**"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து**
**நிலாவென்று காட்டுகின்ருய் ஒளிமுகத்தைக்**
**கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்**
**கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்**
**சோலையிலே பூத்தனிப் பூவோ! நீதான்**
**சொக்க வெள்ளிப் பாற்குடமோ! அமுத ஊற்ருே!**
**காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்**
**கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ!"**

இவருடைய கவிதைகள் "பாரதிதாசனின் கவிதைகள்" என்ற பெயரால் தொகுக்கப் பெற்றுள்ளன. 'பாண்டியன் பரிசு', 'குடும்ப விளக்கு', 'அழகின் சிரிப்பு' என்ற நூல்கள் இவர் பாடியவற்றுள் சிறந்தவை.

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை:** கவிமணியின் கவிதைகளில் வேகம்இராது. மென்மை இருக்கும். பாரதியார், பாரதிதாசன் ஆகியோருடைய பாடல்களில் கர்ஜிக்கும் சிங்கத்தின் குரலைக் கேட்கலாம்; ஆனுல் கவிமணியின் பாடலில் தவழ்ந்து செல்லும் குழந்தையின் மென்மையைக் கண்டு இன்புறலாம். இவருடைய சொந்தக் கவிதைகளைவிட மொழிபெயர்ப்புக்கள் சிறந்து விளங்குகின்றன. இவர் மொழிபெயர்த்த 'உமர்கய்யாம் பாடல்கள்' இதற்கு நல்லஎடுத்துக்காட்டாகும்.

காண்பாரின் கண்ணையும், கருத்தையும் கவரும் மென்மையான மலரின் கனவுகளையும் கண்ணீரையும் சித்திரிக்கும் அவருடைய பாடல் ஒன்று வருமாறு:

"அந்திச் சிவப்பினையும் — வான்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்ட மலர் — மணமே
செய்து திளைத்த மலர்
வீழ்ந்து கிடக்குதையே — உச்சி
வெய்யிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை மண்ணிலே
வரைந்துளதோ வண்டே"

கவிமணியின் பாடல்களை 'மலரும் மாலையும்' என்னும் தொகுப்பில் கண்டு இன்புறலாம்.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை: நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் பாடல்களுள் "கத்தியின்றி ரத்தமின்றி", "ஆடுராட்டே" முதலிய பாடல்கள் சிறப்பானவை. 'அவளும் அவனும்', 'தமிழன் இதயம்', 'கவிதாஞ்சலி', 'பிரார்த்தனை' ஆகிய நூல்களை அவர் இயற்றியுள்ளார்.

திரைப்படக் கவிஞர்களில் கண்ணதாசன் சிறந்து விளங்குகிருர். கவிதை என்பது எட்டாத ஒன்று என்ற நிலையை மாற்றிப் பாமரரும் புரிந்துகொள்ளுமாறு கவிதைகளை யாத்த பெருமை கண்ணதாசனுக்கு உண்டு.

பாரதி தோற்றுவித்த கவிதை ஊற்று வற்றிப் போகவில்லை என்பதை நினைவுபடுத்தும் வகையில் பல புதிய கவிஞர்கள் அவ்வப்போது எழுதித் தம் ஆற்றலை வெளியிடுகின்றனர். பழங்காலம் போல் கவிதை பரந்த எல்லையில் இல்லை யென்ருலும் அது மறைந்த நிலையில் இல்லை எனலாம்.

கிடைக்குமிடங்கள்:

பத்மா பதிப்பகம், 171, சரஸ்வதி தெரு,
மகாலிங்கபுரம், சென்னை-34.

P. T. பெல் & கம்பெனி, சென்னை-1.

கபாலி புக் சென்டர், மயிலாப்பூர்.

Wrapper printed at Soundara Printers, Madras-17.